01[ST]
DECEMBER
2024

www.uthayam.lk
# உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 02 | இதழ்: 59 | பக்கங்கள் - 18 | editor.uthayam@gmail.com



## இதயங்கள் நொருங்கிய அந்தக் கணம்...!

05 >>>

### மாவடிப்பள்ளி அனர்த்தம் பல்வேறு கோணத்தில் விசாரணை!

# உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் கள ஆய்வு





(பாறுக் ஷிஹான்)

மாவடிப்பள்ளி அனர்த்தம் இடம்பெற்ற பகுதிக்கு விஜயம் செய்து விபத்து குறித்த விசாரணைகளை உதவிப் பொலிஸ்

02ம் பக்கம்பார்க்க...

# பலஸ்தீன் மக்களின் போராட்டத்துக்கு அரசாங்கம் தொடர்ந்தும் ஆதரவு

### ஐ.நா.வின் பலஸ்தீன் ஆதரவு செய்தியில் ஜனாதிபதி அனுர உறுதி!



பாலஸ்தீன மக்களின் துயரங்கள் ஏற்றுக்கொள்ள முடியாதவை என ஜனாதிபதி அனுரகுமாரதிசநாயக்க தெரிவித்துள்ளார்.

பாலஸ்தீன மக்களிற்கான ஐக்கிய நாடுகளின் ஆதரவு தினத்தை குறிக்கும் விதத்தில் வெளியிட்டுள்ள செய்தியில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

பாலஸ்தீன பகுதிகளிலும் மேற்குஆசியாவிலும் ஒருவருடத்திற்கு

02ம் பக்கம்பார்க்க...

# இடை நடுவில் நிறுத்தப்பட்ட அபிவிருத்திப் பணிகளை முன்னெடுங்கள்!

### ஜப்பான் தூதுவரிடம் எதிர்க் கட்சித் தலைவர் வேண்டுகோள்!



எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும் ஜப்பான் தூதுவர் அகியோ இசோமடாவுக்கும் (Isomata Akio) இடையிலான சந்திப்பொன்று இன்று (01)

02ம் பக்கம்பார்க்க...

# உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பெப்.15 க்கு முன் நடாத்த வேண்டும்

### முன்னாள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய!



2025ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று முன்னாள் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் மகிந்த தேசப்பிரியதெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் குறிப்பிடுகையில்,

உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பின் பிரகாரம்

02ம் பக்கம்பார்க்க...

# ஐ.ம.சக்தி செயலாளர் போன்று தவிசாளர் இம்தியாஸையும் எம்.பீ.ஆக்கவும்!

### அரசியல் ஆய்வாளர் தயான் ஜயதிலக்க கோரிக்கை!



ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய பட்டியலில் கட்சியின் செயலாளரை நியமித்தது போன்று கட்சியின் தவிசாளரான இம்தியாஸ் பாக்கிர் மாக்காரும் நியமிக்கப்பட வேண்டும். பாக்கிர் மாக்காரை நியமிக்காது தோல்வி அடைந்தவர்

02ம் பக்கம்பார்க்க...

# பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வாகனங்கள் வழங்க மாட்டோம்

### அரசாங்கம் உறுதியான தீர்மானம்

அரசாங்கக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வாகனங்கள் வழங்கும் தீர்மானத்தை கைவிடுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

வாகனங்களுக்கு பதிலாக எரிபொருளை மட்டும் வழங்குவதற்கு

14ம் பக்கம்பார்க்க...

# அடுத்த வருட ஆரம்பத்தில் அதிக ஆசிரியர் நியமனங்கள்

### 4500 ஆசிரியர்களுக்கு இடமாற்றம்!

அரசாங்கம், ஆசிரியர் நியமன பற்றாக்குறையை தீர்ப்பதற்காக 2600 ஆங்கில ஆசிரியர்களை நியமிக்க உள்ளது. அநேகமான ஆசிரியர்கள் வெளிநாடு சென்றிருப்பதன் காரணமாக அவர்களது வெற்றிடத்தை பூர்த்தி செய்யும் வகையிலேயே இந் நியமனங்கள் வழங்கப்படவுள்ளன. மேலும் 4,700 ஆசிரியர்கள் க.பொ.த. உயர்தர பரீட்சையில் சித்தி அடைந்தவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட உள்ளனர். ஆசிரியர் சேவையில் இருந்து 4200 ஆசிரியர்கள் அதிபர் சேவைக்கு இணைந்துள்ளதனால் இந்த ஆசிரியர்கள் அந்த வெற்றிடங்களுக்கு நியமிக்கப்பட உள்ளனர்.

அதேநேரம் கல்வி கல்லூரிகளில் இருந்து

14ம் பக்கம்பார்க்க...

# குடியுரிமை திருத்த,வக்பு சட்டத்தில் கை வைக்கும் இந்திய அரசு

### இந்திய முஸ்லிம் லீக் போர்க்கொடி!

### நாடு முழுவதும் கண்டன ஆர்ப்பாட்டத்துக்கு அழைப்பு!!

(திருச்சி சாஹுல் ஹமீட்)

திருச்சி காசி, மதுரா, உ.பி. சம்பல் மஸ்ஜித், அஜ்மீர் தர்கா என முஸ்லிம்களின்

03ம் பக்கம்பார்க்க...




அமானா வங்கியில்
வாகன நிதியுதவி

உங்கள் வாகனத்துக்குரிய சாவியை
மிகவும் மலிவான மாதாந்த தவணைகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 1,933/-
ரூ.100,000க்கு வாடகை*

- குறைந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரை மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி
Amãna Bank

## மாவடிப்பள்ளி...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

தலைமையில் இன்று முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அம்பாறை மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜே.எச்.எம்.என் ஜயபத்ம ஆலோசனைக்கமைய கல்முனை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ரீ. எச். டி .எம். எல். புத்திகவின் வழிகாட்டலில் குறித்த விசாரணைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.டி.எஸ் ஜெயலத் தலைமையிலான பொலிஸ் குழுவினர் விசாரணை நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர். அத்துடன் காரைதீவு பொலிஸ் நிலைய போக்குவரத்து பொலிஸார் உத்துழைப்புகளை வழங்கி வருகின்றனர்.

அப்பகுதியில் வெள்ள நிலை ஏற்பட்ட போது சுமார் 5 அடிக்கும் அதிகமான உயரத்தில் வெள்ளம் சென்றுள்ளதாகவும் மாணவர்களை ஏற்றி வந்த உழவு இயந்திரம் சுமார் 150 மீற்றர் இயந்திரத்துடன் இணைப்பை துண்டிக்கக் கூடிய வகையில் பெட்டி வேறாக பயணித்திருக்க கூடும் என்ற கோணத்தில் பல்வேறு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இது தவிர விபத்து நடைபெற்ற போது அங்கு என்ன நடந்தது யார் யார் பயணித்தார்கள் போன்ற கேள்விகள் தொடுக்கப்பட்டு மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.கடந்த 26.11.2024 செவ்வாய்க்கிழமை அன்று நிந்தவூரில் இருந்து சம்மாந்துறை நோக்கிச் சென்ற 12 பேரை ஏற்றிச் சென்ற உழவு இயந்திரம் விபத்திற்குள்ளானமை யாவரும் அறிந்ததே.இதன்போது நிந்தவூர் காஷிபுல் உலூம் அறபுக் கல்லூரியிலிருந்து சம்மாந்துறைக்கு விடுமுறையில் சென்ற மாணவர்கள் இச்சம்பவத்தில் பாதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் இதுவரை மொத்தமாக 08 சடலங்கள் மீட்புப் குழுவினரால் மீட்கப்பட்டு சம்மாந்துறை ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டு குறித்த சடலங்கள் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி அப்துல் ஹமீட் அல் ஜவாஹீர் மேற்கொண்டிருந்தார்.

பின்னர் மரண விசாரணைகள் முடிக்கப்பட்டு குடும்பத்தினரிடம் சடலங்கள் கையளிக்கப்பட்டன.

இந்த மீட்பு நடவடிக்கையில் சடலங்களாக முகமட் ஜெசில் முகமட் சாதீர்(வயது-16), அப்னான், பாறுக் முகமது நாஸிக்(வயது-15) ,சஹ்ரான்(வயது-15),அலியார் முகமது யாசீன்(வயது-15), தஸ்ரிப், 6 மத்ரசா மாணவர்களும் உழவு இயந்திர சாரதி உதுமாலெப்பை முகமது அகீத்(வயது-17) ,பொது மகன் கல்முனை புகை பரிசொதனை நிலைய ஊழியர் அஸ்மீர்(வயது-தெரியவரவில்லை) உள்ளடங்குவர். குறிப்பாக இத்தேடுதலில் மேலதிகமாக இராணுவம் விசேட அதிரடிப்படை பொலிஸார் பங்கேற்றுள்ளதுடன் சாய்ந்தமருது ஜனாசா நலன்புரி மக்கள் பேரவை மாளிகைகாடு ஜனாசா நலன்புரி அமைப்பு காரைதீவு தொண்டர்கள் இன மத வேறுபாடு இன்றி தன்னார்வ இளைஞர் குழுவினரும் ஈடுபட்டிருந்தனர்.

## பலஸ்தீன்...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

மேலாக நீடித்துவரும் பொதுமக்களின் உயிரிழப்புகளும் தொடரும் அழிவுகளும் ஏற்றுக்கொள்ள முடியாதவை சகித்துக்கொள்ள முடியாதவை என அவர் தெரிவித்துள்ளார்.

பாலஸ்தீன மக்களிற்கான இலங்கையின் ஆதரவை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ள ஜனாதிபதி பல தசாப்தங்களாக பாலஸ்தீனியர்கள் துன்பங்களை அனுபவிக்கின்றனர் என்பதை ஏற்றுக்கொண்டுள்ளார்.

பல சர்வதேச மன்றங்களில் இலங்கை காசாவின் மனிதாபிமான நிலை குறித்து ஆழ்ந்த கரிசனையை வெளியிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

உடனடி யுத்த நிறுத்தத்திற்கு இலங்கை அழைப்பு விடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பாலஸ்தீனியர்களின் போராட்டத்திற்கான ஆதரவிலிருந்து இலங்கை பின்வாங்ககூடாது என்பதை பாலஸ்தீனியர்களிற்கான ஐநா தினம் வெளிப்படுத்துகின்றது என தெரிவித்துள்ள அவர் சர்வதேச சட்டம் சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான அமைதியான சமத்துவ தீர்வை காண்பதை சர்வதேச சமூகம் கைவிடக்கூடாது எனவும் தெரிவித்துள்ளார்.

இந்த நெருக்கடி ஆபத்தான விதத்தில் தீவிரமடைந்துள்ளமையும், சர்வதேச அளவில் அதன் தாக்கமும்,பாலஸ்தீனர்களின் பிரச்சினைக்கு தீர்வை காண்பதற்காக ஏழு தசாப்தங்களாக மேற்கொள்ளப்படும் முயற்சிகளை மேலும் அவசியமானவையாக மாற்றியுள்ளன என அவர் தெரிவித்துள்ளார்.

பாலஸ்தீனியர்களிற்கான ஐநாவின் நிவாரண முகவர் அமைப்பிற்கு எதிரான அச்சுறுத்தல் குறித்து கருத்து தெரிவித்துள்ள ஜனாதிபதிஅகதிகளின் வாழ்வை தாங்கிப்பிடித்த மனிதாபிமான சேவை வீழ்ச்சியடையும் நிலையில் உள்ளமை ஏமாற்றமளிக்கின்றது எனவும் தெரிவித்துள்ளார்.

## இடை...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

கொழும்பில் இடம்பெற்றது.

ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையில் நீண்ட காலமாக இருந்து வரும் இராஜதந்திர உறவை தொடர்ந்தும் பேணுமாறும், இதற்கு தன்னால் முடிந்த பங்களிப்பை பெற்றுத் தருவதாகவும் இதன்போது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஜப்பான் தூதுவரிடம் தெரிவித்தார்.

அவ்வாறே, கடந்த காலங்களில் ஜப்பானினால் இலங்கையில் முன்னெடுத்து வரப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களை மீள ஆரம்பிக்குமாறும், இதற்குத் தேவையான பூரண ஆதரவை எதிர்க்கட்சியில் இருந்து கொண்டு தாம் வழங்குவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் இங்கு மேலும் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியைப் பிரதிநிதித்துவப்படுத்தி பாராளுமன்ற உறுப்பினர் வைத்தியர் காவிந்த ஜயவர்தன அவர்களும் இச்சந்திப்பில் கலந்து கொண்டார்.

## ஐ.ம.ச...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

எவரையாவது நியமித்தால் கட்சி மேலும் வீழ்ச்சி அடையும் என முன்னாள் தூதுவரும் பிரபல அரசியல் விமர்சகருமான தயான் ஜயதிலக தெரிவித்துள்ளார். ஐக்கிய மக்கள் சக்தியின் தோல்வி பற்றி ஊடகம் ஒன்றுக்கு அளித்துள்ள பேட்டியிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஐக்கிய மக்கள் சக்தி இணைவதானது கட்சி மேலும் வீழ்ச்சியை நோக்கி செல்ல வழிவகுக்கும். வலதுசாரிகள் என்று முகாமிட்டு வருகை தந்தவர்கள் ஒருபோதும் தேர்தலில் வெற்றி பெற்றதில்லை என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

## உள்ளூராட்சி...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

உள்ளூராட்சி மன்ற தேர்தலை உடனடியாக நடத்த வேண்டிய தேவை காணப்படுகின்றது. உள்ளூராட்சி மன்ற தேர்தலை நடத்துவதற்கு ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்களினால் எந்தவொரு நன்மையும் இல்லை.

ஏனெனில் குறித்த வேட்பு மனுக்கள் 2022 ஆம் ஆம் ஆண்டில் கோராப்பட்டவை. தற்போது 2 வருடங்கள் முற்றாக கடந்துள்ளது. எனவே பழைய வேட்பு மனுக்களின் ஊடாக உள்ளூராட்சிமன்ற தேர்தலை எதிர்கொள்ளும் போது இளம் பிரதிநிதித்துவத்திற்கான வாய்ப்பு இழக்கப்படுகின்றது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் மகிந்த தேசப்பிரியவின் முக்கிய அறிவிப்பு ; டுழஉயட புழளநசஅெநவெ நுடநஉவழைெ ளுசை டுயமெய

2023 தேர்தல் சட்டவிதிமுறைகளின் பிரகாரம் வேட்புமனுக்களில் 35 வயதுக்கு குறைந்த இளம்பிரதிநிதித்துவம் நூற்றுக்கு 25 வீதமாக காணப்பட வேண்டும் என்ற யோசனை திட்டம் நிறைவேற்றப்பட்டு சட்டமாக நடைமுறைப்படுத்தப்பட்டது.

எல்பிட்டிய உள்ளூராட்சி மன்ற தேர்தலிலும் இந்த முறைமை பின்பற்றப்பட்டது. எனவே பழைய வேட்புமனு இரத்து செய்யப்பட்டு புதிய வேட்புமனு கோரப்பட்டு எதிர்வரும் ஆண்டு பெப்ரவரி 15 ஆம் திகதிக்கு முன்னதாக உள்ளூராட்சி மன்ற தேர்தல் நடத்தப்பட வேண்டும் என தெரிவித்துள்ளார்.






# அல்குர்ஆன் உங்கள் இதயத்துடன் பேசுகிறது....

(இப்னு தவ்பீக் ஆலீம்)

### மேலாடைகளைக் களைவதில் கிழவிகளின் நிலை

"விவாக விருப்பமற்ற முதிர்ந்த வயதுடைய (நடமாட முடியாது உட்கார்ந்தே இருக்கக் கூடிய) கிழவிகள் தங்கள் அழகைக் காண்பிக்க வேண்டுமென்ற நோக்கமின்றித் தங்கள் மேலாடைகளைக் களைந்து விட்டிருப்பதில் அவர்கள் மீது குற்றமில்லை. இதனையும் அவர்கள் தவிர்த்துக் கொள்வதே அவர்களுக்கு மிக்க நன்று. அல்லாஹ் யாவரையும் செவியுறுவோனும்நன்கறிந்தோனுமாக இருக்கின்றான்." (24:60)

### நன்றி மிக்க அடியாரின் அடையாளம்

"ரஹ்மானுடைய (நன்றி மிக்க) அடியார்கள் (எவரென்றால்) பூமியில் (அடக்கமாகவும்) பணிவாகவும் நடப்பார்கள். மூடர்கள் அவர்களுடன் தர்க்கித்து முரண்பட்டால், சலாமுன் என்று கூறி (அவர்களை விட்டு விலகி) விடுவார்கள்" (25:63)

"அன்றி அவர்கள் தங்கள் இறைவனை நின்றவர்களாகவும், சிரம் பணிந்தவர்களாகவும் இரவெல்லாம் வணங்கிக் கொண்டிருப்பார்கள்." (25:64)

"தவிர அவர்கள் எங்கள் இறைவனே நரகத்தின் வேதனையை எங்களை விட்டுத் தடுத்துக் கொள்வாயாக. ஏனென்றால் அதன் வேதனையானது நிச்சயமாக நிலையான துன்பமாகும் என்று பிரார்த்தனை செய்து கொண்டேயிருப்பார்கள்." (25:65)

"அன்றி அவர்கள் செலவு செய்தால் அளவைக் கடந்துவிட மாட்டார்கள். உலோபித்தனமும் செய்ய மாட்டார்கள்.

இதற்கு மத்திய தரத்தில் இருப்பார்கள்." (25:67)

"அன்றி அவர்கள் அல்லாஹ்வுடன் வேறெவரையும் ஆண்டவன் என்று அழைக்க மாட்டார்கள். அல்லாஹ் (கொலை செய்யக் கூடாது என்று தடுத்திருக்கும் எம்மனிதனையும்) அவர்கள் நியாயமின்றிக் கொலை செய்து விடவும் மாட்டார்கள். விபச்சாரமும் செய்யமாட்டார்கள். ஆகவே எவனேனும் இவைகளைச் செய்ய முற்பட்டால் அவன் அந்தப் பாவத்துக்குரிய தண்டனையை அடைய நேரிடும்." (25:68)

### வாழ்க்கைத் துணை அவசியமா?

"(ஆணாயினும் பெண்ணாயினும்) உங்களில் எவருக்கும் வாழ்க்கைத் துணை இல்லாவிட்டால், அவர்களுக்கு திருமணம் செய்து விடுங்கள். (அவ்வாறே வாழ்க்கைத் துணையில்லாத) உங்களை அடிமைகளில் உள்ள நல்லோருக்கும் திருமணம் செய்துவிடுங்கள். அவர்கள் ஏழைகளாக இருந்தாலும், அல்லாஹ் தன்னுடைய அருளைக் கொண்டு அவர்களைச் சீமானாக்கி வைப்பான். (கொடை கொடுப்பதில்) அல்லாஹ் மிக்க விசாலமானவனும் (மனிதர்களின் நிலைமையை) நன்கறிந்தோனுமாக இருக்கின்றான்." (24:32)

"(துரித்திரத்தினால்) திருமணம் செய்யச் சக்தியற்றோர், அல்லாஹ் தன்னுடைய அருளைக் கொண்டு (அவர்களுடைய

தரித்திரத்தை நீக்கி) பொருளைக் கொடுக்கும் வரையில் அவர்கள் (நோன்பு நோற்றுக் கொண்டு) உறுதியாகத் தங்கள் கற்பைக் காத்துக் கொள்ளவும்" (24:33)

### பாவமும் பரிசுத்தமும்

அல்லாஹ் நாடியிருந்தால் உங்கள் யாவரையும் ஒரே (மார்க்கத்தைப் பின்பற்றும்) சமுதாயத்தினராக ஆக்கியிருப்பான். எனினும் (அவன்) தான் நாடியவர்களை (அவர்களுடைய பாவத்தின் காரணமாகத்) தவறான வழியில் விட்டுவிடுகிறான். தான் நாடியவர்களை (அவர்களின் பரிசுத்தத் தன்மையின் காரணமாக) நேரான வழியில் செலுத்துகிறான். நீங்கள் செய்து கொண்டிருந்த செயல்களைப் பற்றி நிச்சயமாக நீங்கள் (மறுமையில்) கேட்கப்படுவீர்கள்" (16:93)

### அழகான கூலி

"உங்களிடமுள்ள (பொருள்கள் யாவும் செலவழிந்து விடும் அல்லாஹ்விடத்திலுள்ளவைகளோ (என்றென்றும்) நிலைபெற்றிருக்கும். எவர்கள் கஷ்டங்களை (உறுதியாகச்) சகித்துக் கொள்கிறார்களோ அவர்கள் (செய்யும் பல காரியங்களுக்கு அவர்கள்) செய்ததை விட மிக்க அழகான கூலியையே நிச்சயமாக நாம் அவர்களுக்குக் கொடுப்போம்."" (16:96)

### இம்மையில் நல்வாழ்வு வாழ வழி

"ஆணாயினும் பெண்ணாயினும் விசுவாசம் கொண்டு நற்கருமங்களை எவர் செய்தாலும் நிச்சயமாக நாம் அவர்களை (இம்மையில்) நல்ல வாழ்க்கையாக வாழச் செய்வோம். அன்றி மறுமையிலோ அவர்கள் செய்து கொண்டிருப்பதைவிட மிக்க அழகான கூலியையே நிச்சயமாக நாம் அவர்களுக்குக் கொடுப்போம்." (16:97)

### ஷைத்தானின் தீங்கிலிருந்து

"(நபியே) நீர் குர்ஆனை ஓத ஆரம்பித்தால் (அதற்கு முன்னதாக,) விரட்டப்பட்ட ஷைத்தானை விட்டுக் காக்கும்படி அல்லாஹ்விடம் கோரிக் கொள்ளும்." (16:98)

"எவர்கள் விசுவாசங் கொண்டு தங்கள் இறைவனை முற்றிலும் நம்பியிருக்கிறார்களோ அவர்களிடத்தில் நிச்சயமாக (இச்) ஷைத்தானுக்கு யாதோர் அதிகாரமும் இல்லை."" (16:99)

"எவன், அல்லாஹ்வையும், அவனுடைய தூதரையும் (உண்மையாகவே) விசுவாசம் கொள்ளவில்லையோ, (அவன், நிராகரிப்பவன் தான் ஆகவே) அத்தகைய நிராகரிப்போனுக்கு நரகத்தையே நிச்சயமாக நாம் சித்தப்படுத்தி வைத்திருக்கின்றோம்." (48:13)

### தீர விசாரணை செய்து கொள்ளுங்கள்

துச்சித்துக் கனலைப்பட வேண்டிய நிலை

"விசுவாசிகளே! தீயவன் எவனும் உங்களிடம் யாதொரு செய்தியைக் கொண்டுவந்தால், (அதன் உண்மையை அறியும் பொருட்டு அதனைத்) தீர விசாரணை செய்துகொள்ளுங்கள்.(இன்றேல்,) அவனுடைய சொல்லை நம்பி அறியாமையால் நீங்கள் யாதொரு ஜனங்களுக்கு தீங்கிழைத்துவிட்டுப் பின்னால் நீங்கள் செய்தவைகளைப் பற்றி நீங்களே தர்க்கித்துக் கவலைப்படும்படியும் நேர்ந்துவிடும்." (49:6)

"விசுவாசிகளே (யாவரும் நிச்சயமாக சகோதரர்களே! ஆகவே உங்கள் சகோதரர்களுக்கிடையில் (ஒழுங்கையும், சமாதானத்தையும் நிலைநிறுத்தி) சுமுகமாக இருங்கள். இதில் அல்லாஹ்வுக்குப் பயந்து நடவுங்கள். (இதனால்) அவனுடைய கிருபையைப் பெறலாம்." (49:10)

"நிச்சயமாக அல்லாஹ் வானங்களிலும், பூமியிலும் உள்ள இரகசியங்களை நன்கறிந்தவன். ஆகவே நீங்கள் செய்பவைகளையும் அல்லாஹ் உற்றுநோக்குபவனாக இருக்கின்றான்." (49:18)

## குடியுரிமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழிப்பாட்டுத்தலங்களை கைப்பற்ற நினைக்கும் பாசிச சக்திகளின் சதித்திட்டத்தை முறியடிக்க இந்தியா முழுவதும் அனைத்து

மாநில தலைநகரங்களிலும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்த வேண்டும் என்று இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் 01.12.2025 ஞாயிற்றுகிழமை விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

வேதாளம் மீண்டும் முருங்கைமரம் ஏறுகிறது! - இப்படி ஒரு பழமொழி தமிழகத்தில் வழங்கி வருகிறது. வேதாளம் என்றால் பேய், பூதம், முனி என்பார்கள். முருங்கை மரத்தில் எது ஏறினாலும் சரசரவென ஒடிந்து விழுந்து விடும் ! ஆனால் இந்தப் பேய், பிசாசு, முனி, பூதம் எதுவும் முருங்கையில் ஏறினால் மரம் முறியாது! ஆனால் அது மரத்தில் குந்தி, தான் செய்ய வேண்டிய அனைத்து குதர்க்கங்களையும் - குழப்பங்களையும் - கொடுமைகளையும்

பிறர் அறியாதவாறு செய்து தீவினையை விளைவிக்கும்.

இந்த உதாரணம், தேசத்தில் பாரதீய ஜனதா கட்சியினரும், அவர்களின் ஆட்சியாளர்களும், ஒன்றியத்திலும் மாநிலங்களிலும் அமர்ந்து கொண்டு தாம் நினைக்கும் அனைத்து அதிமிதிகளையும் தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

பிரதமர் நரேந்திர மோடி நாட்டில் நடந்த நாடாளுமன்றத் தேர்தல் பரப்புரையில் மாண்புமிகு பிரதமர் நரேந்திர மோடி அவர்கள், 135 கூட்டங்களில் கலந்து கொண்டார். அவற்றில் 110 கூட்டங்களில் இந்திய முஸ்லிம் சிறுபான்மையினரை இழுத்தும், தீண்டியும், தூ ண்டியும், தாக்கியும், இல்லாதது சொல்லாதது சொல்லி வசைபாடியும் உரை நிகழ்த்தினார் என ஆய்வே நடத்தியிருக்கிறார்கள்.

சிறுபான்மையினரை விரோதித்து பேசிவரும் உள்துறை அமித்ஷா இந்திய உள்துறை அமைச்சர் மாண்புமிகு அமித்ஷா அவர்கள் பேசிய கூட்டங்களில் எல்லாம் சிறுபான்மை முஸ்லிம்களை விரோதித்தே பேசி வந்திருக்கிறார்.

பாரதீய ஜனதா கட்சியின் தேசிய தலைவர்கள் இவ்வாறு ஒரு சார்பின் பிரச்சாரத்தைத் தொடர்ந்து செய்வதால், அது மாநிலங்களிலும் அவ்வப்போது எதிரொலிக்கிறது. உத்திர பிரதேசம், உத்தராகண்டு, அஸ்ஸாம் போன்ற மாநில முதலமைச்சர்கள் தங்களின் பேச்சுக்கள் அனைத்துமே வெறுப்பு அரசியலாகத் தெரியும்படியே சிறுபான்மையினர் வெறுப்பைக் கக்கி வருகின்றனர்.

குடியுரிமை திருத்தச்சட்டம் - வக்பு சட்டத்திருத்த மசோதா குடியுரிமைத் திருத்தச் சட்டம் ஒரு குழப்பத்தை ஏற்படுத்தியது. பின்னர் காஷ்மீருக்கு இருந்த சிறப்பு அந்தஸ்து நீக்கம் செய்து கொந்தளிப்பை ஏற்படுத்தினர். வக்பு திருத்தச் சட்ட மசோதா மூலம் நாடு முழுவதும் முஸ்லிம்களுக்கு எதிராக கிராம மக்களைத் தூண்டி விடும் ஆகிலாயத்தைச் செய்து வருகின்றனர்.

மதரஸா கல்விக்கூடங்கள் இவற்றுடன் தங்களின் வெறுப்பு அரசியலை நிறுத்தவில்லை. நாட்டில் உள்ள பிரசித்தமான காசி, மதுரா மஸ்ஜிதுகள் பற்றிய அவதூறுகளைப் பரப்பினர். மஸ்ஜித் வளாகங்களில் நடத்தப்படும் மதரஸா கல்விக் கூடங்களை இழுத்து மூடுவதற்கு அரசு உத்தரவு பிறப்பித்தனர். உச்சநீதிமன்றம் தலையிட்டு அதைத் தடுத்து நிறுத்தி இருக்கிறது.

சம்பல் நகரில் நடந்த ஜனநாயக விரோத நடவடிக்கைகளைக் கண்டித்து சேலத்திலும், தஞ்சாவூரிலும் இந்திய யூனியன் முஸ்லிம் லீகினர் 29-11-2025 வெள்ளிக்கிழமை ஜும்ஆ தொழுகைக்குப் பிறகு மிகப் பெரும் ஆர்ப்பாட்டத்தை நடத்திக் காட்டியிருக்கிறார்கள்.

பாண்டிச்சேரியில் சர்வ கட்சிகளையும் ஒன்று சேர்த்து பாண்டிச்சேரி இ யூ மு. லீக் மிகப் பெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தை 29-11-2024 இல் நடத்தி இருக்கிறது.



www.uthayam.lk
உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2024 DECEMBER 01 - SUNDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

# அனைவரையும் அரவணைத்து செல்வது அரசின் பொறுப்பு

ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்ற தேசிய மக்கள் சக்தி பாராளுமன்றத் தேர்தலிலும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் வெற்றி பெற்று மிகப் பலமான அரசாங்கம் ஒன்றை அமைத்துள்ளது.

வளமான நாடு அழகான வாழ்க்கை என்ற தனதொனிப் பொருளில் பிரச்சாரங்களை மேற்கொண்ட ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தலைமையிலான இக்கட்சி வெற்றி பெற்றமையானது தேசத்தை மீள கட்டியெழுப்ப வேண்டும் என்று கனவு கண்டோருக்கு புத்துயிர் அளித்துள்ளது.

ஊழல் மோசடிகளற்றஇ சகல இனங்களும் அச்சமின்றி, புரிந்துணர்வோடும் ஐக்கியத்தோடும் வாழக்கூடிய தேசமொன்றை கட்டியெழுப்புவதற்காக வேண்டி அரச அதிகாரத்தை கேட்ட தேசிய மக்கள் சக்திக்கு மக்கள் மிகத் தெளிவான ஒரு ஆணையை வழங்கியுள்ளனர். இலங்கை சுதந்திரம் அடைந்த காலம் தொட்டு, மாறி மாறி ஆட்சிக்கு வந்த கட்சிகள் செய்த தவறுகளை விமர்சித்து வந்த மக்கள் விடுதலை முன்னணியும், அதனை அடியொட்டி அமைக்கப்பட்ட தேசிய மக்கள் சக்தியும் சகல விதத்திலும் முன்மாதிரியான அரசாங்கம் ஒன்றை தோற்றுவிப்பதற்கும் அதனை அடியொட்டி நாட்டை கட்டியெழுப்புவதற்கும் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளன.

வழக்கமாக தேர்தல்களில் வெற்றி பெற்று வந்த சம்பிரதாய அரசியல் கட்சிகளை புறந்தள்ளி விட்டு வெறுமனே மூன்று சதவீதம் மக்கள் ஆதரவினை பெற்றிருந்த மக்கள் விடுதலை முன்னணிக்கும் தேசிய மக்கள் சக்திக்கும் மக்கள் பெரும்பான்மையாக ஆதரவளித்து ஆட்சி பீடம் ஏற்றியமை மக்கள் இவர்கள் ஊடாக நாட்டில் பெரும் மாற்றத்தை எதிர்பார்க்கின்றார்கள் என்பதையே எடுத்துக்காட்டுகிறது.

சுதந்திரம் அடைந்த காலம் தொட்டு மாறி மாறி பதவிக்கு வந்த அரசாங்கங்களின் பிழையான கொள்கைகள்இ அணுகுமுறைகள் காரணமாக நாடு பல விதத்திலும் நலிவடைந்தது.

சமூக கலாச்சார ரீதியாக மக்களும் பின்னோக்கி தள்ளப்பட்டனர்.

இந்த நிலையை முற்றிலும் மாற்றிஇ இதுவரை காலமும் கடைப்பிடித்து வந்த சம்பிரதாய முறைமைகளை புறம் தள்ளிவிட்டு நாட்டை முன்னோக்கி செலுத்த வேண்டும் என்பதே மக்களின் பெரும் எதிர்பார்ப்பாகும்.

இந்த முறை முஸ்லிம்கள் வழக்கத்துக்கு மாற்றமாக தேசிய மக்கள் சக்திக்கு பெருவாரியாக ஆதரவளித்து இந்த அரசாங்கத்தை பதவியில் அமர்த்துவதற்கு கூடிய பங்களிப்பினை வழங்கினர்.

பொதுவாக தேர்தல் காலங்களில் முஸ்லிம் கட்சிகள் இதேசிய கட்சிகளுடன் புரிந்துணர்வு உடன்படிக்கைகள் மூலமாக நிபந்தனைகளின் அடிப்படையில் தேர்தல் களத்தில் குதிப்பது வழக்கம் .

இதற்கு மாற்றமாக இத்தடவை முஸ்லிம்கள் நிபந்தனையற்ற முறையில் தேசிய மக்கள் சக்திற்கு ஆதரவளித்தனர் .

தேசிய நலன்களை கருத்தில் கொண்டு மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு முழு ஆதரவினை வழங்க மக்கள் பெருவாரியாக வாக்களித்தனர்.

காலாகாலமாக முஸ்லிம் சிறுபான்மை கட்சிகளின் கோட்டைகளாக இருந்த பல முஸ்லிம் பிரதேசங்களில் தேசிய மக்கள் சக்திக்கு பெரும் வரவேற்பு கிடைத்தது.

தேசிய அரசியல் நீரோட்டத்தில் சேர்ந்து பயணிக்கக் கிடைத்த ஒரு சந்தர்ப்பமாக கருதி, எத்தகைய முன் நிபந்தனைகளும் இன்றி இந்த அரசாங்கத்தை பதவி ஏற்றுவதற்காக வேண்டி தமது பங்களிப்பை செய்தனர்.

எனினும் புதிதாக அமைக்கப்பட்ட அமைச்சரவையில் முஸ்லிம்களின் பிரதிநிதித்துவம் இல்லை என்ற அடிப்படையில், தாம் இந்த அரசாங்கத்தின் மூலம் ஒதுக்கப்பட்டுவிட்டோமா என சிந்திக்க துவங்கியுள்ளனர்.

அமைச்சரவை நியமிப்பின் போது இன அடிப்படையில் சிந்திக்கவில்லை என அரசாங்கம் திட்டவட்டமாக கூறிய போதிலும் முஸ்லிம்கள் வேண்டுமென்று புறக்கணிக்கப்பட்டார்கள் என்று முஸ்லிம்கள் மத்தியில் பரவலாக பேசப்படுகின்றது.

பெரு மாற்றத்தையும் பொருளாதார சுபீட்சத்தையும் இன ஐக்கியத்தையும் எதிர்பார்த்து வாக்களித்த முஸ்லிம்கள் ஏதோ வகையில் ஏமாற்ற நிலையை அடைந்துள்ளதாகவே சமூக வலைத்தளங்களில் பகிரப்படுகின்ற கருத்துக்கள் மூலமாக உணர முடிகின்றது.

இந்த நிலையிலே பெரும் சவால்களுக்கு மத்தியில் ஆட்சி ஏறிய இந்த அரசாங்கம் அனைத்து மக்களையும் ஒன்றிணைத்து செல்லக்கூடிய வகையில் நம்பிக்கையை கட்டியெழுப்ப வேண்டியது முக்கியமானதாகும்.

சிங்களவர்கள், தமிழர்கள் இமுஸ்லிம்கள் கிறிஸ்தவர்கள் என்ற இனப் பாகுபாடு இன்றி அனைத்து தரப்பினரினதும் ஆதரவினை பெற்று ஆட்சிக்கு வந்த இந்த அரசாங்கம் எந்த ஒரு தரப்பினையும் புறக்கணிக்காது அரவணைத்து முன்னோக்கி செல்வது முக்கியமானதாகும்.

அதே நேரம், அமைச்சுப் பதவி என்ற ஒரு புள்ளியை மையமாக கொண்டு இந்த அரசாங்கத்தை பகைத்துக் கொள்ளாமலும் உணர்ச்சிபூர்வமாக இந்த பிரச்சினையை அணுகாமலும் மிகவும் சாதுரியமாக நடக்க வேண்டியது முஸ்லிம்களின் பொறுப்பாகும்.

இந்த விடயத்தை மையமாகக் கொண்டு உணர்ச்சிபூர்வமாக எந்த நடவடிக்கைகளிலும் இறங்காது இந்த சமூக இளைஞர்களையும் சமூக ஆர்வலர்களையும் வழி நடத்த வேண்டிய பொறுப்பு முஸ்லிம்களுடைய அரசியல், ஆன்மீக தலைமைகளினதும் புத்திஜீவிகளினதும் பிரதான கடமையாகும்.

பல சவால்களை எதிர் நோக்க வேண்டிய இந்த அரசாங்கத்திற்கு போதுமான கால அவகாசத்தை வழங்கி தம்மாலான பங்களிப்புகளையும் வழங்கி நாட்டை வளப்படுத்துவதற்கும் அபிவிருத்தி பாதையில் இட்டுச் செல்வதற்கும் இந்த அரசாங்கத்திற்கு தொடர்ந்து ஆதரவு வழங்குவதே முஸ்லிம்களின் சாதுரியமான நகர்வாக அமைதல் வேண்டும்.

# வருமானம் குறைந்த பள்ளிவாசல்களுக்கு இலவச Solar Power Project

மின்சார கட்டணங்கள் கட்டுவதற்கு வருமானம் குறைந்த பள்ளி வாயில்களுக்கு Solar Power Projector ஏற்பாடு செய்து தருவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே உங்களுடைய பள்ளிவாயில்கள் வருமானங்கள் இன்றி மின்சார கட்டணங்கள் கட்டுவதற்கு கஷ்டப்படுகின்ற நிலையில் இருந்தால் கீழ் வரக்கூடிய தகவல்களை பதிவில் இணைக்கப்பட்டுள்ள தொலைபேசி இலக்கத்திற்கு வட்ஸ் அப் செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

1. அனுப்ப வேண்டிய தொலைபேசி இலக்கம்: 0770609600

2. அனுப்பப்பட வேண்டிய தகவல்கள்
   1. பள்ளிவாயல் பெயர் :
   2. முகவரி :
   3. பள்ளிவாயல் கூரை நீளம் அகலம் :
   4. தலைவர் மற்றும் செயலாளர் தொலைபேசி இலக்கங்கள் :
   5. ஆறு மாத கரண்ட் பில் பட்டியல் :

3. அனுப்பப்பட வேண்டிய முகவரி :
Babes Cute Mart, 63/1, Mosque Road, Gorakana, Panadura.

மேற்கூறப்பட்ட தகவல்களை இம் முகவரிக்கு (பதிவு) ரெஜிஸ்டர் போஸ்ட் பண்ணவும்.

குறிப்பு:
இவ் உதவி பள்ளி வாயில்களுக்கு மாத்திரம் செய்து கொடுக்கப்படும் வேறு வகையான மத்ரஸாக்கள் அல்லது அகடமிகள் போன்ற நிறுவனங்களுக்கு செய்து கொடுக்கப்பட மாட்டாது.

# இருபது பாராளுமன்ற உத்தியோகத்தர் பதவிகளுக்கு விண்ணப்பம்


(எம்.எஸ்.எம்.முன்தஸிர்)

பாராளுமன்றத்தின் பாராளுமன்ற உத்தியோகத்தர் பதவிகளுக்கு பட்டதாரிகள் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர். இந்த பதவிகள் ஆட்சேர்ப்பு தொடர்பான திறந்த போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்ங்கள் பாராளுமன்ற செயலாளர் நாயகத்தினால் கோரப்பட்டுள்ளது.

இந்த பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு பரீட்சைகள் ஆணையாளர் திணைக்களத்தினால் நடத்தப்படும் எழுத்துப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சையின் பிரகாரம் மேற்கொள்ளப்படவுள்ளது. இந்த பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் அதிகூடிய புள்ளிகள் அடிப்படையில் பாராளுமன்றில் நிலவும் இருபது பாராளுமன்ற உத்தியோகத்தர் பதவி வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த பதவிகளுக்கான விண்ணப்பம் மற்றும் விபரங்கள் பாராளுமன்றத்தின் றறற.யசடயைஅநவெ.டமஎனும் இணையத்தளத்திலும் பெற்றுக்கொள்ள முடியும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதி இம்மாதம் 30ஆம் திகதியாகும். விண்ணப்பதாரிகளுக்கான வயதெல்லை 21-35ஆகும். அரச மற்றும் மாகாண அரச சேவைகளிலும் அரச கூட்டுத்தாபனம், நியதிச் சபைகளில் சேவையில் உள்ளவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

மேற்படி பதவிக்கான திறந்த போட்டிப் பரீட்சை மொழி, மொழிபெயர்ப்பு ஆற்றல் மற்றும் பொது அறிவும் நுண்ணறிவும் எனும் இரண்டு பாடவிதானங்கள் கொண்ட ஒவ்வொன்றும் இரண்டு மணித்தியாலம எழுத்துப் பரீட்சையாக இடம்பெறவுள்ளது.



# இதயங்கள் நொருங்கிய அந்தக் கணம்...!

- கியாஸ் ஏ புஹாரி -

களத்திலிருந்து தகவல் உதவி:
- எஸ்.எம். அமீர்
- நூருள் ஹுதா உமர்

## – கதி கலங்கிய சம்மாந்துறை –

அனர்த்தங்கள் நிகழும் போது உயிர்ச் சேதங்கள் மற்றும் உடமைச் சேதங்கள் என பல்வேறு வழிகளிலும் பாதிப்புக்கள் வருகின்றமை இறைவனின் விதியிலன்றி வேறேதுமில்லை. இருப்பினும் மனிதர்களுக்கு இறைவன் வழங்கியுள்ள அறிவின் பிரகாரம் சிந்தித்து செயற்பட வேண்டியதும், முன் ஆயத்தங்களுடன் பாதுகாப்பு உறுதி செயற்பட வேண்டியதும், பகுத்தறிந்து நகர வேண்டியதும் மனிதர்களாகிய நமது கடமையுமாகும்.

கடந்த 26.11.2024 செவ்வாயன்று அம்பாறை மாவட்டம் காரைதீவு - மாவடிப்பள்ளி A31 பிரதான வீதியை மறித்து மேலெழுந்த வெள்ளப் பெருக்கின்போது காரைதீவிலிருந்து சம்மாந்துறை, அம்பாரை, இறக்காமம் போன்ற பகுதிகளுக்கு செல்லும் மக்கள் உழவு இயந்திரங்கள் மற்றும் கனரக வாகனங்கள் ஊடாகவுமே வீதியைக் கடக்கும் நிலை காணப்பட்டது.

இந் நிலைமையில் 26ம் திகதி மாலை வேளை ஓர் துயரச் சம்பவம் அப்பிரதேசத்தை நிகழ்கின்றது. கடும் காற்றும், மழையும் சூழ்ந்திருந்த வேளையில் உழவு இயந்திரம் ஊடாக பாதையைக் கடக்க முயன்ற மத்ரஸா மாணவர்கள் உட்பட சுமார் 15 பேரளவில் குறித்த உழவு இயந்திரத்தில் பயணிக்கின்ற போது காரைதீவு - அம்பாறை வீதி முதலாவது பஸ் தரிப்பிடத்திலிருந்து சுமார் 200 மீற்றர் தூரம் செல்லும் போது உழவு இயந்திரம் தடம்புரண்டுள்ளது.

அலறல், கதறல் சத்தங்கள் ஒலித்த வேளை அடுத்த பயணங்களுக்காக காத்துக் கொண்டிருந்த பொதுமக்கள் குறித்த இடத்தை நோக்கி விரைந்த போதும் அவர்களால் குறிப்பிட்ட அளவு தூரத்திற்கு நீரினுள் செல்ல முடியாமல் தடுமாறிக் கொண்டு அங்கும், இங்குமாக தகவல்களை பகிர்ந்திருக்கின்றனர்.

இந் நிலையில், அதே வீதியூடாக எதேச்சையாக அம்பாறையை நோக்கி வந்த இராணுவ உயர் அதிகாரியின் வாகனத்தைக் கண்ணுற்ற பொதுமக்கள் செய்வதறியாது குறித்த இராணுவ அதிகாரியின் உதவியை நாடினர்.

உடனே அதிலிருந்த பாதுகாப்பு அதிகாரி அவர்கள் சம்பந்தப்பட்ட பொலிஸ் பிரிவு, இராணுவ முகாம்கள், கடற்படையினரை தொடர்பு கொண்டார். சுமார் 30 நிமிடங்களின் பின்னர் அவ்விடத்திற்கு பாதுகாப்புத் தரப்பினர் விரைந்திருக்கின்றனர்.

சுமார் 500 மீற்றர் அளவிலான வீதி இவ்வாறு நீரால் சூழப்பட்டு வெள்ளப்பெருக்கெடுத்து காணப்பட்டது. இவ் வீதியின் இருபுறங்களிலும் வயல் நிலங்களும் ஆறுகளும் இருக்க, பெரிய பாலம் ஒன்றும் சிறிய பாலங்கள் இரண்டும் காணப்படுவது இவ் வீதியால் பயணிக்கும் யாவரும் அறிந்ததே!

இந்த சம்பவம் நிகழ்ந்த வேளை இயந்திரத்தில் பயணம் செய்தோரில் நீச்சல் தெரிந்த மற்றும் ஏதோ ஒரு விதத்தில் தற்காப்பினை மேற்கொண்ட 8 பேர் தவிர்ந்த ஏனையோர் ஏதோ ஒரு வகையில் கரைசேர்க்கப்பட்டு வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுளனர்.

ஏனைய எட்டு பேரும் தண்ணீரில் முழ்கிச் செல்வதையும், அவர்களின் கதறல் சத்தங்களையும் கண்களால் கண்டவர்கள் விடுகின்ற கண்ணீர்கள் நம் அனைவரது உள்ளங்களையும் உருக்கிச் செல்கிறது.

சம்பவத்தின் பின்னர் 26ம் திகதியிலிருந்து 30 ம் திகதி காலை நேரம் வரையிலும் முழுமையான தேடுதல் பணிகளை பொது மக்களும், பாதுகாப்புத் தரப்பினரும் மேற்கொண்டு மொத்தமாக எட்டு ஜனாஸாக்களையும் மீட்கும் பணியை தொடர்ந்தனர்.

இந்த தேடுதல் சம்பவத்திற்கு உறுதுணையாக பாதுகாப்புப் படையினரும், அவர்களோடு சாய்ந்தமருது ஜனாஸ ா நலன்புரி பேரவையினர், மாளிகைக்காடு ஜனாஸா நலன்புரிச் சங்கம். கல்முனை ஆழ்கடல் சுழியோடிகள். காரைதீவு பிரதேச இளைஞர்கள், மீனவர்கள் என பலரும் உதவி ஒத்தாசைகள் புரிந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

குறித்த கோரச் சம்பவத்தில் மொத்தமாக எட்டுப் பேர் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்களில் ஏழு பேர் சம்மாந்துறையைச் சேர்ந்தவர்களும், ஒருவர் சாய்ந்தமருதைச் சேர்ந்தவருமாகும்.

இப்போது சமூக வலைத்தளங்கள் ஊடகங்கள் வாயிலாக பல்வேறு விமர்சனங்கள் உலாவுகின்றன. அவற்றின் சுருக்கத்திலிருந்து நாம் எவருமே அனர்த்தங்களின் போது தற்காப்புக்கு தயாரில்லை என்பது புலனாகின்றது.

குறித்த சம்பவத்தின் போது பலராலும் குற்றம் சுமத்தப்பட்ட நிந்தவூர் காஷிபுல் உலும் அரபுக் கல்லூரி அதிபர் உட்பட நிர்வாகத்தினரால் கடந்த 27ம் திகதி சமூக ஊடகத்தினூடாக வழங்கப்பட்ட ஊடக அறிக்கையின் பிரகாரம்:

“மூன்று தினங்களாக தொடர்ச்சியாக பெய்துவந்த அடை மழை காரணமாக மத்ரஸா கட்டிடத்தில் ஏற்பட்ட நீர் ஒழுக்கு காரணமாக மாணவர்களுக்கு அசௌகரியம் ஏற்பட்டதையடுத்து, பிற்பட்ட நாட்களின் காலநிலையை கருத்திற்கொண்டு மத்ரஸா நிர்வாகத்தினரின் முடிவின் பிரகாரம் தாங்கள் மாணவர்களின் பெற்றோர்களுடன் தொடர்புகொண்டு அனுமதியெடுத்த பின்னர் அக்கரைப்பற்று, சம்மாந்துறை, கல்முனை பிரதேச மாணவர்களை அவரவர் பெற்றோர்களிடம் ஒப்படைப்பதற்காக மத்ரஸ ா அதிபர் மற்றும் ஆசியர்கள் சிலரும் தனியார் பஸ் ஒன்றில் அனைத்து மாணவர்களையும் ஏற்றிக்கொண்டு அக்கரைப்பற்று பிரதேச மாணவர்களை அவர்களின் பெற்றோர்களிடம் ஒப்படைத்துவிட்டு இரண்டாவதாக சம்மாந்துறை மாணவர்களை ஒப்படைக்கச் சென்றபோது காரைதீவு பிரதேசத்துடன் பயணங்கள் அனைத்தும் தடைப்பட்டு காணப்பட்டன.

அந்த நேரம் சம்மாந்துறை மாணவர்களின் பெற்றோர்களிடம் தொலைபேசியூடாக பேசி அனுமதியெடுத்த போது பெற்றார்கள் பாதைக்கு மறுபுறம் (அதாவது மாவடிப்பள்ளி எல்லை) நிற்பதாகவும், தாங்கள் இங்கே பிள்ளைகளை பாரம் எடுக்கிறோம் அனுப்பி வையுங்கள் என அனுமதிபெற்ற பின்னரே இவ்வாறு உழவு இயந்திரத்தில் ஏற்றிவிட்டதாகவும்; குறித்த வீதியை கடப்பதற்கு அந்த நிலைமையில் உழவு இயந்திரம் தவிர்ந்த எந்தவொரு மாற்று வழியும் பிரயாணத்துக்காக இருக்கவில்லை” – எனவும் தெரிவித்திருந்தார்கள்.

இதே நேரம் சம்பவ இடத்தில் நின்ற பொது மக்கள் சிலர் வழங்கிய தகவலின் பிரகாரம்,

“சம்பவம் நிகழும் போது அந்த இடத்தில் பொது மக்கள் மாத்திரமே நின்றதாகவும் அதிலும் குறிப்பாக குறித்த வீதியைக் கடப்பதற்கு தயாராக இருந்த பிரயாணிகள் மாத்திரமே நின்றுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டன.

எனினும், சம்பவம் நிகழ்ந்த அடுத்த கணம் பொது மக்களின் முயற்சியாலும், குறித்த வீதியால் எதிர்பாராதவிதமாக பயணம் செய்த இராணுவத்தினரின் உதவியினாலுமே சம்பந்தப்பட்ட பாதுகாப்புத் தரப்பினரும், சிவில் அமைப்புக்களும் வரவழைக்கப்பட்டு களத்தில் இறங்கியுள்ளனர்.“

இந்த விடயங்கள் இறை நியதிக்கு உட்பட்டது என்பதை யாருமே மறுதலிக்க முடியாது.

இருப்பினும் மனித விஞ்ஞான அறிவின் பிரகாரம் சம்பவ தினத்திற்கு சில தினங்கள் முன்பிருந்தே வளிமண்டளவியல் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட காலநிலை எச்சரிக்கை தகவல்கள் ஊடகங்கள் மூலம் செய்தி வெளியிட்டுக்கொண்டே இருந்தன.

தொடர்ச்சி 6ம் பக்கம் பார்க்க...







**இதயங்கள்...**
**(5ம் பக்கத் தொடர்ச்சி)**

அந்த அறிக்கைகள் அத்தனையும் பௌதீக ரீதியில் எதிர்கூறலின் அசலாக இடம்பெற்றுக் கொண்டிருந்தமையும் யாவரும் அறிந்த விடயம்.

தென்மேற்கு வங்காள விரிகுடா கடற்பரப்புகளுக்கு மேலாக விருத்தியடைந்த ஆழமான தாழமுக்கம் நவம்பர் 26ஆம் திகதி பிற்பகல் திருகோணமலைக்குத் தென்கிழக்காக ஏறத்தாழ 240 கிலோ மீற்றர் தூரத்தில் நிலை கொண்டிருந்தது.

இது நாட்டின் கிழக்குக் கரைக்கு அண்மையாக நகரக் கூடிய சாத்தியம் காணப்படுவதுடன் மேலும் வலுவடைந்து நவம்பர் 27ஆம் திகதி ஒரு சூறாவளியாக விருத்தியடையக் கூடிய சாத்தியம் காணப்படுவதுடன், வடக்கு, வடமத்திய, கிழக்கு, வடமேல் மற்றும் மத்திய மாகாணங்களில் 200 மி.மீ க்கும் அதிகமான மிகப் பலத்த மழைவீழ்ச்சியும் கடும் காற்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. என வளிமண்டலவியல் திணைக்களத்தினால் தெரிவித்து வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு சிவப்பு எச்சரிக்கையும் விடுக்கப்பட்டு விட்டிருந்தது.

இவ்வாறு அனர்த்த எச்சரிக்கைகள், காலநிலை சீரின்மை, வெளிப் செய்திகள் சமூக ஊடகங்கள், அறிக்கைகள் ஊடாக அறிவிக்கப்பட்டிருந்தது.

நீர்ப்பாசன திணைக்கள அறிவித்தலின் படி 25ம் திகதி 85.40 / 110 ft 380,800 / 770,000 Acft என்ற நிலையில் காணப்பட்ட நீரின் அளவு அடுத்த நாள் 26ம் திகதி 91.60 / 110 ft 459,600 / 770,000 Acft என்ற நிலையில் உயர்வாக உள்ளதாகவும் அறிவித்தல்கள் பல வெளியானவண்ணம் இருந்தன.

அவ்வாறு நீர் நிரம்பியிருந்தும் எந்தவொரு குளங்களும் திறந்துவிடப்படாத நிலையில் பலத்த மழைவீழ்ச்சியால் குளங்களை ஊடறுத்தே நீர் வெள்ளப்பெருக்கெடுக்கத் தொடங்கின.

இப்படியான அசாதாரண காலநிலை நிலவுகின்ற சந்தர்ப்பத்தில் காரைதீவு - மாவடிப்பள்ளி பிரதான போக்குவரத்து பாதை வெள்ளத்தில் சிக்குவதானது, பல வருடங்களாக பலரும் அறிந்த விடயம்.

அப்படியிருந்தும், சம்பவ தினத்தன்று அதிகரித்த மழை மற்றும் ஆயத்தங்களுக்கு நாம் யாரும் கரிசனை கொள்வதில்லை.

அதே போல் ஒரு சம்பவம் நிகழ்ந்துவிட்டால் அதற்கான படிப்பினையைக் கொண்டு அதிலிருந்து இன்னும் பாதுகாப்புக்களை எவ்வாறு விஸ்தரிப்பு என்பது குறித்து கணக்கெடுப்பதில்லை.

சம்பவங்கள் நிகழ்கின்ற பொழுதுகளை மட்டும் துக்கமாக கடந்து விடுகின்ற மனோ நிலை மேலோங்கிவிட்டன.

கடந்த 2023 ஜூலை 10ம் திகதி மன்னம்பிட்டி பாலத்திலுள்ளே இவ்வாறு வெள்ளம் இல்லாத காலத்தில் ஒரு பாரிய விபத்து














பிரயாணங்களை தவிர்க்கும் வகையிலான ஆலோசனைகள் மக்களுக்கு நினைவூட்டப்பட்டுக்கொண்டே இருந்தன.

இந்த சீரற்ற காலநிலை ஊடகங்கள் வாயிலாக அடிக்கடி நினைவூட்டல் செய்யப்பட்ட விடயமாகும்.

சாதாரணமாக அதிகரித்த மழை அம்பாறை மாவட்டத்தை அண்டிய பிரதேசங்களில் பெய்யுமாயின், டீ.எஸ். சேனாநாயக்க சமுத்திரம் நிரம்புமானால் அதனைச் சுற்றியுள்ள குளங்களின் வான் கதவுகள் கட்டம் கட்டமாக திறக்கப்படுவது வழமை.

அவ்வாறே கடந்த 25ம் திகதியும் சமுத்திரம் மற்றும் குளங்களிலுள்ள நீரின் அளவு காற்று வெள்ளப் பெருக்கு ஏற்பட்ட சந்தர்ப்பத்தில்தான் சம்பவ இடத்தை அண்மித்த நிந்தவூர் காஷிபுல் உலூம் மத்ரஸா மாணவர்கள், இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட அப் பிரதேசத்தை அண்டிய பல கல்வி நிறுவனங்கள் மாணவர்களுக்கு விடுமுறை அறிவித்துள்ளனர்.

பொதுப் போக்குவரத்து பாதிப்பு உக்கிரமடைந்த பின்னர்தான் அரச தனியார், நிறுவன ஊழியர்கள் கடமைகளை நிறைவு செய்து வீடுதிரும்பியுள்ளனர்.

உண்மையிலே, இன்றுள்ள நமது சமூகத்தின் மனோ நிலை எவ்வாறென்றால் முன் இடம்பெற்றது. அதுவும் பாலத்தின் பாதுகாப்பு சீரின்மையால் பஸ் ஒன்று வேகமாக வந்ததன் பிரகாரம் கீழிருந்த ஆற்றுக்குள் குடைசாய்ந்தது.

அதிலும் சுமார் 10 உயிர்கள் காவுகொள்ளப்பட்டதுடன், 41 இற்கும் மேற்பட்டோர் காயங்களுக்குள்ளானர்.

பிற்பட்ட நாட்கள் இற்றைக்கு ஒரு வருடங்களைத் தாண்டியும் குறித்த பாலத்திற்கு இருந்த கம்பி வேலிக்கு மேலதிகமாக கொஞ்சம் உயர்வாக சாரதி சமிக்ஞைக்காக சிவப்புக் கம்பிகள் மட்டுமே நிறுத்தப்பட்டுள்ளன.

இப்போது இடம்பெற்ற சம்பவத்தில் 8 உயிர்கள் பலி!

இவ்வாறு சம்பவங்கள் இடம்பெறுகின்ற சந்தர்ப்பங்களில் மாத்திரமே நாம் அனைவரும் அலுப்பின்றி அது பற்றி பேசுவோம், பின்னர் யாரோ சிலர் மாத்திரம் சட்டம், வழக்கு என செல்வார்கள் அத்துடன் நாட்பட்ட கதையாக அவைகள் கடந்து சென்றுவிடுகின்றன.

இங்கு மறைவது சம்பவங்கள் மாத்திரம் தான், அவை சரித்திரங்களாகவும், கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்களாகவும் அமைகின்றமை மறைமுகமாக சித்திரிக்கப்பட்டுக்கொண்டே இருக்கின்றன.

இவ்வாறான அனர்த்தனங்களை இந்த நவீன உலகத்திலும் கணக்கெடுக்காமல் ஒவ்வொரு முறையும் அமைகிற அரசாங்கங்களும், அரச அதிகாரிகளும் அலட்சியப்படுத்துவார்களாயின் பொதுமக்கள் அழிவின் பக்கம் உயிரைப் பணயம் வைத்துக் கொண்டு ஒவ்வொரு பயணங்களையும் நகர்த்த வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்படுவர் என்பதே இவைகளின் வெளிப்பாடாகும்.

எனவே, சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகள், அரசியல்வாதிகள் அரசாங்கத்தின் சிந்தனைக்கு இவ்வாறான விடயங்களை கொண்டுசென்று அனர்த்த நிலைமைகளை கருத்திலெடுத்து அவற்றுக்கான தீர்வுகளை பெற்றுக் கொடுக்க வழிசமைப்பது இன்றைய காலத்தின் தேவையாகும்.





எஸ்.ஏ. சுஃப்யான்
(Senior Journalist, Chennai - Tamilnadu, India)

# ரஷ்யா - உக்ரேன் போரின் உக்கிரமான நிலை முடிவுக்கு வருமா!



1000, நாட்களை கடந்த நிலையில் ரஷ்யா மற்றும் உக்ரேனிய போர் உக்கிரமான நிலையில் சென்று கொண்டு இருப்பதை நாம் அவதானிக்க முடிகின்றது. இந்த போர் தொடரும் நிலை மற்றும் மத்திய கிழக்கில் நடைபெறும் போர் ஆகிய இரண்டும் சர்வதேச அமைதிக்கே ஊறு விளைவிக்கும் வகையில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

உக்ரைன் மீது கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையை ரஷ்யா ஏவியுள்ளது. கடந்த 60 ஆண்டுகளில் போர் முனையில் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை தாக்குதல் நடத்தியது இதுவே முதல் தடவையாகும்.

கடந்த 2022 பிப்ரவரி மாதம் ரஷ்யா உக்ரைன் மீது தாக்குதல் நடத்தியது. தற்போது 1000 நாட்களையும் கடந்து போர் நீடித்து வருகிறது. ரஷ்யா மீது தாக்குதல் நடத்த உக்ரைனுக்கு அமெரிக்கா உட்பட மேற்கத்திய நாடுகள் ராணுவ உதவி வழங்கி வந்தன. நீண்ட தூரம் சென்று இலக் குகளை துல்லியமாக தாக்கும் ஏவுகணைகளை உக்ரைனுக்கு அமெரிக்கா வழங்கி இருந்தது.

எனினும், இந்த ஏவுகணைகளைப் பயன்படுத்த கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன. அமெரிக்க அதிபர் ஜோ பைடனின் பதவிக்காலம் முடிவடைய உள்ள நிலையில், தாங்கள் வழங்கிய நீண்ட தூ ரம் சென்று தாக்கும் ஏவுகணைகளை பயன்படுத்த உக்ரைனுக்கு பைடன் அனுமதி வழங்கினார். நேட்டோ கூட்டமைப்பில் சேருவதற்கு ஆர்வம் காட்டிய உக்ரைன் மீது கடந்த 2022 ஆம் ஆண்டு ரஷ்யா தாக்குதல் நடத்தியது.

உக்ரைனுக்கு அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் ஆதரவு அளித்து வருகின்றன. ரஷ்யா - உக்ரைன் இடையேயான போர் ஆயிரம் நாட்களை கடந்து நீடித்து வருகிறது. ஆனால் முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு தற்போது போர் பதற்றமானது அதிகரித்துள்ளது. இதற்கு நீண்ட தூரம் சென்று தாக்க கூடிய ஏவுகணைகளை உக்ரைன் பயன்படுத்தலாம் என்று அமெரிக்கா அனுமதி வழங்கியதே காரணம். அமெரிக்கா அனுமதி கொடுத்ததும், ரஷ்ய அதிபர் புதின், அணு ஆயுதங்களை பயன்படுத்த அனுமதி கொடுத்தார்.

இதற்கிடையில் அமெக்கா வழங்கிய நீண்ட தூர ஏவுகணைகளை பயன்படுத்தி ரஷ்யாவின் உட்பகுதிக்குள் தாக்குதல் நடத்த உக்ரேனுக்கு அமெரிக்க அதிபர் பைடன் அனுமதி வழங்கியுள்ளார் என்று அமெரிக்க அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். இந்த நடவடிக்கை போரை மேலும் தீவிரப்படுத்தக் கூடும் என்று கூறி, இதற்கு முன்பு இந்த அனுமதியைத் தர அமெரிக்கா மறுப்பு தெரிவித்து வந்தது. இது தற்போது புதிய பதட்டத்தை ஏற்படுத்தும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் யாருக்கும் இருக்க வாய்ப்பே இல்லை என்பதே உண்மையாகும்.

அமெரிக்காவின் ஜனாதிபதி ஜோ பைடன், புதிதாக தேர்வு செய்யப்பட்ட அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்பிற்கு வழங்க இன்னும் இரண்டு மாதங்களே உள்ள நிலையில் இந்த பெரிய அளவிலான கொள்கை மாற்றம் நடைபெற்றுள்ளது. இந்த கொள்கை மாற்றம் மற்றும் தீர்வுகள் வேறுவிதமாக பதட்டத்தை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை. டொனால்ட் டிரம்பின் வருகை, வருங்காலத்தில் உக்ரேனுக்கான அமெரிக்காவின் உதவி தொடர்வதை கேள்விக்குறியாக்கியுள்ளது. அதாவது ட்ரம்ப் நிர்வாகம் வரும் காலங்களில் உக்ரைன் போரை தொடர்ந்து நடத்த நிதி உதவி செய்யுமா என்பது மிகப் பெரிய அளவில் ஆன சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.ரஷ்யா ஆக்கிரமித்துள்ள உக்ரேனிய பிராந்தியங்களில் உள்ள ரஷ்ய துருப்புகளை இலக்காக வைத்து, யுக்ரேன் இந்த நீண்ட தூர ஏவுகணைகளை(யுவயுஊஆளு) ஓராண்டுக்கும் மேலாக பயன்படுத்தி வருகிறது. இந்த ஏவுகணைகள் ஆங்கிலத்தில் யுசஅல வயஉவஉைடயட அளைளடைந எலளவநஅ (யுவயுஊஆளு) என்று அழைக்கப்படுகிறது. ஆனால் அமெரிக்கா இந்த ஏவுகணைகளை ரஷ்ய நாட்டுக்குள் பயன்படுத்த உக்ரேனுக்கு அனுமதி வழங்கவில்லை. இது 300 கி.மீ வரை (186 மைல்கள்) பயணித்து இலக்கை தாக்கி அழிக்கும் திறன் கொண்டது.இந்த வார தொடக்கத்தில், ரஷ்ய எல்லைக்குள் அமெரிக்க ஏவுகணைகளைப் பயன்படுத்தி தாக்குவதற்கு, அதிபர் பைடன் அனுமதி வழங்கினார்.

அமெரிக்காவின் இந்த முடிவை, “எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றும் செயல்” என ரஷ்யா விவரித்தது.உக்ரேனுக்கு கண்ணி வெடிகுண்டுகள் வழங்குவதற்கான முடிவையும் அமெரிக்கா அறிவித்துள்ளது.மக்கள் வாழும் பகுதிகளில் இருந்து விலகி உக்ரேனிய எல்லைக்குள் மட்டுமே அவற்றை பயன்படுத்த வேண்டும் எனவும் அமெரிக்கா கூறியுள்ளது.

ரஷ்ய அதிபர் புடின் இந்த விவகாரம் தொடர்பாக குறிப்பிட்ட போது, மேற்கத்திய நாடுகளின் ஆயுதங்கள் ரஷ்ய மண்ணை தாக்க பயன்படுத்தினால் அதனை நேட்டோ நாடுகள் நேரடியாக போரில் பங்கேற்பதாகவே கருத முடியும் என்று எச்சரித்தார்.

இது நிச்சயமாக போரின் தன்மையை மாற்றக் கூடும் என்று புடின் செப்டம்பர் மாதம் தெரிவித்தார். ”நேட்டோ நாடுகள், அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் ரஷ்யாவுக்கு எதிராக சண்டையிடுகின்றன என்பது தான் இதன் பொருள்,” என்று அவர் கூறினார்.

உக்ரேனுக்கு நவீன டேங்குகள் மற்றும் போர் விமானங்களை வழங்குவது “சிவப்பு கோட்டை“ மீறுவதாகும் என்று கூறி அதற்கு ஏற்கனவே ரஷ்யா எதிர்ப்பு தெரிவித்து வந்தது. இருப்பினும் கூட, ரஷ்யாவுடன்நேரடியாக போரை தூண்டாத வகையில் உக்ரேனுக்கு நேட்டோ நாடுகளின் ராணுவ உதவிகள் தொடர்கின்றன.

உக்ரேனுக்கு நவீன டேங்குகள் மற்றும் போர் விமானங்களை வழங்குவது “சிவப்பு கோட்டை“ மீறுவதாகும் என்று கூறி அதற்கு ஏற்கனவே ரஷ்யா எதிர்ப்பு தெரிவித்து வந்தது. இருப்பினும் கூட, ரஷ்யாவுடன்நேரடியாக போரை தூண்டாத வகையில் யுக்ரேனுக்கு நேட்டோ நாடுகளின் ராணுவ உதவிகள் தொடர்கின்றன. ஐரோப்பிய ஒன்றியம் ரஷ்யாவுக்கு எதிராக செயல்படுவதாக புதின் ஏற்கனவே கோடிட்டுக் காட்டி உள்ளது குறிப்பிடத்தக்கது.

நேட்டோவுக்கான அமெரிக்காவின் முன்னாள் தூதர் குர்த் வோல்கர், ”அமெரிக்காவின் ஆயுதங்களை யுக்ரேன் பயன்படுத்தக் கூடாது என்ற நிபந்தனையை விதித்து, உக்ரேன் தற்காப்பு விவகாரத்தில் தன்னிச்சையாக நியாயமற்ற முறையில் முடிவுகளை அமெரிக்கா எடுத்துள்ளது,” என்று கூறியிருந்தார். ஏ.டி.ஏ.சி.எம்.எஸ். ஏவுகணைகளை கட்டுப்பாடுகளுடன் பயன்படுத்த வேண்டும் என்ற முடிவு தன்னிச்சையானது. அது ரஷ்யாவை மேலும் தூண்டிவிடக் கூடும் என்ற அச்சத்தால் எடுக்கப்பட்டது” என்றும் விமர்சித்தார்.தற்போது, இந்த கொள்கை முடிவை பொதுவெளியில் எடுத்திருப்பது தவறானது. ஏன் என்றால் இது ரஷ்யா தன்னை தயார் நிலையில் வைத்திருக்க வழிவகை செய்யும்” என்றும் அவர் கூறினார்.

இதற்கிடையில் டிரம்பின் மகன், டிரம்ப் ஜுனியர், ”ராணுவ ஆயுத உற்பத்தியாளர்கள், என்னுடைய அப்பா மீண்டும் ஆட்சிக்கு வந்து அமைதியை ஏற்படுத்தி மக்களை காப்பாற்றுவதற்கு முன்பாக, மூன்றாம் உலகப்போரை ஏற்படுத்தும் முனைப்பில் செயல்படுகின்றனர்,” என்று சமூக வலைதளத்தில் தன்னுடைய கருத்தை பதிவு செய்துள்ளார். உண்மையில் என்ன நடக்கிறது என்பதை அவர் அறிந்த நிலையில் தான் இது போன்ற வார்த்தைகளை பொது வெளியில் பயன்படுத்தி வருவதைக் காண முடிகிறது.

இதற்கிடையில் அமெரிக்கா துணை அதிபராக தேர்வு செய்யப்பட்டிருக்கும் ஜே.டி.வான்ஸ், அமெரிக்கா உக்ரேனுக்கு இனிமேல் ராணுவ உதவிகளை வழங்கக் கூடாது என்று கூறியுள்ளார். ஆனால் அவரின் நிர்வாகத்தில் இடம் பெற்றுள்ள மற்ற உறுப்பினர்கள் மாறுபட்ட கருத்துகளை கொண்டுள்ளனர். யுக்ரேனுக்கு ஆயுதங்களை விரைவாக வழங்கி, அமைதி பேச்சுவார்த்தைக்கு ரஷ்யாவை யுக்ரேன் நிர்பந்திக்க வழிவகை செய்ய வேண்டும் என்று டிரம்பின் நிர்வாகத்தில் தேசிய பாதுகாப்பு ஆலோசகராக அறிவிக்கப்பட்டுள்ள மைக்மல் வால்ட்ஸ் கூறியுள்ளார்.இதில் எந்த முடிவை டொனால்ட் டிரம்ப் எடுப்பார் என்று தெளிவாக தெரியவில்லை. இருப்பினும், அவர் ஆட்சிக்கு வந்த பிறகு ஏ.டி.ஏ.சி.எம்.எஸ் உட்பட பல ஆயுதங்களை உக்ரேனுக்கு வழங்குவது நிறுத்தப்படும் என்று பலர் அஞ்சுகின்றனர். இது குறித்து உக்ரேனிய அரசு மிகுந்த அச்சத்தை தெரிவித்து வருகின்றது .

இதற்கிடையில் ரஷ்யா அதிபர் புதினுடன் இணைந்து பணியாற்றுவது குறித்து ஜனநாயகக் கட்சியினர் டிரம்ப் மீது குற்றச்சாட்டுகளை வைத்தனர். யுக்ரேனை அடிபணிய வைக்கும் நோக்கில் தான் அவர் போரை அணுகுகிறார் அது ஒட்டுமொத்த ஐரோப்பாவையும் ஆபத்தில் கொண்டு போய் நிறுத்திவிடும் என்றும் குற்றம்சுமத்துகின்றனர்.

அமெரிக்க தேர்தல் பிரசாரங்களின் போது ஒரே நாளில் போரை நான் நிறுத்திவிடுவேன் என்று டிரம்ப் கூறிக் கொண்டே இருந்தார். ஆனால், அதனை அவர் எவ்வாறு செய்வார் என்பது குறித்த விவரம் எதையும் வழங்கவில்லை.

அமெரிக்கா தொடர்ந்து ஆயுதங்களை வழங்கலாம். ஆனால் ரஷ்யாவுடன் அமைதிப் பேச்சுவார்த்தைக்கு உக்ரேன் ஒப்புக்கொள்ள வேண்டும் என்ற நிர்பந்தம் அங்கே இருக்க வேண்டும் என்று, டிரம்பின் முன்னாள் பாதுகாப்பு ஆலோசகர்கள் இருவர் எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரையில் குறிப்பிடப்பட்டிருந்தது.போரில் தான் இழந்த பிராந்தியங்களை மீட்கும் செயல்பாடுகளை உக்ரேன் கைவிடக் கூடாது. ஆனால் அது தற்போதைய எல்லைகளின் அடிப்படையில் அதற்கான பேச்சுவார்த்தையை துவங்க வேண்டும்” என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

2022-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் ரஷ்யா உக்ரேன் மீது துவங்கிய படையெடுப்பிற்கு பிறகு யுக்ரேனுக்கு பைடன் - ஹாரிஸ் நிர்வாகம் மற்றும் ஐரோப்பிய நாடுகள் வழங்கிய ஆதரவு பல்வேறு வகையான விமர்சனங்களுக்கு உள்ளானது..

உண்மை நிலவரம் என்னவென்றால், பைடன் நிர்வாகமோ, ஐரோப்பிய நாடுகளோ இந்த போரில் உக்ரேன் வெல்வதற்கு தேவையான ஆயுதங்களை வழங்கவில்லை. உக்ரேன் வெல்வதற்கு தடையாக இருக்கும் அம்சங்களையும் அவர்கள் அகற்றவில்லை” என்று குற்றம்சுமத்தினார் அவர்.2022 பிப்ரவரி துவங்கி 2024 ஜுன் வரையான காலகட்டங்களில் 55.5 பில்லியன் அமெரிக்க டாலர்கள் மதிப்பிலான உதவிகளை அமெரிக்கா வழங்கியுள்ளது அல்லது தருவதாக ஒப்புக் கொண்டுள்ளதை நாம் புரிந்து கொள்ள முடிகிறது. அதேநேரத்தில் இந்த ஆயுதங்களை ரஷ்யாவுக்குள் பயன்படுத்த உக்ரேனுக்கு அனுமதி மறுக்கப்பட்டு வந்தது தொடர்பாக உக்ரேன் கடுமையான விமர்சனங்களை முன்வைத்தது. ஒரு கையை முதுகுக்கு பின்னால் கட்டிக் கொண்டு சண்டையிட சொல்வது போல் இது உள்ளது என்று அந்த நாடு குற்றம்சாட்டியது. பல்வேறு காரணங்களால் அமெரிக்கா அரசு இந்த வகையான ஏவுகணைகளை பயன்படுத்த அனுமதி மறுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில், ரஷ்ய துருப்புகளுக்கு ஆதரவாக வட கொரிய ராணுவத்தினர் குர்ஸ்க் பகுதியில் நிறுத்தப்பட்டிருப்பதை தொடர்ந்து தன்னுடைய கொள்கையில் அமெரிக்கா மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. ரஷ்யாவுக்கு ஆதரவாக போரிட வட கொரியாவில் இருந்து முதற்கட்டமாக 3000 வீரர்கள் வந்துள்ளனர். இனி அதனைத் தொடர்ந்து 11,000 வீரர்கள் வர உள்ளதாக சர்வதேச முகாமையாளர்கள் கருத்து தெரிவித்து வருகின்றனர்.

இந்த பதட்டம் நிறைந்த சூழலில் தான் அமெரிக்கா தற்போது இந்த அனுமதியை வழங்கியுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. டொனால்ட் டிரம்ப் மீண்டும் அதிபராக பொறுப்பேற்ற பிறகு அமெரிக்கா இந்த போரில் உக்ரேனுக்கு சாதகமான நிலைப்பாட்டை எடுக்குமா என்ற சந்தேகம் நிலவி வருகின்றது. இந்த காரணத்தால், தற்போது அதிபராக இருக்கும் பைடன், தான் அதிகாரத்தில் இருக்கப் போகும் இந்த குறுகிய காலத்தில் உக்ரேனுக்கு தன்னால் இயன்ற உதவிகளை செய்ய முடிவு செய்துள்ளதாக தெரிய வருகிறது. ஆனால் நீண்ட கால அளவில் இது அமெரிக்கா வெளிவிவகார கொள்கையை எந்த விதத்தில் பாதிக்கும் என்பதை நாம் தற்போது புரிந்து கொள்ள முடியாத அளவுக்கு நிலைமை மோசமாகி வருவதைக் காண கூடியதாக இருக்கிறது.இந்த ஏவுகணையின் மூலமாக உக்ரேன் ரஷ்யாவுக்குள் உள்ள இலக்குகளை குறிவைக்க இயலும். முதலில் குர்ஸ்க் பிராந்தியத்தை தக்க வைப்பதை இலக்காகவே கொண்டு உக்ரேன் செயல்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது உக்ரேனிய படை இந்த பிராந்தியத்தில் சுமார் 1000 சதுர கிலோ மீட்டர் பரப்பை தன் வசம் வைத்துள்ளது.

உக்ரேன் மற்றும் அமெரிக்க அதிகாரிகள், ரஷ்யாவும் வடகொரியாவும் இதற்கு கூட்டாக பதில் தாக்குதல் நடத்தும் என்று எதிர்பார்க்கின்றனர். உக்ரேன் இந்த ஏ.டி.ஏ.சி.எம்.எஸ் ஏவுகணைகளை தங்களின் பாதுகாப்பிற்காகவும், ரஷ்யாவின் ராணுவ தளங்கள், ராணுவ கட்டமைப்புகள் மற்றும் ஆயுத கிடங்குகள் போன்ற இலக்குகளை தாக்கி அழிக்கவும் பயன்படுத்தலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.போரின் போக்கை மாற்ற இந்த ஏவுகணைகள் போதுமானதாக இருக்காது. இது போன்ற கொள்கை மாற்றங்கள் நிகழலாம் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்த ரஷ்யா, ஏற்கனவே ஜெட்கள் போன்ற தனது ராணுவ தளவாடங்களை தனது நாட்டின் உள் பகுதியில் நிறுத்தி வைத்துள்ளது.ரஷ்ய துருப்புகள் ஏற்கனவே கிழக்கு பிராந்தியத்தில் முன்னேறி வருகின்ற சூழலில் யுக்ரேனுக்கு இந்த ஆயுதங்கள் அணுகூலமான சூழலை வழங்கலாம். ஒரு வேளை இந்த ஏவுகணைகள் பயன்படுத்தும் சூழலில் இது போரில் ரஷ்யாவின் இழப்பை அதிகரிக்கக் கூடும் என்றும் அவர் கூறினார்.அமெரிக்காவின் இந்த அனுமதி மற்ற ஆயுத பயன்பாடுகளின் அனுமதிகளுக்கும் வழிவகுக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. உதாரணத்திற்கு, பிரிட்டனும், பிரான்ஸ்/ம் ரஷ்யாவுக்குள் ஸ. அமெரிக்காவின் ஏ.டி.ஏ.சி.எம்.எஸ் ஏவுகணைகளில் இருக்கும் சிறப்பம்சங்களைப் போன்றே இந்த ஏவுகணைகளும் சிறப்பம்சங்களைக் கொண்டுள்ளன. இந்த ஸ்டோர்ம் ஷேடோ ஏவுகணைகள் பிரான்ஸ் மற்றும் பிரிட்டன் நாட்டினர் கூட்டாக உருவாக்கிய ஏவுகணைகள் ஆகும்.

இதற்கிடையே, ரஷ்ய அணுசக்தி கொள்கையில் ஏற்படுத்தப்பட்டுள்ள மாற்றங்களுக்கு ரஷ்ய அதிபர் புதின் ஒப்புதல் அளித்துள்ளார். இது ரஷ்யா அணு ஆயுதத்தைப் எப்போது பயன்படுத்தலாம் என முடிவு செய்வதற்கு புதிய நிபந்தனைகளை வழங்குகின்றது.

அணுசக்தி இல்லாத நாட்டின் தாக்குதலின் பின்னணியில், அணுசக்தி கொண்ட நாடு இருந்தால் அது ரஷ்யா மீதான கூட்டுத் தாக்குதலாகக் கருதப்படும் என்று அந்த கொள்கை இப்போது கூறுகிறது.இந்த மாற்றம் செப்டம்பர் மாதம் முன்மொழியப்பட்டது. உக்ரேனுடனான போரின் 1000வது நாளான செவ்வாய் அன்று இதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இந்த மாற்றங்களின் கீழ், வழக்கமான ஏவுகணைகள், ட்ரோன்கள் அல்லது விமானங்கள் மூலம் ரஷ்யா மீது நடத்தப்படும் பெரிய அளவிலான தாக்குதல், அணுசக்தி மூலம் பதிலளிப்பதற்கான அளவுகோல்களை பூர்த்தி செய்யும். பெலாரூஸ் மீது தாக்குதல் நடத்தப்பட்டாலோ அல்லது ரஷ்யாவின் இறையாண்மைக்கு ஏதேனும் அச்சுறுத்தல் ஏற்பட்டாலோ அணுசக்தியை பயன்படுத்த முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து சர்வதேச நாடுகள் அதிர்ச்சி அடைந்து வருவதைக் காண முடிகிறது.

ஒரு கூட்டணியில் அங்கம் வகிக்கும் ஒரு நாட்டின் தாக்குதல் முழு குழுவிலிருந்தும் வரும் தாக்குதலாக ரஷ்யாவால் பார்க்கப்படும் எனவும் கூறப்பட்டுள்ளது.புதின் இதற்கு முன்பும் அணு ஆயுதங்களைப் பயன்படுத்துவது குறித்து அச்சுறுத்தியுள்ளார். அந்த சமயத்தில் உக்ரேன் தனது கூட்டாளிகள் வழங்கும் ஆதரவைத் தடுக்கும் செயல்பாடு என்று விமர்சித்தது.அணுசக்தி கொள்கையில் செய்யப்பட்டுள்ள மாற்றத்தை அறிவித்த ரஷ்யா, மற்ற நாடுகளை இது குறித்து ஆய்வு செய்யுமாறு வலியுறுத்தியது.

தற்போதைய சூழலில் போர்களத்தில் உக்ரேனுக்கு சாதகமான சூழல் இல்லாத நிலையில், மக்கள் மத்தியிலான பொதுக்கருத்தும் மாறி வருகிறது.

கடந்த 2022-ஆம் ஆண்டு முதல் தொடர் குண்டுவெடிப்புகள், மின்வெட்டு, தூக்கமில்லா இரவுகளை எதிர்கொண்டு வரும் உக்ரேன் மக்கள் ஒட்டுமொத்தமாக போரால் அயர்சி அடைந்துள்ளனர். எதிர்வரும் குளிர்காலத்தை நினைத்து அவர்கள் கவலையில் உள்ளனர். அக்டோபர் மாதம் வெளியிடப்பட்ட மற்றொரு கருத்து கணிப்பின் படி, தங்கள் நாடு இந்த போரில் வெல்லும் என்று முன்பு கொண்டிருந்த உறுதியை யுக்ரேனியர்கள் தற்போது கொண்டிருக்கவில்லை. எனினும் பெரும்பாலானவர்கள் யுக்ரேன் ரஷ்யாவை வீழ்த்தும் என்று நம்புகின்றனர்.

டொனால்ட் டிரம்ப் அமெரிக்க அதிபர் தேர்தலில் வெற்றி பெற்ற பிறகு, ரஷ்யா--உக்ரேன் இடையிலான அமைதி பேச்சுவார்த்தைக்கான அவரது திட்டங்கள் குறித்து தெரிந்துகொள்ள பலரும் காத்திருக்கின்றனர்.

தேர்தலுக்குப் பிறகு அவர் ரஷ்யா- உக்ரேன் குறித்து பேசிய போது குறிப்பாக எதையும் கூறவில்லை. “ரஷ்யா மற்றும் உக்ரேனுடன் நாம் கடுமையாக உழைப்போம். இது நிறுத்தப்பட வேண்டும். ரஷ்யாவும் உக்ரேனும் நிறுத்த வேண்டும்” என்று பேசியிருந்தார்.

அதன் பிறகு ரஷ்ய அதிபர் புதினுடன் டிரம்ப் தொலைபேசியில் பேசியதாக அமெரிக்க ஊடகங்கள் செய்திகள் வெளியிட்டிருந்தன. போரை அடுத்தக் கட்டத்துக்கு எடுத்துச் செல்லக் கூடாது என்று டிரம்ப் எச்சரித்ததாகவும் செய்திகள் வெளியாகின. ஆனால் ரஷ்யா இதை மறுத்துவிட்டது.

டிரம்பின் திட்டம் முழுமையாக தயாராகவில்லை என்றாலும் அவரது குழுவினர் அதற்கான யோசனைகளை ஏற்கெனவே உருவாக்கிக் கொண்டிருப்பார்கள் என்று உக்ரேனிய விவகாரங்கள் குறித்த நிபுணர்கள் கருதுகின்றனர்.

இந்த யோசனைகளில் பல, எவ்வாறாயினும், மோதலை நிறுத்தவே பரிந்துரைக்கும் என்று “நியூ யூரோப்” என்ற உக்ரேனிய வெளியுறவுக் கொள்கை குறித்த சிந்தனைக்குழுவினர் முழுமையாக நம்புகின்றனர்.

“போரின் முன்களத்தில் மோதலை நிறுத்துவது, நேட்டோவில் உறுப்பினராவது குறித்து கோருவதை நிறுத்துவது, குறைந்தபட்சம் நிதியுதவியை நிறுத்துவது, எல்லாவற்றையும் நிறுத்துவது” இதுதான் திட்டமாக இருக்கும் என்று விளக்குகிறார் அவர்.

டொனால்ட் டிரம்ப் அமெரிக்க அதிபர் தேர்தலில் வெற்றி பெற்ற பிறகு, ரஷ்யா உக்ரேன் இடையிலான அமைதி பேச்சுவார்த்தைக்கான அவரது திட்டங்கள் குறித்து தெரிந்துகொள்ள பலரும் காத்திருக்கின்றனர்.

தேர்தலுக்குப் பிறகு அவர் ரஷ்யா- உக்ரேன் குறித்து பேசிய போது குறிப்பாக எதையும் கூறவில்லை. “ரஷ்யா மற்றும் உக்ரேனுடன் நாம் கடுமையாக உழைப்போம். இது நிறுத்தப்பட வேண்டும். ரஷ்யாவும் உக்ரேனும் நிறுத்த வேண்டும்” என்று பேசியிருந்தார்.

அதன் பிறகு ரஷ்ய அதிபர் புதினுடன் டிரம்ப் தொலைபேசியில் பேசியதாக அமெரிக்க ஊடகங்கள் செய்திகள் வெளியிட்டிருந்தன. போரை அடுத்தக் கட்டத்துக்கு எடுத்துச் செல்லக் கூடாது என்று டிரம்ப் எச்சரித்ததாகவும் செய்திகள் வெளியாகின. ஆனால் ரஷ்யா இதை மறுத்துவிட்டது.

டிரம்பின் திட்டம் முழுமையாக தயாராகவில்லை என்றாலும் அவரது குழுவினர் அதற்கான யோசனைகளை ஏற்கெனவே உருவாக்கிக் கொண்டிருப்பார்கள் என்று உக்ரேனிய விவகாரங்கள் குறித்த நிபுணர்கள் கருதுகின்றனர்.

இந்த யோசனைகளில் பல, எவ்வாறாயினும், மோதலை நிறுத்தவே பரிந்துரைக்கும் என்று பலரால் நம்பப்படுகிறது.

“போரின் முன்களத்தில் மோதலை நிறுத்துவது, நேட்டோவில் உறுப்பினராவது குறித்து கோருவதை நிறுத்துவது, குறைந்தபட்சம் நிதியுதவியை நிறுத்துவது, எல்லாவற்றையும் நிறுத்துவது” இதுதான் திட்டமாக இருக்கும் என்று விளக்குகிறார் அவர். பைடன் நிர்வாகத்தின் அணுகுமுறையிலிருந்து இதனை மிக மாறுபட்ட அணுகுமுறையாக கருதவில்லை அவர்.

இதில் வித்தியாசம் என்னவென்றால் ஜனநாயகக் கட்சியினர், பேச்சுவார்த்தைகளை உக்ரேன் தொடங்கி வைக்க வேண்டும், அமெரிக்கா அல்ல என்று நினைத்தனர். அவர்கள் யுக்ரேனுக்கு நீண்ட கால நிதியுதவிக்கான உறுதியை அளித்திருந்தனர்.

இந்நிலையில், ரஷ்யா தெற்கு அஸ்ட்ராகான் மாகாணத்திலிருந்து உக்ரைன் மீது முதன் முதலாக கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை மூலம் ரஷ்யா தாக்குதல் நடத்தியுள்ளது. உக்ரைனின் மத்திய கிழக்கு பகுதியில் உள்ள டிரிப்ரோ நகரை குறிவைத்து நடத்தப்பட்ட இந்த தாக்குதலில் ஏராளமான உள்கட்டமைப்புகள் சேதமடைந்துள்ளதாக உக்ரைன் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீண்ட தூர இலக்கை குறித்து வைத்து தாக்கும் ஏவுகணைகளை பயன்படுத்த அமெரிக்கா ஒப்புதல் அளித்தையடுத்து ரஷ்யா மீது உக்ரைன் ATACMS ஏவுகணை மூலம் தாக்குதல் நடத்தியுள்ளது. இந்த தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் விதமாக கண்டம் விட்டு கண்டம் பாயும் பாலிஸ்டிக் ஏவுகணைகளை (ICBM) கொண்டு ரஷ்யா தாக்குதல் நடத்தியுள்ளதாக கூறப்படுகிறது.

இது போன்ற பதட்டம் நிறைந்த ஒரு சூழலில் வரும் நாட்களில் இந்த இரண்டு நாடுகள் இடையான போர் மற்றும் சமாதானம் சார்ந்த நிகழ்வுகள் எந்த வகையில் சாத்தியம் உள்ளது என்பதை பார்க்கும் போது தற்போதைய நிலையில் இதற்கான முழுமையான தீர்வு அமெரிக்கா புதிய அதிபர் டொனால்ட் ட்ரம்ப் கைகளில் தான் உள்ளது என்பதை கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். வருங்காலத்தில் இந்த இரண்டு நாடுகள் இடையான மோதலுக்கு தீர்வு என்பது அமெரிக்கா நாட்டின் முடிவுகள் அடிப்படையில் தான் அமையும் என்பதில் ஐயமில்லை.

அது வரைக்கும் சர்வதேச சமூகம் பொறுத்து இருந்து அமைதியாக நடப்பதை அவதானிக்க கூடிய வகையில் செயல்பட வேண்டும் என்பதை தவிர இன்றைய நிலையில் வேறொன்றும் இல்லை என்பதே நிதர்சனமான உண்மையாகும்.

# முஸ்லிம்களின் தனித்துவ உரிமைகள் பேணப்படுமா?



எம்.எஸ். அமீர் ஹுசைன்

புதிய அரசாங்கத்தின் அமைச்சரவை நியமனம் 2024.11.18 ஆம் திகதி இடம்பெற்றது. ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கா 21 பேரை அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களாக நியமித்துள்ளார். அதனைத் தொடர்ந்து 2024.11.21 ஆம் திகதி 29 பேர் பிரதி அமைச்சர்களாக நியமிக்கப்பட்டனர். எப்போதும் பதவிக்கு வருகின்ற அரசாங்கம் ஒன்று அமைச்சர் நியமனங்கள் கொடுக்கின்ற போது பல விடயங்களை கவனத்தில் எடுக்கின்றது. மிகவும் குறைந்த எண்ணிக்கையான அமைச்சர்களை நியமித்ததால் என்.பி.பி. க்கு நீண்ட காலமாக தியாகங்களை செய்து உழைத்த, மற்றும் அநுரகுமார திசாநாயக்கா, ஹரினி, டில்வின் சில்வா, விஜித ஹேரத் மற்றும் சுனில் ஹந்துன் ஹெட்டி ஆகியோருக்கு கட்சி ரீதியாக கைகொடுத்து பாராளுமன்றம் வருகை தந்துள்ளவர்களை அடையாளம் கண்டு அமைச்சர் பதவிகள் கொடுக்க வேண்டி இருந்ததால் இந்த அரசாங்கம் பெரும் நெருக்கடியை எதிர் நோக்கி இருக்கலாம். அதனால் முஸ்லிம் சமூகத்தை கவனத்தில் எடுத்து ஒரு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் பதவியையாவது கொடுக்காமல் எல்லாவற்றையும் தேவையானவர்களுக்கு கொடுத்துள்ளனர்.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில் முஸ்லிம் சமூகம் புறக்கணிக்கப்பட்டமை தொடர்பாக இந்த சமூகத்திற்குள் இன்னும் வாதப் பிரதிவாதங்கள் நடைபெற்ற வண்ணம் உள்ளன. அரசாங்கத்தை பதவிக்கு கொண்டு வர வாக்களித்த முஸ்லிம்கள் வெளியே சொல்லிக் கொள்ள முடியாத அளவிற்கு கவலையில் உறைந்து போயுள்ளனர். வாக்களிக்காத மாற்று கட்சிக்காரர்கள் வேடிக்கையாக முஸ்லிம் சமூகத்திற்கு நடந்த கதி பற்றி விமர்சனங்களை செய்து கொண்டிருக்கின்றனர்.

இந்த விவகாரம் தொடர்பாக கட்சியின் உயர் மட்ட உறுப்பினர்களிடம் கேட்டால் தேசிய மக்கள் சக்திக்குள் இனவாதத்திற்கு இடமில்லை. இந்த நாட்டில் இனிமேல் சிங்களவர்கள், தமிழர், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் என்ற மத அடிப்படையிலான சிந்தனைக்கு இடமில்லை. அதனால் முஸ்லிம் ஒருவர் அமைச்சரவையில் இருந்துகொண்டு தான் முஸ்லிம்களுக்காக குரல் எழுப்ப வேண்டும் என்ற நியதி இல்லை என்ற பதில் கிடைக்கின்றது. இனியாவது இன அடிப்படையில் சிந்திக்காமல் நாம் அனைவரும் இலங்கையர்கள் என்று சிந்திக்க பழகிக்கொள்ள வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுக்கப்படுகின்றது.

அந்த அடிப்படையில் தமிழர்கள், கிறிஸ்தவர்கள் என்று அமைச்சரவைக்குள் இருந்தாலும் முஸ்லிம் ஒருவரையும் அமைச்சராக நியமித்தால் அது இனவாத அடிப்படையில் பார்க்கப்படும் என்பது இந்த ஆட்சியின் தத்துவமாக மாறி இருக்கின்றது. ஆனாலும் தமிழர் ஒருவரை அமைச்சரவையில் நியமிக்காமல் இருந்திருந்தால் அது ஒருவிதமான இன ஒதுக்கல் என்று கூட சர்வதேசம் கேள்வி எழுப்பி இருக்கலாம். ஏன் இந்த நாட்டில் இன அடிப்படையில் உரிய அந்தஸ்து வழங்கப்படுவதில்லை என்று பல விமர்சனங்கள் எழுந்திருக்கலாம். அது சர்வதேச உதவிகளைக் கூட பாதிக்கும் அளவிற்கு சென்றிருக்கலாம். பெண் ஒருவரை அமைச்சரவைக்குள் உள்வாங்காமல் இருந்திருந்தாலும் இதே கேள்வி எழுகின்றது. ஆனாலும் இந்த நாட்டில் பிரதானமாக நான்கு இனத்தவர்கள் வாழ்ந்து வருகின்றனர். இந்த இனங்களுக்கு ஆட்சிக் கொள்கையில் அல்லது தத்துவத்தில் பாரபட்சம், ஒதுக்கல்கள் இடம்பெறுவதில்லை என்று சர்வதேசத்திற்கு காட்ட வேண்டிய அவசியம் இந்த அரசுக்கு ஏற்படவில்லை. ஏனெனில் சமூக உடமைவாத சோசலிச கொள்கை, தத்துவத்தின் வெளிப்பாடு இவ்வாறுதான் அமையும் என்பதை உலகிற்கு பறைசாட்டி இருக்கின்றது.

முஸ்லிம் சமூகத்திற்கு அரச கொள்கை மூலம் எந்த அநீதி, பாரபட்சம் ஏற்பட்டாலும் அதனை தட்டிக் கேட்க யாரும் முன்வரமாட்டார்கள் என்பது உறுதியாக தெரிகின்றது. வாக்களித்த இதே முஸ்லிம் சமூகமே அரசாங்கத்தின் நிலைப்பாடு சரி என்று நியாயம் சொல்லும் அளவிற்கு பிற்போக்கு சமூகமாக மாறி இருக்கின்றது. இந்த நாட்டில் முஸ்லிம்கள் காலா காலமாக அனுபவித்து வருகின்ற எந்தவிதமான உரிமைகள், சலுகைகள், கடமைகளுக்கு ஆபத்து ஏற்பட்டாலும் அதனை சரிகாணும் சமூகமாகவே என்.பி.பி. ஆதரவு முஸ்லிம் சமூகம் இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

ஏனெனில் பாராளுமன்றத்திற்கு தெரிவாகி இருக்கின்ற அக்கட்சி சார்பான உறுப்பினர்களிலும் அந்தளவிற்கு முதுகெலும்புள்ளவர்கள் இருப்பார்கள் என்று கருத முடியவில்லை. அதனால் எதிர்காலம் இந்த நாட்டில் முஸ்லிம் சமூகத்திற்கு சில சந்தர்ப்பங்களில் இருண்டதாக மாறினாலும் சந்தேகம் இல்லை. ஆபத்தான எந்தவொரு சட்டமூலத்தையும் எதிர்ப்பதற்கு பலமான எதிர்க்கட்சியும் இல்லை. அவ்வாறான தீர்மானங்கள் எடுக்கப்படுவதற்கு முன்னர் அறிந்துகொள்வதற்கு அல்லது அமைச்சரவைக்கு வருகின்ற போது அதன் சாதக பாதகங்களை எடுத்துக் கூறி எதிர்ப்பை வெளிப்படுத்த இனி எந்தவிதமான சந்தர்ப்பங்களும் இல்லை. அத்துடன் ஆளும் கட்சியின் பலம் தனிக்கட்சியாக 158 ஆசனங்களாக இருப்பதால் ஆளும் கட்சிக்குள் இருக்கின்ற முஸ்லிம் எம்.பி. க்கள் எதிர்த்தாலும் சட்டமூலத்தை நிறைவேற்ற முடியும். அந்தளவிற்கு அரசாங்கம் பலமுடையதாக இருக்கின்றது. முஸ்லிம்கள் அவர்களுக்கான உரிமை என்ற ஒரு விடயத்தை பேசும் பொது அது இனவாதமாக முத்திரை குத்த முயற்சி எடுக்கப்படும் என்ற அச்சம் காரணமாக ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் 09 முஸ்லிம் உறுப்பினர்களும் மௌனம் சாதிப்பதை தவிர வேறு எதுவும் இல்லை.

அத்துடன் இந்த நாட்டில் அரசியலில் ஈடுபட்டு அமைச்சர் பதவிகளை வகிக்கும் அளவிற்கு அல்லது உயர் பதவிகளை வகிக்கும் அளவிற்கு முஸ்லிம் சமூகம் கல்வியில் முன்னேறவில்லை என்ற கருத்தும் இந்த அமைச்சரவையில் முஸ்லிம் ஒருவரை அனுமதிக்காததால் பரப்பப்பட்டு வருகின்றது. மறுபுறமாக இரண்டு தேசிய பட்டியல் நியமனங்கள் வழங்கப்பட்டதால் அமைச்சர் பதவி வழங்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. எதுவானாலும் இந்த நாட்டில் பல்கலைக்கழக அனுமதி, தொழில் வாய்ப்பு என்று பல விடயங்களில் முஸ்லிம் சமூகத்திற்கும் தேசிய நீரோட்டத்தில் ஒட அந்தஸ்து கிடைக்க வேண்டும் என்பதற்காக குறைந்தபட்சம் இன விகிதாசாரமாவது கடைபிடிக்கப்பட வேண்டும் என்ற கணிப்பீடுகள் கடந்த காலங்களில் இருந்து வந்திருக்கின்றது. அந்த அடிப்படையில் பார்த்தால் தமிழ் சமூகத்திற்கு சந்தர்ப்பம் வழங்கப்படுவது போலி முஸ்லிம்களுக்கும் இன விகிதாசார அடிப்படையிலான 08 வீதமாவது கிடைக்கும் வாய்ப்பு இருக்கின்றது.

ஆனாலும் இந்த தேசிய மக்கள் சக்தி தேர்தலுக்கு முன்னர் இருந்தே இந்த நாட்டில் கடந்த பாராளுமன்றத்தில் அங்கம் வகித்த முஸ்லிம் அரசியல்வாதிகளை இனவாதிகள், இவர்கள்தான் இந்த நாட்டில் இன அடிப்படையிலான பாகுபாட்டை வளர்த்தவர்கள் என்று குற்றம்சாட்டி பூண்டோடு ஒழித்துக்கட்ட முற்பட்டதன் பின்னணி இதுதான் என்று இப்போது புரிகின்றது. இனி அரச கொள்கையில் முஸ்லிம்களுக்கென்று தனியாக எதுவும் வழங்கப்படுவதற்கான சாத்தியம் இல்லை. அப்படி இருந்தாலும் இதுவரையில் முஸ்லிம்கள் அனுபவித்து வருகின்ற தனித்துவமான உரிமைகளை முற்றாக ஒழித்துக்கட்டும் நிலை ஏற்படலாம் என்ற அபாய அறிவிப்பு இந்த அமைச்சரவைக்கு ஒரு முஸ்லிமையாவது நியமனம் செய்யாததில் இருந்து தெரிகின்றது. ஆனாலும் இலங்கை சுதந்திரம் அடைந்ததில் இருந்து இன்று வரையான புதிய அமைச்சரவை நியமனம் வரையிலான காலப்பகுதிகளை அவதானித்தால் அவை முஸ்லிம்களுக்கு பொற்காலமாக இருந்திருக்கின்றது.

1947 ஆம் ஆண்டு டி.எஸ். சேனாநாயகாவின் அரசாங்கத்தில் டி.பி.ஜாயா தொழில் அமைச்சராக நியமிக்கப்பட்டிருந்தார். 1952 இல் டட்லி அரசாங்கத்தில் எம்.சி.எம் கலீல் தொழில் சமூக சேவைகள் அமைச்சராக இருந்தார். 1953 இல் ஜோன் கொதலாவல அரசாங்கத்திலும் அவரே அதே அமைச்சு பொறுப்பை வகித்தார். 1956 பண்டாரநாயக்கா அரசாங்கத்தில் சீ.ஏ.எஸ். மரிக்கார் தபால் தொலைத் தொடர்புகள் மற்றும் வானொலி அமைச்சராக இருந்தார். 1959 தஹநாயக்கா அரசாங்கத்திலும் அவரே அதே பதவியை வகித்தார். 1960 இல் டட்லி அரசாங்கத்தில் எம்.சீ.எம் கலீல் உள்நாட்டலுவல்கள், கிரமிய அபிவிருத்தி அமைச்சராக இருந்தார் இவ்வாறாக 1966, 1970, 1977, 1983, 1988, 1994, 2001, 2005, 2010, 2015, 2019 என்று பதவிக்கு வந்த எல்லா அரசாங்கங்களிலும் அமைச்சரவை அந்தஸ்துள்ள முஸ்லிம் அமைச்சர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். வரலாற்றில் முஸ்லிம் அமைச்சர் ஒருவர் இல்லாத அமைச்சரவை இதுவாகும்.

2019 ஆம் ஆண்டு பதவிக்கு வந்த ஜனாதிபதி கோதாபய ராஜபக்ஷ பதவிப்பிரமாணம் செய்த போது தாம் சிங்கள மக்களின் ஜனாதிபதி, சிங்களவர்களின் வாக்குகளால் வந்தவர் என்று பகிரங்கமாக கூறினார். ஆனாலும் அவரது அமைச்சரவையில் கூட அலி சப்ரியை அமைச்சராக நியமித்திருந்தார். அத்துடன் ஹாபிஸ் நசீர் அஹமதுக்கும் பின்னர் அமைச்சர் பதவி வழங்கினார். இனவாத சிந்தனைக்கும் முஸ்லிம் விரோத சிந்தனைக்கும் அடிமையாகி இருந்த அவர்கூட முஸ்லிம்களை மதித்துள்ளார். அதே நேரம் இந்த நாட்டில் அரசியல்வாதியாக வர என்ன கல்வித்தகைமை இருக்க வேண்டும் என்று தொழில்சார் வல்லுனர் அமைப்போ அல்லது தேர்தல் திணைக்களமோ வரையறை செய்ததில்லை. அதனால் ஒருவர் தேர்தலில் வெற்றிபெற்று ஜனாதிபதியாக, அமைச்சராக அல்லது பாராளுமன்ற உறுப்பனராக இருப்பதற்கான கல்வித் தகைமை என்ன என்று அளவுகோள் கொண்டு அளவிட முடியாது.

நாட்டில் அமைச்சரவை உட்பட பதவிகள் வழங்கப்பட்ட போது அவரவர் திறமைகள் கவனத்தில் எடுக்கப்பட்டே இத்தகைய அமைச்சர் பதவி, பிரதி அமைச்சர் பதவி என்ற பகிரப்பட்ட நிலை இருந்து வருகின்றது. எவ்வாறாயினும் ஆட்சி மாற்றத்தின் பங்காளிகளில் முஸ்லிம் சமூகத்திற்கும் பாரிய பங்கு இருக்கின்றது.

சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி அதன் பாராளுமன்ற ஆசனங்களில் 10 ஆசனங்களை இழந்ததென்றால் அதற்கும் காரணம் முஸ்லிம் வாக்குகளாகும். முழுமையாக முஸ்லிம் வாக்காளர்கள் அநுரவை நம்பி அவர் நல்லதை செய்வார் என்று வாக்களித்தனர். இனியும் அந்த நம்பிக்கை வீண் போகாதபடி பாதுகாக்க வேண்டியது ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கா தலைமையிலான அரசாங்கத்தினதும் அமைச்சரவையினதும் பொறுப்பாகும்.



# கொழும்பு விகாரமகாதேவி பூங்காவுக்கு ஆளுநர் ஹனீப் யூசுப் கள ஆய்வு விஜயம்





கொழும்பு விகாரமகாதேவி பூங்காவுக்கு மேல் மாகாண ஆளுநர் ஹனீப் யூசுப் அண்மையில் கள ஆய்வு விஜயம் மேற்கொண்டு பூங்காவின் பல்வேறு பகுதிகளையும் சுற்றிப் பார்வையிட்டார். இங்கு அமைந்துள்ள சிறுவர்களுக்கான "சதுடு உயன" பகுதியின் பராமரிப்பு தொடர்பிலும் ஆளுநர் கவனம் செலுத்தி அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

நூற்றி நாற்பத்தினான்கு ஆண்டுகள் வரலாற்றைக் கொண்ட இந்த பூங்கா சுமார் 50ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது.

இதனை தலை நகரில் அமைந்துள்ள சிறந்த கவர்ச்சிகரமான பொழுது போக்கு பூங்காவாக பராமரிப்பது தொடர்பாக ஆராய்ந்து அறிந்து கொள்வதற்காகவே ஆளுநர் இந்த கள விஜயத்தை மேற்கொண்டார்.

# சீரற்ற காலநிலையால் உக்குவளை மக்கள் அவதி!

**(உக்குவளை ஜலீல்)**

சீரற்ற காலநிலையில் பெய்துவரும் மழைகாரணமாக உக்குவளை பிரதேசத்தில் சில இடங்களில் வீடுகளுக்குள் நீர் நிரம்பியதால் வீட்டிலுள்ளவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இந்நிலையில் மாத்தளை மாவட்டத்தில் அம்பன்கங்கை கோரலை, ரத்தொட்டை, வில்கமுவ, நாவுல, யட்டவத்த, பல்லேபொல, பலலேகல, மாத்தளை ஆகிய பகுதிகளில் மண்சரிவுகளுக்கான அபாயமிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது எனவே இப்பகுதிகளின் மேட்டு மற்றும் தாழ்நிலப்பகுதிகளில் வசிக்கும் மக்கள் எச்சரிக்கையாக இருப்பதுடன் மண்சரிவுகளுக்கான ஏதும் அடையாளங்கள் அறியப்பட்டால் அதுகுறித்து உடன் சம்பந்தப்பட்டவர்களது கவனத்துக்குக் கொண்டுவருவதுடன் அவ்வாறான பகுதிகளில் வசிப்போர் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் பள்ளிவாசல் திறந்து வைப்பு







**(பரீட் இக்பால்)**

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி வளாகத்தில் கொழும்பு - அல் ஹிக்மா நிறுவனத்தின் அனுசரணையில் ஜூம்மா பள்ளிவாசல் அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பள்ளிவாசல் திறப்பு விழாவிற்கு பிரதம அதிதியாக அல் ஹிக்மா நிறுவனத்தின் பணிப்பாளர் எம்.எச்.ஷேஹுஊத்தீன் (மதனி) அவர்கள் கலந்து திறந்து வைத்தார்.

மேலும் கௌரவ அதிதியாக யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் சற்குணராஜா அவர்களும் அனைத்து பீட பீடாதிபதிகளும் மூவின மாணவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

நான்கு மதத்தினருக்கும் சரிசமமாக தலா 2 ஏக்கர் காணி, அவரவர் மத ஸ்தலங்களை அமைக்க யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் சற்குணராஜா அவர்கள் ஒதுக்கி கொடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். தற்போது 4 மத ஸ்தலங்களும் அமைக்கப்பட்டு மத நல்லிணக்கம் ஏற்பட்டுள்ளது.




# வயதெல்லையற்ற வாசிப்பும் அதன் பரப்பும்

வாசிப்பு சமயம் சார்ந்த ஒரு பணி அல்ல அதேபோன்று அதற்கு வயதில்லை கிடையாது எல்லா சமயத்தினரும் வாசிக்கலாம் எல்லா மொழியையும் வாசிக்கலாம் தமக்கு விருப்பமான துறைகளில் தமக்கு விருப்பமான நூலாசிரியர்கள் படைப்பாக்கங்களை வாசிக்கலாம் வாசிப்புக்கு குறிப்பிட்ட பருவ காலமோ நேரமோ வயதுஇ எதுவும் கிடையாது.

வரம்பு வரையறைகள் இதுவுமற்ற ஒன்றாகத்தான் வாசிப்பு வயதளவில் காணப்படுகின்றது.

ஆனால், உளவியல் வயது பௌதிக வயது கொள்ளளவு ஆற்றல் போன்றவற்றுக்கு ஏற்ப வாசிப்பதற்கு தெரிவு செய்கின்ற புத்தகங்கள் அதன் அளவு அதன் உள்ளடக்க போன்றவற்றில் மூத்தவர்கள் சிறியவர்களுக்கு வழிகாட்ட வேண்டும்

வாசிப்பு ஒரு பொழுது போக்கு அம்சம் அல்ல.

அது வளமான வாழ்வுக்கான வழிகாட்டி. வாசிக்க வாசிக்க வாழ்வு வளமாக மாறும். சிந்தனை சீராகும். கருத்துக்கள் பிறக்கும். கற்பனைகள் எழும். அறியாமை இருள் அகன்றுவிடும். அறிவை நோக்கிய அலாதியான ஈடுபாடு பெருகும். எம்மைச்சூழ நிகழும் மர்மங்கள் விலகும். வாசிப்பு மட்டுமே மனிதனை தொடர்ச்சியாக உருவாக்கிக் கொண்டு செதுக்கிக்கொண்டு வல்லப்படுத்திக் கொண்டு பழையனவற்றை அகற்றிக்கொண்டு புதிய வற்றின் வழியாக மெருகூட்டிக்கொண்டிருக்கும்

நாங்கள் நினைப்பது போல வாசிப்பு குழந்தைகளுக்கு மட்டுமானதல்ல. பாடசாலை மாணவர்களுக்கானதுமல்ல.

இறுதி தூதராக முஹம்மதை (ஸல்) அல்லாஹ் நபியாக தெரிவு செய்யும் போது அவருக்கு வயது நாற்பது. இறைவன் ஏவிய முதல் வசனம் "வாசிப்பீராக" அதற்கு நபியவர்களது பதில் எனக்கு வாசிக்க முடியாது என்பது தான்.

ஆனாலும் எழுத்தும் வாசிப்பும் வாழ்வும் படைத்த இறைவனும் பின்னிப்பிணைந்தாற் போல அதனையே முதல் ஐந்து வசனத்திலும் இறைவன் மீள மீள வலியுறுத்தி கூறி அழுத்தமாகவே அதன் எல்லையற்ற செயற்பாட்டுக்கு தூண்டுதல் தருகின்றான்.

வாசிப்பு வாழ்நாள் நீடித்த வளமான செயல்பாடு வாழ்வை வளப்படுத்துகின்ற வழிப்படுத்துகின்ற செழுமைப்படுத்துகின்ற ஒரு செயற்பாடு மனித வாழ்வின் பெறுமதி அவனது சிந்தனையில் தான் தங்கி இருக்கின்றது. அவனது சிந்தனைக்கு வளம் சேர்ப்பது தான் வாசிப்பு நாற்பது வயது கடந்தும் வாசிக்க வேண்டும். வாசிக்க முடியாவிட்டால் முயற்சி செய்து வாசிக்க வேண்டும்.

படைத்த உமது இரட்சகனின் பெயரை வைத்து வாசிப்பீராக என்பது இந்த உலகில் உயிர் வாழும் வரை வாசிப்பீராக என்று அர்த்தம் கொள்ளலாம். அதுதான் இன்று வேறு வார்த்தையில் வாழ்நாள் நீடித்த கல்வியாக பரிணாமம் பெற்றுள்ளது life long education முதல் கட்டளை வாசிப்பீராக என்பது தான். எனவே குழந்தைகளுக்கு முதலில் பழக்க வேண்டியதும் வாசிப்புதான்.

காரணம் இஸ்லாத்தில் தொழுகையை ஏவுவதற்கு நியமிக்கப்பட்டுள்ள ஆரம்ப வயதெல்லை 7 மூன்று வருடங்கள் அதற்கு பயிற்சி தர வேண்டும். அதன் பிறகு பத்து வயது தாண்டியும் தொழாவிட்டால் தான் லேசாக தண்டிப்பதற்கும் தண்டிப்பதற்கும் பெற்றோருக்கு அனுமதி தரப்பட்டிருக்கின்றது.

ஆனால் வாசிப்பு பழக்கம் அதனை விடவும் முந்தியது. காரணம் சுமார் ஆறு வயதில் பிள்ளைகள் பாடசாலைக்கு உள்வாங்கப்படுகின்றனர். எனவே பருவ வயதின் வளர்ச்சிக்கும் விருத்திக்கும் அமைவான அளவில் வாசிப்பு பயிற்றுவிக்கப்பட்டிருக்க வேண்டும்.

வாசிப்பு எப்போதும் வணக்கமாக அமைந்து விடுகிறது. அது நிதானத்தை நிம்மதியை தருகிறது. வாசிப்பால் நீண்ட காலம் கூட வாழ முடியும்.

எமது சமூகம் வாசிப்பை விட்டும் ஏன் தூரமாகி விலகி இருக்கின்றது...

அது வாசிப்பு அமல் என்பதை இன்னும் விளங்கவில்லை விளக்கினாலும் ஏற்றுக்கொள்ள தயாரில்லை அது ஜீரணிப்பது மில்லை.

# அனர்த்தம் ஒரு இறையருள்; இறைவன் பால் மீண்டு வருவதற்கான சிகிச்சை!



முஹம்மத் பகீஹுத்தீன்

நாட்டின் பல பகுதிகளிலும் நிலவிவரும் மழையுடன் கூடிய சீரற்ற காலநிலை காரணமாக ஏற்பட்ட உயிரிழப்புகள் 15 இற்கு மேற்பட்டதாக உயர்ந்துள்ளது.

புத்தளம், பதுளை மற்றும் அம்பாறை மாவட்டங்களில் இந்த மரணங்கள் பதிவாகியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

98,635 குடும்பங்களைச் சேர்ந்த மொத்தம் 330,894 நபர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர், அதே நேரத்தில் 5,305 குடும்பங்களைச் சேர்ந்த 16,553 பேர் நாடு முழுவதும் 183 பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்துள்ளனர்.

இயற்கை அனர்த்தங்களை எப்படி பார்க்க வேண்டும்.

அனர்த்தங்கள் இறை நியதிகள். அது விதிவசமாக வரும். யாரும் தடுத்து நிறுத்த முடியாது.

அனர்த்தங்கள் இறைவனால்விதிக்கப்பட்ட சோதனை. இது இறை கட்டளைகளை மீறி, அத்துமீறிய வாழ்க்கை போக்கு கண்டவர்களுக்கு தண்டனையாகவும், நல்லவர்களாக இருந்து உயிரிழந்தவர்களுக்கு ஷஹாதத்தாகவும் ஏனைய மக்களுக்கு படிப்பினையாகவும் அமைகிறது.

மேலும் அனர்த்தம் என்பது படைத்த இறைவன் பால் மனிதன் மீண்டு வருவதற்கான ஒரு சிகிச்சையாகும். அது ஒரு திடீர் அதிர்வாக மனிதனுக்குள்ளே பாய்கிறது. தூங்கும் அவனது உணர்வுகளை எழுப்பி சரியான பாதைக்கு திருப்பி விடுகிறது. எனவே அனர்த்தம் ஒரு இறையருள்.

### எமது கடமை என்ன?

அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வேறுபாடுகள் பார்க்காமல் உதவுவதும் அவர்களின் மனோ நிலையை ஆற்றுப்படுத்துவதும் ஒரு தார்மீகப் பொறுப்பாகும்.

பாரிய வெள்ளம் மற்றும் புயல்காற்று காரணமாக நாட்டின் பல பாகங்களும் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ள. அண்மைக் காலமாக இயற்கை அனர்த்தங்கள் பரவலாக அதிகரித்து வருகின்ற ஒரு நிலையை நாம் காண்கிறோம். இடி, மின்னல், தீ, வெள்ளம், புவி நடுக்கம், எரி மலை, மண்சரிவு, கடல் கொந்தளிப்பு, சூறாவளி என்று பல்வேறு அனர்த்தங்கள் உலகளாவிய ரீதியாக அதிகரித்து வருகின்றன.

நபிமார்கள் காலத்திலும் இறைதூதர் முஹம்மத் (ஸல்) அவர்களின் காலத்திலும் நான்கு கலீபாக்களின் நல்லாட்சிக் காலங்களிலும் அனர்த்தங்கள் வந்துள்ளன.

மக்காவில் ஏற்பட்ட பஞ்சம், ஷாம் தேசத்தில் ஏற்பட் பிளேக் எனும் தொற்று நோய், உஹுத் மலையை ஆட்டம் காணச் செய்த பூகம்பம், உயிரினங்களை வாட்டி வதைத்த வறட்சிகள் போன்ற அனர்த்தங்கள் இஸ்லாத்தின் ஆரம்பகாலத்தில் எற்பட்ட இயற்கை அழிவுகளாகும்.

இயற்கை அழிவுகள் என்பது இறை நியதிகளாகும். அது சோதனைக்காகவும் நல்லடியார்களின் உயர்வுக்காவும் சிலபோது தண்டனைக்காகவும் வருகின்றன.

அப்போது பிராத்தனைகளில் ஈடுபடுவது, அல்லாஹ்விடம் இறைஞ்சுவது, பாவ மன்னிப்பு கோருவது நபி வழியாக அமைந்துள்ளன.

அனர்த்தங்கள் தரும் படிப்பினைகள்

உண்மையில் பாவங்கள் மனித சமூகத்தில் பரவுகின்றபோது அனர்த்தங்கள் ஊடாக அல்லாஹ் எம்மைத் தண்டிப்பான், சோதிப்பான். ஏனென்றால் பாவங்கள் அனைத்தும் சாபங்கள் நன்மைகள் அனைத்தும் அருள்கள்.

“ஓர் அனர்த்தம் ஏற்படுகிறதாயின் அதற்குக் காரணம் பாவமாக இருக்கும்“ என அலி (ரழி) அவர்கள் கூறுகிறார்கள்.

“மனிதர்கள் தங்கள் கைகளினால் எதைச் சம்பாதித்தார்களோ அதன் காரணமாக கடலிலும், தரையிலும் சீர்கேடுகளும் குழப்பமும் தோன்றி விட்டன. அவர்கள் திரும்பி வரவேண்டும் என்பதற்காக அவர்கள் செய்த சில செயல்களின் விளைவை சுவைக்கும்படி அவன் செய்கிறான். (30:41)

எனவே, அனர்த்தங்களின் போது பாவங்களிலிருந்து விடுபடுவது, நன்மைகளை அதிகமாகச் செய்வது, துஆ, இஸ்திஃபார்களில் ஈடுபடுவது, தனிப்பட்ட வாழ்க்கை குடும்ப வாழ்க்கை மற்றும் சமூக விவகாரங்களை சீர்செய்து கொள்வது முதலானவை சோதனைகளிலிருந்து காத்துக் கொள்வதற்கான ஒரு வழிமுறை என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இத்தகைய அனர்த்தங்கள் தண்டனையா, சோதனையா என்ற வாதப் பிரதிவாதங்களில் ஈடுபடுவதை விட, இத்தகைய அனர்த்தங்களின்போது நாம் எத்தகைய படிப்பினை பெற வேண்டும் என்பதே மிக முக்கியமானது.

இந்த உலகை மனிதன் ஆதிக்கம் செலுத்தினாலும் அது முழுக்க மனிதனின் கட்டுப்பாட்டில் இல்லை என்பதே இயற்கை அனர்த்தங்கள் புகட்டும் முதலாவது பாடமாகும்.

இங்கு அல்லாஹ்வின் சக்திக்கு முன்னால் மனிதனின் பலவீனம் உணரப்பட வேண்டும் என்பது இறைவன் நாட்டமாக இருக்கிறது.

இரண்டாவது இது அல்லாஹ்வின் பால் மீள்வதற்கான ஒரு சந்தர்ப்பம். சடவாதத்தில் மூழ்கியிருக்கும் மனிதனை மீண்டும் நேரான பாதைக்கு அழைக்கும் எச்சரிக்கை குரலாக அதனைப் பார்க்க வேண்டும்.

### மனித வாழ்க்கை ஒரு சோதனை

மனித வாழ்க்கை சோதனைகள் நிறைந்தது. உலக வாழ்வு ஒரு சோதனைக் களம் என்பதை அல்லாஹ் அல்குர்ஆனில் பல இடங்களில் வலியுறுத்திச் சொல்வதை காணலாம்.

“விசுவாசிகளே! பயம் மற்றும் பசியிலிருந்து ஏதாவது ஒன்றைக் கொண்டும் செல்வங்கள், உயிர்கள், கனிகளின் விளைச்சல்கள் ஆகியவற்றின் குறைவைக் கொண்டும் உங்களை நாம் சோதிப்போம்.“ (அல் பகரா: 155)

சோதனைகள் என்று சொல்கின்றபோது அது தீயதாக மாத்திரம்தான் அமையும் என்பதற்கில்லை. சிலபோது சோதனைகள் நன்மையான வடிவத்தில் அமைந்து விடவும் கூடும். அல்லாஹ் தீமையைக் கொண்டு எம்மை சோதிப்பதைப் போல நன்மையைக் கொண்டும் சோதிக்கலாம்.

“தீமையை (துன்பங்களை)க் கொண்டும் நன்மையை (இன்பங்களை)க் கொண்டும் பரீட்சிப்பதற்காக உங்களை நாம் சோதிக்கிறோம்...“ (அன்பியா: 35)

அதாவது, அல்லாஹ் தந்தும் சோதிப்பான் எடுத்தும் சோதிப்பான்.

வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் மாத்திரம்தான் சோதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று பலர் நினைக்கிறார்கள். அப்படியல்ல, பாதிக்கப்பட்டவர்கள் மட்டுமன்றி, பாதிக்கப்படாதவர்களும் சோதிக்கப்படுகிறார்கள்.



அவ்வாறு பாதிக்கப்படாதவர்கள் இந்த அனர்த்தத்தின்போது எவ்வாறு நடந்து கொள்கிறார்கள் என்பதை அல்லாஹ் பார்க்கிறான்.

“யார் தன்னுடைய சகோதரனுடைய கஷ்டத்தை நீக்கி வைக்கிறாரோ அல்லாஹ் மறுமை நாளில் அவர் எதிர்கொள்ளும் மிகப் பெரிய கஷ்டத்தை நீக்கி வைக்கிறான்.“ (புகாரி, முஸ்லிம்)

### ஆற்றுப்படுத்தும் போது கவனிக்கப்பட வேண்டிய விடயங்கள்:

பாதிக்கப்பட்டவர்களை ஆற்றுப்படுத்தும் போதுஅனர்த்தங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உளவள ஆலோசனை வழங்கும் போது கவனிக்கப்பட வேண்டிய விடயங்கள்.

கேட்டல்:

பாதிக்கப்பட்ட மக்களுடன் நேரடியாகச் சென்று அவர்களுடைய பிரச்சினை, கஷ்டம் என்பவற்றை பூரணமாகக் கேட்க வேண்டும். அவர்களுக்கு அவர்களுடைய உள்ளங்களில் இருக்கின்ற கஷ்ட நிலைமைகளை கதைப்பதற்கான சந்தர்ப்பங்களை வழங்க வேண்டும்.

உரையாடுதல்:

பாதிக்கப்பட்டவர்களுடனான உரையாடலின் போது முக்கியமாக நான்கு அம்சங்கள் கருத்திற் கொள்ளப்படுவது அவசியம்.

1) மனிதனுக்கு வருகின்ற அனைத்து துன்பங்களும், துயரங்களும் அல்லாஹ்விடமிருந்தே வருகின்றன என்ற இறை நம்பிக்கையை கொடுக்க வேண்டும்.

2) மறுமை பற்றிய நம்பிக்கையை ஞாபகப்படுத்த வேண்டும்.

3) இறை நாட்டப்படியே அனைத்தும் நடக்கும் என்ற உண்மையை உணர்த்த வேண்டும்.

4) வாழ்க்கை பற்றிய இஸ்லாமியக் கண்ணோட்டத்தைத் தெளிவாக விளங்கப்படுத்த வேண்டும்.

அல்லாஹ்வின் காவற்படை

உண்மையில் இத்தகைய அழிவுகள், ஆபத்துக்களிலிருந்து மனிதனைப் பாதுகாக்கக்கூடிய நம்பகமான ஒரு காவற்படை இருக்கின்றது. அது புலன்களுக்கு அப்பாற்பட்ட ஒரு படை. இரவு பகலாக மனிதனைப் பாதுக்க வல்ல மிகவும் சக்திவாய்ந்த ஒரு படை. அதுதான் உலகைப் படைத்து, பரிபாலித்து, இரட்சித்துக் காப்பாற்றுகின்ற இறைவனின் படையான வானங்களின் (மலக்குகளின்) படையாகும். இப்படையைப் பற்றியே அல்குர்ஆன் பின்வருமாறு கூறுகின்றது:

“(மனிதர்களில் ஒவ்வொருவருக்கும்) அவருக்கு முன்னும் அவருக்கு பின்னும் தொடர்ந்து வரக்கூடிய (மலக்குகள்) பலர் இருக்குகின்றனர். அவர்கள் அல்லாஹ்வின் கட்டளையை கொண்டு அவர்களைப் பாதுகாக்கின்றனர்“ (13:11)

இவ்வசனத்திற்கு இமாம் இப்னு கஸீர் தரும் விளக்கம் கவனத்துக்குரியதாகும்.

“ஓர் அடியானை நோக்கி மாறி மாறி வரும் மலக்குகள் இருக்கின்றனர். அவரை காவல் புரிய இரவில் ஒரு கூட்டம் வரும். அவர்கள் அவ்வடியானை எல்லா வகையான கெடுதிகள், ஆபத்துக்களிலிந்தும் பாதுகாப்பர்.

அடியானினால் நல்ல, கெட்ட செயல்களை பதிவு செய்வதற்காகவும் சில மலக்குகள் இரவும், பகலும் மாறி மாறி வருகின்றனர். ஒருவர் வலப்பக்கம் நிற்பர். மற்றவர் இடப்பக்கத்தில் நிற்பர். வலப்பக்கத்தில் நிற்பவர் நன்மைகளை பதிவு செய்வர். இடப்பக்கத்தில் உள்ளவர் தீமைகளை பதிவுசெய்வார். மேலும் இரு மலக்குகள் அவரை காக்கும் பணியில் ஈடுபட்டிருப்பர். அவர்களில் ஒருவர் முன்னால் இருப்பர், மற்றவர் பின்னால் இருப்பர். இவ்வாறு பகலில் நால்வரும் இரவில் நால்வரும் எப்போதும் அடியானோடு இருப்பர். இது குறித்து இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் விளக்கம் தரும்போது : “மலக்குகள் முன்னாலும், பின்னாலும் நின்று அவனைக் காக்கின்றனர். அல்லாஹ்வின் நிர்ணயம் (கத்ர்) வந்துவிடும் சந்தர்ப்பத்தில் மட்டும் தூர விலகிச் சென்றுவிடுகின்றனர்.“ என்று கூறியுள்ளார்.

### மலக்குகளின் பாதுகாப்பை பெறுவது எப்படி?

மலக்குகளின் பாதுகாப்பைப் பெற்றுக்கொள்ளும் வழிவகைகளையும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் செல்லித் தந்துள்ளார்கள்.

உதாரணமாக, ஒருவர் படுக்கைக்குச் செல்ல முன்னர் ஆயத்துல் குர்ஸியை ஓதினால் அவர்களுக்குப் பின்புறத்திலிருந்து வரும் ஒரு மலக்கு அவரை அடுத்த நாள் காலை வரை காவல் புரிவர். எத்தகைய ஷைத்தானும் அவரை அனுக மாட்டா. (புகாரி)

“ஒருவர் மஃரிபை தொடர்ந்து நான்காம் கலிமாவை பத்துத் தடவை ஓதினால் அடுத்த நாள் கலை வரை அவரை ஷைத்தானிலிருந்து பாதுகாக்கும் ஒரு காவற்படை (அல்லாஹ்வின் பக்கமிருந்து) அனுப்பி வைக்கப்படும்.“

காலை, மாலை உட்பட விஷேட சந்தர்ப்பங்களில் ஓதக்கூடிய துஆக்களும் அல்லாஹ்வின் உதவி மலக்குகள் மூலம் கிட்ட துணைபுரிபவையாகும்.

உதாரணமாக நபியவர்கள் ஓதிய பின்வரும் துஆவைக் குறிப்பிடலாம்:

“யா அல்லாஹ்! நான் இடிபாட்டில் (அகப்பட்டு மரணிப்பதில்) இருந்து உன்னிடம் பாதுகப்புத் தேடுகின்றேன். (மலை முதலானவற்றிலிருந்து) விழுவதில் (விழுந்து மரணிப்பதில்) இருந்தும் உன்னிடம் பாதுகாப்பு தேடுகின்றேன். கவலை, நீரில் மூழ்குதல், நெருப்பில் எரிதல், முதுமை ஆகியவற்றிலிருந்தும் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகின்றேன். மரண வேளையில் ஷைத்தான் என்னைப் பிடிப்பதிலிருந்தும் பாதுகப்புத் தேடுகின்றேன். (விஷஜந்துக்களால்) தீண்டப்பட்டு நான் மரணத்தைத் தழுவுவதை விட்டும் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகின்றேன்.“

அனர்த்தங்கள், ஆபத்துக்களிருந்து மனிதர்களைக் காப்பாற்றவல்ல ஒரு தெய்வீகப் படை இருப்பது போல ஒரு தெய்வீக ஆயுதமும் உண்டு. அதுவே (துஆ) பிரார்த்தனையாகும். “பிரார்த்தனை என்பது இறைவிசுவாசியின் ஆயுதமாகும்“.

எனவே மனிதன் எப்போதும் அபாயங்களை, ஆபத்துக்களை அனர்த்தங்களை எதிர்நோக்கியிருப்பவன். யுத்தங்கள், கலவரங்கள், முதலானவற்றை அவன் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இடி, மின்னல், தீ, வெள்ளம், புவி நடுக்கம், எரி மலை, மண்சரிவு, கடல் கொந்தளிப்பு, முதலான இயற்கை அனர்த்தங்களுக்கு முகம்கொடுக்கும் நிலையும் அவனுக்கு உருவாவதுண்டு. கொடிய மிருகங்கள், விஷ ஜந்துக்களினாலும் மனிதனுக்கு ஆபத்துக்கள் விளைவதுண்டு. பகைமை கொண்டவர்களின் சதிகள், சூழ்ச்சிகள் முதலானவையும் அவனைச் சூழ்ந்து உள்ளன.

இவற்றுக்கு அப்பால் எண்ணிலடங்கா நோய்கள் மனிதனை குறிவைத்துள்ளன. எல்லா ஆபத்துக்கலிருந்தும் தப்பிப்பிழைக்கும் ஒரு மனிதன் இறுதியில் முதுமை என்ற ஆபத்தை எதிர் கொண்டு மரணத்தைத் தழுவ நேரிடுகின்றது. இவ்வாறு ஆபத்துக்கள் நிறைந்த இவ்வுலகில் மனிதன் எப்படி தன்னைக் கப்பாற்றிக் கொள்வது என்று சிந்திப்பது இயல்பானதே. அதற்கு மனிதன் பல்வேறு தற்காப்பு முயற்சிகளை எடுப்பதுண்டு.

ஆயினும் எல்லா தற்காப்பு, முன் எச்சரிக்கை, பாதுகாப்பு நடவடிக்கைகளையும் மீறி நாளந்தம் அழிவுகளும் அனர்த்தங்களும் நடந்த வண்ணமே உள்ளன. இதனால் தான் நபி (ஸல்) அவர்கள் காலை மாலை ஓதும் தூஆக்களை கற்றுத் தந்துள்ளார்கள். காலையிலும் மாலையிலும் ஓதுமாறு நபிகளார் காட்டித் தந்த அவ்ராதுகளை அன்றாடம் ஓதும் ஒரு அடியான் நிச்சயமாக அல்லாஹ்வின் காவற்படை கொண்டு பாதுகாக்கப்படுவான்.

# நாளைய உலகுக்கு நற் பிரஜைகளை உருவாக்குவது நம் அனைவரினதும் பொறுப்பு

**அஷ்ஷெய்க் மௌலவி ஸக்கி (அலவிய்யதுல் காதிரி)**






**(பீ.எம் முக்தார்)**

வரலாற்று புகழ் பெற்ற பேருவளை கெச்சிமலை தர்கா பள்ளியில் இயங்கிக் கொண்டிருக்கும் அலவியா இளைஞர் முன்னணி, “இஸ்லாமிய அடிப்படைகள்” எனும் தொனிப்பொருளில் ஒரு நாள் வதிவிடப் பயிற்சி செயலமர்வொன்றை கெச்சிமலை பள்ளிவாசலில் நடாத்தியது.

சுன்னத்வல் ஜமா அத்தின் ஆத்மீகத்துறைக்கான அடிப்படைப் பயிற்சிகளை வழங்கி இளம் வாலிப சந்ததிகளை புடம் போடும் பயிற்சிப்பட்டறையாக அமைந்த இந்த செயலமர்வு சனி மற்றும் ஞாயிறு இரு தினங்களையும் உள்ளடக்கி ஒரு நாள் செயலமர்வாக இடம் பெற்றது.

பேருவளையையும் அதனை அண்டிய பகுதிகளையும் சேர்ந்த பாடசாலைகளில், தரம் 6,7,8 களில் பயிலும் சுமார் 50 இளம் மாணவர்கள் இச் செயலமர்வில் கலந்து கொண்டனர்.

இங்கு உரையாற்றிய ஸக்கி அஹ்மத் ஹாஜியாரின் உரையில், இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள், கணவர்கள், தந்தைகள், வழிகாட்டிகள் ஆத்மீக பெரியார்கள், ஆசிரியர்கள் என்று பல பொறுப்புக்களையும் சுமக்கக் கூடியவர்களாகின்றனர். எனவே நாளைய உலகுக்கு இவர்களை நற்பிரஜைகளாக உருவாக்கிக் கொடுக்கும் தார்மீகப் பொறுப்பு எங்கள் அனைவர் கைகளில் தான் உள்ளது.

வருங்கால சந்ததிகளின் ஆத்மா, சிந்தனை, செயற்பாடுகள், குடும்ப வாழ்வு, சுற்றுச் சூழல், சமூகச் செயற்பாடுகள் உள்ளிட்ட சகல துறைகளையும் தூய்மைப் படுத்தி, உடல், உள, சமூக, ஆன்மீக ரீதியில் பக்குவப் படுத்துவது குறித்த பயிற்சியை சூபித்துவம் எமக்கு கற்றுத்தருகிறது.

அந்த அடிப்படையில் இளைஞர், யுவதிகளை சிறந்த சமூகமாக உருவாக்கும் பொறுப்புதாரிகள் நாம். இந்த பக்குவமே இந்த பாசறையில் வழங்கப்படுகிறது. இதனால் வலிமார் பெருந்தகைகள் அடங்கப்பட்டுள்ள இந்த ஆண்மீகச் சூழலில் எமது இளம் சந்ததிகளுக்கு ஒரு வரப்பிரசாதமாக, இந்தப் பயிற்சிப் பட்டறை அமையும் என்பதில் ஐயமில்லை என்றார்.

# திருகோணமலையில் வெள்ளப்பெருக்கு களத்தில் இம்ரான் எம். பி

**(எஸ்.ஏ.பறூஸ்)**

திருகோணமலை மாவட்டத்தில் பெய்து வரும் தொடர் மழை காரணமாக தாழ்நில பகுதிகள் பல வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. நீரில் மூழ்கியுள்ள கிண்ணியா மூதூர் பகுதிகளுக்கு (25) பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் நேரில் விஜயம் செய்து நீர் வடிந்தோடுவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

இதன்போது கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் தொடர் மழையால் திருகோணமலை மாவட்டத்தின் பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. பிரதேச சபை ,நகர சபை , பிரதேச செயலக ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் உதவியுடன் நீரை



வடிந்தோட செய்யும் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம். ஆனால் பல இடங்களில் பெகோ இயந்திர தேவைப்பாடு உள்ளது. ஆகவே தனியாரிடம் இருந்து இதை பெற்றுக்கொடுக்க தேவையான நடவடிக்கையை அரசு அவசரமாக முன்னெடுக்க வேண்டும். அத்துடன் பாதிக்கப்பட்ட மக்களுக்கான சமைத்த உணவுகளை வழங்க தேவையான நடவடிக்கையையும் எடுக்குமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளேன்.

இந்த நேரத்தில் களத்தில் நின்று பணியாற்றும் அரச ஊழியர்கள் மற்றும் பொதுமக்களுக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என தெரிவித்தார்.

# தேசிய மட்ட போட்டியில் ஒலுவில் அல்ஹம்றா வெற்றி



**(இஸட்.ஏ.றஹ்மான்)**

மாத்தறையில் நடைபெற்ற Sri Lankan School Athletic Association Sir John Tarbat Junior Champion Ship -2024 தேசிய மட்டப் போட்டித் தொடரில் ஒலுவில் அல்-ஹம்றா தேசிய பாடசாலையின் மாணவர்கள் வெற்றிவாகை சூடியுள்ளனர்.

அந்த வகையில் நீளம் பாய்தல் போட்டியில் யூ.அப்துள்ளா இரண்டாம் இடத்தினையும் நீளம் பாய்தல் Merit Standards போட்டியில் மர்றைஹானும் 200 M Merit Standards ஓட்டப் போட்டியில் யூ.அப்துள்ளாவும் 4×100M அஞ்சல் ஓட்டப் போட்டியில் merit standards ல் யூ.அப்துள்ளா, எம்.ஆர். ஏ.எச் றைஹான், என்.எம்.நுஸைக், எம்.எப்.அல்ஸாம் மசாரிப் ஆகிய மாணவர்கள் வெற்றி பெற்று பாடசாலைக்கும் ஊருக்கும் பெருமை சேர்த்துள்ளனர்.

இம் மாணவர்களுடன் பயிற்றுவிப்பாளர் ஏ.அஸ்மத் சஹி ற்கும் பாராட்டப்பட்டார்.

# திறக்கப்படாமல் களைகள் நிறைந்து காணப்பட்ட தலாவ சந்தைக் கட்டிடத்தைப் பார்வையிட்ட வட மத்திய மாகாண ஆளுநர்

**(எம்.ரீ.ஆரிப் அநுராதபுரம்)**

கடந்த அரசாங்கத்தின் போது தலாவ பிரதேச சபை மூலம் 2017 ஆம் ஆண்டு 97 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப் பட்ட தலாவ வாராந்த சந்தை கட்டிடம் திறக்கப்படாமல் களைகள் வளர்ந்து வருவதாக பிரதேச வாசிகள் மற்றும் வியாபாரிகளும் வடமத்திய மாகாண ஆளுநர் வசந்த ஜினதாசவிடம் விடுத்த வேண்டுகோளின் பேரில் அவர் அங்கு களவிஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

இதன்போது வியாபாரிகள் தெரிவிக்கையில் தற்போது காணப்படும் சிறிய குறைபாடுகளை திருத்தம் செய்து இந்த சந்தை தொகுதியை திறந்து தருமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதன்படி மிக விரைவில் குறித்த குறைபாடுகளை திருத்தம் செய்து சந்தை கட்டிட தொகுதியினை திறப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு



அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

இது தவிர தம்புத்தேகம விசேட பொருளாதார மத்திய நிலைய வியாபார நடவடிக்கைகளுக்கு மரக்கறி வகைகளை கொண்டு வரும் வாகனங்களை நிறுத்துவதற்கு தரிப்பிடம் ஒன்று இல்லாமை பெரும் குறையாக இருப்பதாக தெரிவித்தனர்.

இதன் போது வேறொரு இடத்தை கண்காணிப்பு செய்த ஆளுநர் வியாபாரிகளுடன் சிநேகபூர்வமாக கலந்துரையாடியதுடன் அங்கு காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்து தற்போது தம்புத்தேகம விசேட பொருளாதார மத்திய நிலையத்துக்கு முன்னால் உள்ள பழைய சந்தை தொகுதியை புதிய மத்திய நிலையத்துடன் இணைத்து வெற்றிடமாகவுள்ள அந்த இடத்தை காபட் இட்டு வாகன தரிப்பிடத்தினை உருவாக்குவதற்கு ஆளுநர் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கண்டி மாவட்டத்தில் 12 பிரதேச செயலகப் பிரிவுகளில் மண்சரிவு அபாயம்

**( ரஷீத் எம். றியாழ்)**

கண்டி மாவட்டத்தில் 12 பிரதேச செயலகப் பிரிவுகளில் மண்சரிவு அபாயம் நிலவுவதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் தெரிவித்துள்ளது.

கண்டி மாவட்டத்தில் ஹரிஸ்பத்துவ, மெததும்பர, கண்டி கங்கவட்ட கோரளை, உடுதும்பரை, தொலுவ, யட்டிநுவர, உடபலாத்த, பாத்த ஹேவாஹெட்ட, உடுநுவர, பாத்ததும்பர மற்றும் தெல்தோட்டை ஆகிய இடங்களில் மண்சரிவு ஏற்படும் அபாயம் உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து இப்பிரதேச குடியிருப்பாளர்கள் விழிப்பாக இருக்குமாறும் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

# சகல துறைகளிலும் பிரகாசித்த வேதாந்தி சேகு இஸ்ஸதீன்!

(சியாத் எம். இஸ்மாயில்)

இலங்கை முஸ்லிம்களின் மூத்த அரசியல்வாதி, சட்டத்தரணி, பேச்சாளர் எழுத்தாளர், கவிஞர், இலக்கியவாதி, ஆசிரியர் என பன்முக ஆளுமைகளை தன்னகத்தே கொண்ட வேதாந்தி எம்.எச். சேகு இஸ்ஸதீன் சிறிது காலம் நோய் வாய்ப்பட்டிருந்த நிலையில் தனது 80ஆவது வயதில் கடந்த வியாழக்கிழமை (28) அக்கரைப்பற்றில் காலமானார்.

வேதாந்தி சேகு இஸ்ஸதீன் கிழக்கு மாகாணத்தில் அம்பாரை மாவட்டத்தின் அக்கரைப்பற்றில்1944 ஆம் ஆண்டு மே மாதம் 12 திகதி பிறந்தார். 1982ஆம் ஆண்டு சட்டக்கல்லூரி மாணவராக இணைந்து கொண்டு தொழில்சார் சட்டத்தரணியான இவர் 1986 ஆம் ஆண்டு மறைந்த தலைவர் மர்ஹூம் எம். எச்.எம். அஷ்ரபுடன் இணைந்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் வளர்ச்சிக்காக முழுப்பங்களிப்பையும் அளப்பரிய தியாகத்தையும் செய்து கிழக்கு மாகாணத்தில் இக்கட்சியின் உருவாக்கத்திற்கு பங்களிப்புச் செய்தவராவார்.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் பின்னர் இணைந்த வட-கிழக்கு மாகாண சபையின் முதலாவது எதிர்க்கட்சியின் தலைவர் என மக்களினால் அழைக்கப்பட்டவர்.

பிரதித் தவிசாளராக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை வளர்த்தெடுப்பதில் பங்களிப்பு செய்த அவருடைய பணிகளையும், தியாகங்களையும் என்றுமே மறக்க முடியாதவை.

ஏற்றுமதி அபிவிருத்தி அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சராகவும், கிராமிய பொருளாதார அபிவிருத்தி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சராகவும், தகவல் வெகுசன ஊடகப் பிரதி அமைச்சராகவும், பாராளுமன்ற உறுப்பினராகவும் நீண்டகாலம் பணியாற்றியதுடன் முஸ்லிம் சமூகத்திற்கும் பங்காற்றியுள்ளார்.

இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் பிராந்திய வானொலியான அக்கரைப்பற்று பிறை எப்.எம். சேவையின் ஸ்தாபகரான இவர், முஸ்லிம் ஊடகவியலாளர்களுடன் இணைந்து செயலாற்றியதுடன் வளர்ச்சிக்காகவும் அரும்பெரும் சேவையாற்றினார்.

காலஞ்சென்ற சேகு இஸ்ஸதீன் இலக்கியத்துறைக்கு வழங்கிய பங்களிப்புக்கள் தமிழ் இலக்கிய உலகில் இன்றளவும் பேசப்படுவதுடன், வேதாந்தி என்ற புனைப்பெயரில் கவிதைகள் உட்பட பல்வேறு இலக்கிய படைப்புக்களை வழங்கியுள்ளார்.

இவரது 80ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு அண்மையில் நடைபெற்ற வெற்றிவிழாக் கொண்டாட்ட "வரலாறாகும் வேதாந்தி" நிகழ்வில் " சேகு இஸ்ஸதீன் ஆக்கிய "நானொரு முஸ்லிம்" என்ற நீண்ட கவிதையை அவரே வாசித்தளித்து வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இக் கவிதையில்...

மனித நீதி எனது வரம்புகள்.  
மனித நியாயம்  
எனது சட்டங்கள்.

சாந்தி எனக்கு தந்தை  
வழிச் சொத்து.  
சமாதானம் எனக்கு  
தாய் வீட்டுச் சீதனம்.  
நான் மனுநீதிக்காய்  
குரலெழுப்பும் ஒரு  
மானுட நேயன்.

சமத்துவம் எனது  
அத்திவாரம்.  
சகோதரத்துவம்  
எனது வாசஸ்தலம்.

சமூகங்களிடையே  
சமரசம் காணும்  
ஒரு சமாதானப் பாலம் நான்.

எல்லா மொழிகளுக்கும்  
எழில் சேர்த்து எல்லாரையும்  
சமமாய்க் கௌரவித்து,

எல்லார் மீதும் பாசம்  
வைத்துள்ள ஓர் இலட்சியப்  
பிரபஞ்சவாதி நான்.  
அல்லாஹ்வுக்கு மாத்திரமே  
அடிமையான  
இறைதூதர் தொண்டர் நான்.

நான் மனிதரில் சிறந்த  
முஸ்லிம்.  
அதில் எந்த விட்டுக்  
கொடுப்புக்கும் இடமில்லை."

அன்னாரது மகள் ஹசனா சேகு இஸ்ஸதீன் பெண்ணிய ஆர்வலராகவும் வழக்கறிஞராகவும் தற்போதைய பிரதமரின் தனிப்பட்ட செயலாளராகவும் கடமையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு மாகாணத்தில் வாழ்ந்த இவர், மூவின மக்களின் அன்புக்குப் பாத்திரமானவரவராகவும் பிரதேசவாதமற்ற மூத்த அரசியல்வாதியும் திகழ்ந்தார்.

அன்னாரது ஜனாஸா கடந்த 28 திகதி மாலை அவரது வசிப்பிடமான அக்கரைப்பற்று தைக்கா நகர் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

அன்னாருடைய இழப்பால் துயருற்றிருக்கும் அவருடைய குடும்பத்தினருக்கும், உறவுகளுக்கும் ஆழ்ந்த அனுதாபங்கங்களைத் தெரிவிப்பதோடு, ஜன்னத்துல் பிர்தௌஸ் எனும் உயர்ந்த சுவனம் கிடைக்க வல்ல இறைவனை பிரார்த்திப்போம்.



# அரசியல் யாப்பு தொடர்பிலான ஷூரா சபையின் பயிற்சி பட்டறை

தேசிய ஷூரா சபையின் அரசியல் விவகாரங்களுக்கான உபகுழுவின் ஏற்பாட்டில் கடந்த 24.11.2024 ஞாயிற்றுக்கிழமை இலங்கையின் அரசியல் யாப்பு தொடர்பான பயிற்சி பட்டறை கொழும்பில் நடைபெற்றது.

ஷூரா சபையின் தலைவர் அஷ்ஷைக் எஸ். எச்.எம். பளீல் அவர்களது தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் செயலாளர் சட்டத்தரணி ரஷீத் எம் இம்தியாஸ், அரசியல் விவகாரங்களுக்கான உபகுழுவின் தலைவர் ஷாம் நவாஸ் ஆகியோரும் உரைகளை நிகழ்த்தினர்.

உப தலைவர்களான சட்டத்தரணி ஜாவித் யூசுப், எம்.எச் எம். ஹசன் ஆகியோருடன் சூரா சபையின் செயற்குழு மற்றும் செயலகக் குழு உறுப்பினர்கள், முஸ்லிம் கவுன்ஸில் தலைவர் என்.எம்.அமீன், பேராசிரியர் ரஸீன் பாபு, சிரேஷ்ட சட்டத்தரணி நத்வி பஹாவுத்தீன்,முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த உலமாக்கள், புத்திஜீவிகள், சட்டத்தரணிகள், சமூக ஆர்வலர்கள், செயற்பாட்டாளர்கள், அரசியல் ஈடுபாடுள்ளவர்கள் என சுமார் 50 பேர் கலந்து கொண்டனர்.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் சகோ.எம்.ஏ.எம்.ஹகீம்,







Concerns and Constrains of the Present Constitution - The way forward (தற்போதைய அரசியல் யாப்பில் உள்ள அக்கறைகளும் நிர்பந்தங்களும்) என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார். தென்கிழக்கு பல்கலைக்கழக கலை, கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம். எம். பாஸில் அவர்கள் "Muslim Minority Concerns a Critical Perspective" (முஸ்லிம் சிறுபான்மையினரது அக்கறைகள் முக்கியமான ஒரு கண்ணோட்டம்) என்ற தலைப்பிலும், A Muslim perspective on Enshrining and protection and promoting Equality via constitutional Reforms" (அரசியல் யாப்பு சீர்திருத்தங்களில் சமத்துவத்தை இணைத்தல் மற்றும் பாதுகாத்தல் மற்றும் ஊக்குவித்தல் பற்றிய முஸ்லிம்களது முன்னோக்கு) என்ற தலைப்பில் சட்டத்தரணி மாஸ் யூஸுப் அவர்களும் விஷேட ஆய்வுரைகளை நிகழ்த்தினர்.

அதன் பின்னர் குழுக் கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. இறுதியில் எதிர்காலத்தில் ஐந்து கட்ட வேலை திட்டங்களை முன்னெடுப்பதற்காக 10 பேர் கொண்ட ஒரு செயற்குழு நியமிக்கப்பட்டது.

இலங்கையின் அரசியல் யாப்பில் திருத்தங்கள் கொண்டுவரப்பட வேண்டும் என்ற கருத்து பல மட்டங்களிலும் தெரிவிக்கப்பட்டு வருவதனால் தற்போதைய அரசும் இது தொடர்பாக முயற்சிகளை செய்து வரும் சூழ்நிலையில் முஸ்லிம் சமூகத்தின் அபிலாசைகள், தனித்துவங்கள் என்பவற்றை கருத்திற் கொண்ட நிலையில் அரசியல் யாப்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்கள் முன்மொழியப்பட வேண்டும் என்ற கருத்தில் தேசிய சூரா சபை இருப்பதனால் இத்தகைய முன்மொழிவுகளை உள்ளடக்கிய அறிக்கையொன்று தயார் செய்யப்படுவற்கான சிந்தனைக் கிளர்வு நிகழ்வாக இந்த பயிற்சி பட்டறை அமைந்தது.

முஸ்லிம் சமூகத்தில் உள்ள துறைசார் வல்லுனர்கள், சட்டயாப்பு தொடர்பான ஆழிய அறிவு கொண்டவர்கள், மற்றும் புத்திஜீவிகளது கருத்துக்களை உள்வாங்கிய நிலையில் முறையாகவும் ஒழுங்காகவும் இந்த ஆவணம் தயாரிக்கப்பட வேண்டும் என்ற வகையில் அந்த முயற்சியின் முதல் கட்டமாக மேற்படி பயிற்சி பட்டறை ஏற்பாடு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

தெரிவு செய்யப்பட்ட செயற்குழு, முஸ்லிம் சமூக நிறுவனங்கள் மற்றும் அரசியல்வாதிகள் போன்றது கருத்துக்களை சேகரிக்க இருப்பதுடன் ஏற்கனவே முஸ்லிம் மற்றும் முஸ்லிம் அல்லாத அமைப்புக்கள் ஆகியவற்றால் தயாரிக்கப்பட்ட இது தொடர்பான அறிக்கைகளையும் ஆய்வுக்கு உட்படுத்தி தமது பணியை மேற்கொள்ளவிருக்கிறது. கால தாமதமின்றி இயன்றவரை அவசரமாக அக்குழு இப்பணியை அவசரமாக நிறைவு நிறைவு செய்ய வேண்டும் என தேசிய சூரா சபை வேண்டியிருக்கிறது.

அரசியல் யாப்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்கள் தொடர்பான முன்மொழிவுகளை தேசிய சூரா சபைக்கு முன் வைக்க விரும்புவோர் சூரா சபையின் team.nshoora@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்க முடியும் எனவும் அது தெரிவிக்கிறது.

## ஐ.தே.க தலைமைப் பொறுப்பை சஜித்திடம் ஒப்படைக்கவும்:

# ரணிலுடன் பேச நாம் தயார்

**பத்திரிகையாளர் மாநாட்டில் ஹர்ஷன ராஜகருண**



ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பொறுப்பை சஜித் பிரேமதாசவிடம் ஒப்படைக்க ரணில் விக்கிரமசிங்க தயாராக இருந்தால், மீண்டும் சிறிகொத்தவுக்கு வருவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தயாராக இருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா தெரிவித்துள்ளார்.

"ரணில் விக்ரமசிங்க இலங்கையில் இல்லை. அவர் வந்ததும் நாங்கள் கலந்துரையாட எதிர்ப்பார்த்துள்ளோம்."

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய ராஜகருணா, அனைத்து வலதுசாரி சக்திகளையும் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணையுமாறு அழைப்பு விடுப்பதாக தெரிவித்தார்.

"ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட அனைத்து வலதுசாரி அரசியல் செய்யும் குழுக்களுக்கும் ஒன்றிணைய வேண்டும் என்று நாங்கள் எதிர்ப்பார்க்கிறோம். ரணில் விக்கிரமசிங்க அவர்களும் ஐக்கிய தேசியக் கட்சியின் அனைத்து உறுப்பினர்களும் இக்கட்சியுடன் ஒன்றிணைந்து இந்தப் பிரிவினையை இல்லா தொழித்து எதிர்காலத்தில் ஒரே வேலைத்திட்டத்தை முன்வைக்க பாடுபட வேண்டும் என்று கோரிக்கை விடுக்கிறோம். ஐக்கிய மக்கள் சக்தி, ஐ.தே.க குழுக்களை ஒன்றிணைத்துக் கொண்டு எதிர்காலத்தில் பயணிக்க வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும்." எனத் தெரிவித்தார்.

## கல்கமுவ பிரதேச செயலாளர் பிரிவின் 550 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்



கல்கமுவ பிரதேச செயலாளர் பிரசன்ன ஹேரத்தின் வழிகாட்டலில் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு பிரதேச செயலக நலன்புரி சங்கத்தின் லொத்தர் சீட்டு விற்பனையின் மூலம் கிடைத்த நிதியைக் கொண்டு 12 லட்சம் ஷரூபா செலவில் கல்கமுவ பிரதேச செயலக பிரிவிலுள்ள 550 சிங்கள, தமிழ் , முஸ்லிம் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் பகிர்ந்தளிக்கும் நிகழ்வு பிரதேச செயலக வளவில் இடம்பெற்றது.

அத்துடன் பாடசாலை மாணவர்களுக்கு மா மரக்கன்றுகள் இலவசமாக வழங்கப்பட்டன. வத்துப்பிட்டிவல ஏ.டி.ஜி முதலீட்டு வலயத்தின் அனுசரனை யுடன் மாணவர்களுக்கு விசேட கருத்துரைகளும் வழங்கப்பட்டன. பேராதனை கல்வியற் பீட சிரேஷ்ட விரிவுரையாளர் சவணதிலக்க கஜதீரவின் விரிவுரை நிகழ்த்தப்பட்டது.

கலந்து கொண்ட சகல மாணவர்களுக்கும் பகல் போசனமும் வழங்கப்பட்டது. இந் நிகழ்வில் கேகாலை மாவட்ட அரசாங்க அதிபர் ரஞ்சன் ஜயசிங்க மேலதிக மாவட்ட செயலாளர் திலிப் நிஷாந்த உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

## மரக் குவியல் உபகரணங்களுடன் மூன்று இராணுவ வீரர்கள் கைது

**(எம்.ரீ.ஆரிப் அநுராதபுரம்)**

அனுமதிப்பத்திரமின்றி அங்கிகரிக்கப்படாத தனியார் மரக் கொட்டகை ஒன்றை நடாத்திச் சென்ற இராணுவ சிப்பாய்கள் மூவரை மரக் குவியல் மற்றும் உபகரணங்க ளுடன் கைது செய்துள்ளதாக பிரியங்கரகம பொலிசார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் கல்நேவ வுல்நேவ பிரதேசத்தில் அமைந்துள்ள இராணுவ முகாமில் கடமையாற்றும் எப்பாவல ஹல்மில்லேவ , பழுகஸ்வெவ விஜிதபுர மற்றும் கல்கமுவ பாழுவ ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இரு சாதாரண வீரர்களும் கோப்ரல் ஒரு வருமாவர்.

கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றிற்கமைய பிரியங்கரகம பொலிஸ் நிலைய பொறுப்பதி காரி பொலிஸ் பரிசோதகர் லக்சிறி உள்ளிட்ட பொலிஸ் குழுவினர் எப்பாவல இஹல ஹல்மில்லேவ அதிராணிகம பகுதியில் குறித்த சுற்றிவளைப்பை மேற்கொண்டிருந்தனர்.

இதன் போது மூன்று சந்தேக நபர்கள்களை கைது செய்து ள்ளதுடன் தச்சு கொட்டகையில் இருந்து முடிக்கப்பட்ட இரண்டு செட் நாற்காலிகள், இரண்டு மேசைகள் மற்றும் கட்டிலொன்று உட்பட மரத்தினால் தயாரிக்க பயன்படுத்தப்படும் பல தச்சு உபகரணங்கள் உள்ளிட்ட பொருட்களை பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

## அனர்த்தங்கள் ஏற்படும் போது துரிதமாக செயல்பட ஜனாஸா நலன்புரி அமைப்பு தயார்

**(எம்.பஹுத் ஜுனைட்)**

அனர்த்த காலங்களில் காத்தான்குடி ஜனாஸா நலன்புரி அமைப்பு எவ்வாறு செயல்பட வேண்டும் என்பது தொடர்பாக ஆராயும் அவசர கூட்டம் சனிக்கிழமை (23) அமைப்பின் காரியாலயத்தில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் அவசர நிலைகள் மற்றும் அனர்த்தங்கள் ஏற்படும் போது பொதுமக்களுக்கு வழங்கப்பட வேண்டிய அவசர உதவிகள் மற்றும் பாதுகாப்புக்கள் தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டதுடன்




அனைத்து ஆயத்தங்களும் முன்னெடுக்கப்பட்டு தயார் நிலையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## காத்தான்குடியில் இடம்பெற்ற மாபெரும் இரத்ததான முகாம்






**(எம்.பஹுத் ஜுனைட்)**

காத்தான்குடி இளைஞர் வலுவூட்டலுக்கும் சமூக அபிவிருத்திக்குமான அமைப்பின் ஏற்பாட்டில் 7 வது மாபெரும் இரத்ததான நிகழ்வு ஞாயிற்றுக் கிழமை (24) ஹிஸ்புல்லாஹ் மண்டபத்தில் நடைபெற்றது. அமைப்பின் தலைவர் எம்.ஏ.நௌஸாத் தலைமையில் இடம்பெற்ற இரத்தான நிகழ்வு காத்தான்குடி தள வைத்தியசா லையின் இரத்த வங்கி பொறுப்பாளர் வைத்தியர் அலிமா ரஹ்மான் மேட் பார்வையில் இடம்பெற்றது.

காத்தான்குடி தள வைத்திய சாலையில் ஏற்பட்டுள்ள குருதி தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் நோக்கில் இவ் இரத்ததான நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

காலை 09 மணி தொடக்கம் இடம்பெற்ற இவ் இரத்தான நிகழ்வில் அதிகமான குருதி கொடையாளர்கள் மற்றும் இளைஞர் யுவதிகள் ஆர்வமாக கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பாடசாலைகளில் தரம் ஒன்றிற்கான புதிய வகுப்புக்கள் ஜனவரி 30 ஆந் திகதி ஆரம்பம்

**( ரஷீத் எம். றியாழ்)**

2025ம் ஆண்டில் சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் பாடசாலைகளில் தரம் ஒன்றிற்கான புதிய வகுப்புக்கள் எதிர்வரும் ஜனவரி 30 ஆந் திகதி ஆரம்பிக்கப்படும்.

இதற்கமைய 2025 தரம் ஒன்றிற்கு உள்வாங்கப்படும் புதிய மாணவர்களின் வகுப்புக்களை உரிய முறையில் ஆரம்பித்து வரவேற்பதற்கு பொருத்தமான வேலைத்திட்டத்தினை நடாத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென கல்வி விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சின் செயலாளர் நாலக கலுவெவ அறிவித்துள்ளார்.

மாணவர்களுக்கும் மற்றும் பெற்றோர்களுக்கும் எவ்விதமான பாதிப்பும் ஏற்படாத வகையில் இவ்வேலைத்திட்டத்தை ஒழுங்கமைப்பதை கவனத்தில் கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார்.

இதேவேளை ஆரம்பக் கல்வியின் நோக்கம், ஆரம்பக் கல்வியின் முதன்மை நிலைகள், ஆரம்பக்கல்வியில் தேர்ச்சி அடிப்படையிலான கலைத் திட்டம், பிள்ளைகளின் உடல்,உள அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகள் மற்றும் விருப்பத்திற்குறிய தேர்ச்சிகள், கணிப்பீடு மற்றும் இனங்காணும் வேலைத்திட்டம் தொடர்பாக தரம் ஒன்றிற்கு அனுமதிக்கப்படும் பெற்றோ ருக்கு இலகுவாக விளங்கிக் கொள்ளும் வகையில் தெளிவுப்படுத்துவது மிக முக்கியமாகும். என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.






நாச்சியாதீவு பர்வீன்



# ஆக்க இலக்கியப் பணிபுரியும் ஆழ்ந்த தமிழ்ப் புலமை- தமிழ்மாமணி

# அல் அசூமத்

பாவேந்தல் பாலமுனை பாரூக்

ஈழத்தின் இலக்கியப் பரப்பில் ஆழமாய் வேரூன்றி இலக்கிய நேசர்களின் நெஞ்சங்களில் நிலை பெற்றிருக்கின்ற பெயர் அல் அசூமத்.

பல்துறை விற்பன்னராக இலக்கிய உலகில் தடம்பதித்துள்ள அவர்,

தமிழறிஞராகவும்,படைப்பிலக்கியவ ாதியாகவும்,ஆய்வாளராகவும்,மொழி பெயர்ப்பாளராகவும், ஓவியராகவும், இசைக் கலைஞராகவும் (டோலக்,டபேலா,புல்லாங் குழல் மீட்பவர்) கலை,இலக்கிய உலகில் போற்றப்படுபவர்.

யாப்பிலக்கணத்தைக் கற்றறிந்து, மரபில் தோய்ந்த கவிதைகளை எழுதி வருபவராக மட்டுமல்லாது, யாப்பியலை ஐயந்திரிபறக் கற்று அது தொடர்பான விளக்கங்களடங்கிய 360 பக்க நூலையும் தந்து தமிழ் மொழியியலாளர்கள் மத்தியில் உயர்ந்து நிற்பவர்.

"கவிதைகளாலே தன் உணர்வுகளை ,கருத்துகளை முன்வைக்கும் கவிஞர்களுக்கு இந்நூல் ஒரு கையேடாகும். யாப்புப் பயில்வாரை இந்நூல் ஆற்றுப் படுத்தும். இந்நூலை யாப்பறிந்தவர் கூட மீட்டலாக,ஆய்வாகப் பயன்படுத்த வாய்ப்புண்டு".

என்று சித்தாந்தப் புலவர்,பண்டிதர் ,விரிவுரையாளர் திருமிகு ம.ந. கடம்பேசுவரன் ஆ.யு(உழளெ) (செயலாளர் ஆரிய -திராவிட பாஷாபிவிருத்தி சங்கம்)இந்நூல் பற்றி விதந்து கூறுவார். பாலபண்டிதப் பரீட்சையின் பாட நூ ல்களுள் ஒன்றாகவும் அந்நூல் தகைமை பெற்றிருப்பது அதன் சிறப்பினை எடுத்துக் காட்டப் போதுமான தாகும்.

அல் அசூமத்,மரபுக் கவிதைகளை மட்டுமல்லாது தமிழுக்குப் புதிதாக வந்து சேர்ந்திருக்கின்ற குறும்பா (டுஐஅநசஉைம) போன்ற வடிவங்களையும் அங்கீகரித்து இடம் தருபவர்.இலங்கைக் கவிஞர் மஹாகவி உருத்திரமூர்த்தி அயர்லாந்துக் கவிதை வடிவமான Limerick ஐ குறும்பாவாகத் தமிழுக்குக் கொண்டு வந்தார். அவரின் பின்னர்,எம்.எச்.எம்.ஷம்ஸ், கலைவாதி கலீல்,ஜவாத் மரைக்கார் போன்றோர் குறும்பாவில் முயற்சிகள் செய்திருந்த போதிலும் குறும்பாவில் தொடர்ந்து இயங்கியவராகவும், அதுபற்றிய பரிசோதனை முயற்சிகளை "பூபாள"த்தில் செய்தவராகவும், யாப்பியலுரை என்ற அவரின் நூலில் குறும்பாவுக்கென ஒரு தனி அதிகாரத்தை எழுதி விளக்கியவராகவும் மதிப்புப் பெற்றிருப்பவர் அவர்.

1959ல் எழுத்துலக நுழைவு பெற்றவர்..

பொன். வேலாயுதம், சுடுகந்தை வேலாயுதம், சுடு வேலன், சுவே, வாணியன், மாத்தளையான், எல் அசோமட், அசோமட்டெல்க்கோவ், மொ. அ. அப்துல் அஸீஸ், சாத்தன், அபூ முனாஃப், ராமபுத்திரன், பொன்மாரி, அ. பாவேந்தி என்று பல புனை பெயர்களில் ஆக்கங்களை வழங்கி வருபவர்.. அல் அஸ்ᵉ மத் என்பதுவும் அவரின் புனைபெயரே. ஆனாலும் அதனை தன் சொந்தப் பெயராகப் பதிவு செய்து கொண்டவர்,

நாவல்,சிறுகதை,கட்டுரை,கவிதை, மொழி பெயர்ப்பு என்று பல்துறை நூல்களை நமக்குத் தந்திருக்கின்றார் தமிழ்மாமணி அல் அசூமத்.

1.புலராத பொழுதுகள் (நெடுங்கவிதை - 1982.

முஸ்லிம் எழுத்தாளர் தேசிய கவுன்சில் பரிசுபெற்றது)

2. மலைக்குயில் (கவிதைத் தொகுப்பு - 1987).

3. பிலால் (மொழிபெயர்ப்பு–உரைநடை, 1988.)

மறுபதிப்புகள் - 1995 இலங்கை, 2006, 2010 மெல்லினம் பதிப்பகம், தமிழ்நாடு, 2018 இலங்கை

4. கவிதைச் சரம் (1996. 483 கவிஞர்களின் 568 வானொலிக் கவிதைகள்)

5. வெள்ளைமரம் (சிறுகதைத் தொகுப்பு - 2001 அரச தேசிய சாகித்திய மண்டலப் பரிசும் சிரித்திரன் சுந்தர் நினைவுப் பரிசும் பெற்றது).

6. குரல்வழிக் கவிதைகள் 2009. (யாழ். இலக்கிய வட்டப் பரிசு பெற்றது.)

7. அறுவடைக் கனவுகள் (நாவல் - 2010. தமிழியல் விருது பெற்றது).

8. ஆயன்னையம்மாதாய் (சிறுகதைகள் - 2012). (:கொடகே தேசிய சாஹித்திய விருது பெற்றது).

9. இறைத்தூதர் முஹம்மத் (ஸல்.) அவர்களது காலத்தில் பெண் விடுதலை - மொழிபெயர்ப்பு) - 2015

10. யாப்பியலுரை - ஆய்வுக் கட்டுரை - 2000, 2016

11. அவள் பெய்கிறாள் - மலையாள மொழிபெயர்ப்புச் சிறுகதைகள் - 2016 (அரச இலக்கிய விருது பெற்றது)

12. வரவுக்கவிதைகள் வளமுற - ஆய்வுடனான ஒரு விளக்கம் - 2016

13, 14, 15 இஸ்லாமிய வரலாறு (மூன்று பாகங்கள்) - 2017 (சென்னை ரஹ்மத் அறக்கட்டளை)

16. உலகின் பேரொளி முஹம்மத் (ஸல்.) - சென்னை ரஹ்மத் அறக்கட்டளை நடத்திய உலகளாவிய கட்டுரைப் போட்டியில் இந்திய மதிப்பில் ரூபா ஓரிலட்சம் பரிசு பெற்றது. - 2018

17. அமார்க்கவாசம் - நாவல் - 2020 (அரச இலக்கிய விருது பெற்றது)

18. :பிலால் காவியம் - 2020.

அல் அசூமத்,

கலை இலக்கியப் பயணத்தில் உள் நாட்டிலும் ,வெளிநாட்டிலும் விருதுகள் பலவற்றைப் பெற்றிருப்பவர்.

1992இல் இலங்கை முஸ்லிம் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் நஜ்முஸ் ஸᵘஆரா விருது,

2006இல் இலங்கைக் கலாச்சார அலுவல்கள் திணக்களத்தால் கலாபூஷண் விருது,

2009இல் இலங்கை முஸ்லிம் கலைஞர் முன்னணியால் இலக்கிய சாகரம் விருது,

2011 இல் இஸ்லாமிய தமிழ் இலக்கியக் கழகத்தால் தமிழ்நாடு - காயல் பட்டினத்தில் தமிழ் மாமணி விருது, என்பவற்றோடு,

இலங்கை வானொலி - கொடகே சகோதரர்கள் இணைந்த குழுவினராலும் கம்பன் கழகத்தினராலும் உதயணன் இலக்கிய விருதுக் குழுவினராலும் தமிழியல் விருதுக் குழுவினராலும் வாழ்நாள் சாதனையாளர் விருதுகள் பல வழங்கிக் கௌரவப்படுத்தப்பட்டுள்ளவர்..

நூல்கள்,தொகுப்புக்கள் என்பவற்றுக்குக் கிடைத்த விருதுகள், பரிசுகள் என்பவற்றிற்கும் மேலதிகமாக தனிக் கவிதைகள், சிறுகதைகளுக்கும் பரிசுகள் பலவற்றை பெற்றிருப்பவர் கவிமாமணி அல் அசூமத்.

1) 1982. பாரதியும் பைந்தமிழும் (தனிக்கவிதை). உலகளாவிய நிலையில் பாரிஸில் நடத்தப்பட்ட பாரதியார் நூ ற்றாண்டுக் கவிதைப் போட்டி. யில் மூன்றாம் பரிசு. "அல் அஸᵘமத் கவிதைகள்" தொகுப்பில் உள்ளது.

2) 1982. இஸ்லாமிய சட்டங்கள் சுட்டெரிக்கும் பாலையல்ல, சுகம் தரும் சோலை (தனிக்கவிதை). தமிழ்நாட்டுக் குர்ஆனின் குரல் வெளியீட்டகத்தாரால் நடத்தப்பட்ட போட்டியில் மூன்றாம் பரிசு பெற்றது. "அல் அஸᵘமத் கவிதைகள்" தொகுப்பில் உள்ளது.

3) 1989. முதுகச் சொறியுங்கோ (சிறுகதை). "திசை" வாராந்தரி நடத்திய சிறுகதைப் போட்டியில் மூன்றாம் பரிசு பெற்றது ரூபா 250. (வெள்ளைமரம் தொகுதியில் உள்ளது.)

4) 1989. வம்சத்துவம்சம் (சிறுகதை). "திசை" வாராந்தரியில் வெளிவந்த இக் கதை, 1989இன் இரண்டாம் காலாண்டில் வெளிவந்த கதைகளின் தேர்வில், இரண்டாம் பரிசுக்குரியதாகத் தேர்ந் தெடுக்கப்பட்டுத் "தகவம்" அமைப்பினால் பரிசளிக்கப்பட்டது. ரூபா 250. (வெள்ளைமரம் தொகுதியில் உள்ளது.)

5) 1993. குடும்பப் பொய் (சிறுகதை). சுற்றாடல் வெகுஜனத் தொடர்பாளர் பேரவை நடத்திய சிறுகதைப் போட்டியில் தேர்ந்தெடுக்கப்பட்ட பத்துக் கதைகளுள் ஒன்று. ரூபா 1,000 பரிசு. (சிரிபாலபுர மாத்தையா தொகுதியிலும் வெள்ளைமரம் தொகுதியிலும் உள்ளது.)

சஞ்சிகைகளின் ஆசிரியராக, வானொலியில் கவிதைத் தொகுப்பாளராக இலக்கியப் பணி புரிந்த அல்அசூமத்,. கவிதைகளுக்கான காலாண்டுச் சஞ்சிகை ஒன்றை 1982 - 1983ல் கவின் கமலின் துணையுடன் நடத்தி வந்தார். பூபாளம் என்று அவர் நடத்திய அச் சஞ்சிகை, கவிதையின் பலவேறு வகைமைகளையும் வெளிக்காட்டியதோடு புதிய வரவுகளுக்கும் இடமளித்தது. அதன் பின்னர்

பௌர்ணமி எனும் பெயரில் ஒரு ரோணியோ சஞ்சிகையையும்

முகில் எனும் பெயரில் அச்சில் இன்னுமொரு சஞ்சிகையையும் நடத்தினார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தின் முஸ்லிம் சேவையில் இலக்கிய மஞ்சரி, இளைஞர் இதயம், கவிதைச்சரம் (தொடர்ந்து நான்காண்டுகள்) ஆகிய நிகழ்ச்சிகளை நடத்தியிருக்கின்றார். ரூபவாஹினி, நேத்ரா, ஐடீயென், :டான், பிறை போன்ற தொலைக்காட்சிகளிலும் பல கவியரங்குகள், பேட்டிகள் என்பவற்றிற் பங்கெடுத்துள்ளார். இலங்கை கலாசாரத் திணைக்களம் முஸ்லிம் சமய பண்பாட்டுத்திணைக்களம் என்பவை நடத்திய கவியரங்குகளுக்கு தலைமை தாங்கி உள்ளார்.நூற்றுக்கு மேற்பட்ட மேடைக் கவியரங்குகளில் கவிதை பாடிய சிறப்பு அவருக்கு உண்டு.

இலங்கையில் மத்திய மாகாணத்திலுள்ள மாத்தளை எனும் நகருக்கு இரு கி. மீ. அண்மையில் திக்கிரியா எனும் ரப்பர்த் தோட்டத்தில் 1942,ல் பிறந்தவர் அவர்.

தந்தை:- ராமன் நாயர் எனப்பட்ட பொன்னையா. கேரளத்தில் நெய்யாற்றிங்கரையைச் சேர்ந்தவர்.

தாய்:- தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த முத்தையாத் தேவருக்கும் சந்தனத்துக்கும் பிறந்த மாரியாயி.

மாரியாயி இலங்கையிற் பிறந்தவர்.

அல் அசூமத்தின் இயற் பெயர்:- வேலாயுதம்.

ஆரம்பக் கல்வி - மந்தண்டாவளை ஆட்டுப்பட்டிப் பாடசாலை (அரசினர் தமிழ்க் கலவன் கனிஷ்ட்ட பாடசாலை), நிக்கக் கொட்டுவைத் தோட்டப்பாடசாலை, இறத்தோட்டை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை (1952 வரையில்). பின்னர் மாத்தளை, கந்தசாமி சைவத் தமிழ்ப் பாடசாலை - இப்போதைய தேசிய இந்துக் கல்லூரி.

கல்வித் தகைமை:- சிரேஷ்ட்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் (S.S.C.), 1959. கல்வி மொழி - தமிழ்.

செய்தொழில்கள்:- ஆசிரியம், தேயிலைத் தோட்டத்து சூப்பர்வைசர், ஓட்டல், விசைச்சுருளி (ளிசபைெள) செய்தல், அச்சுக் கூடம்.

அல்அசூமத் தேர்ந்த கதை சொல்லி, ஈழத்தின் முக்கியமான கவிஞராகவும் ,ஆய்வாளராகவும் மதிப்புப் பெற்றிருப்பவர் .ஆறு தசாப்த கால இலக்கிய அனுபவம் வாய்க்கப் பெற்றவர். அவர் இன்னும் பல்லாண்டு காலம் தேகநலத்துடன் வாழவேண்டும்.

கையிலிருப்பவையான அவரின் சுய தொகுப்புக்களான பெருங் காவியம் 1, குறுங்காவியங்கள் 8, சிறுகதைகள் 32, நாவல் 1, கவிதைகள் சில நூ று, நபிக்குறள், (2020 குறள்கள் எழுதப்பட்டுள்ளன).

கவலைப்படாதீர்கள் (மொழிபெயர்ப்பு), நடைப்பா, குறு நாவல்கள் 2,என்பவற்றோடு " பிஞ்சிய"மும் (பிறப்புமுதல் கொண்டு 10 ம் வகுப்பு வரையிலான அவரின் சுயசரிதைக் காவியம்) விரைவில் நூலாக்கம் பெற்று வெளிவரவேண்டும். என்பனவே நமது விருப்பமும் பிரார்த்தனையுமாக உள்ளன.

---

## அடுத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

*4500 ஆசிரியர்களையும் நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றனர். இதேநேரம் கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கு 2700 ஆசிரியர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.*

*இதைவேளை தொடர்ந்து ஒரே பாடசாலையில் இருந்து வரும் ஆசிரியர்களுக்கு புது வருடத்தில் இடமாற்றம் வழங்கப்படவுள்ளது. நகர பாடசாலைகளில் நீண்ட காலமாக பணிபுரியும் ஆசிரியர்களும் இவ்வாறு இடமாற்றப்பட உள்ளனர். முழு நாட்டிலும் சுமார் 4500 ஆசிரியர்கள் இவ்வாறு இடமாற்றம் பெறவுள்ளதாக அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.*

அருவிக்கரை தொகுப்பில் வாசகர்களின் பெறுமதியான ஆக்கங்களையும் அனுப்பி வைக்க முடியும்.

"அருவிக்கரை" என கட்டமிட்டு மின்னஞ்சல் செய்யவும்:

editor.uthayam@gmail.com

## பாராளுமன்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

*தீர்மானித்து இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்களுக்கு வாகனம் வழங்குவதன் மூலம் அந்த கட்சியின் கொள்கைகளுக்கு அது முரணானதாக அமையும் என தெரிவிக்கப்பட்டது. சகல பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் வாகனங்கள் வழங்கும் தீர்மானம் விமர்சனத்திற்கு உள்ளாகின்றது.*

*அரசாங்கக் கட்சி உறுப்பினர்களுக்கு வாகனம் வழங்குவதாக இருந்தால் எமக்கும் வழங்க வேண்டும் என்று எதிர் கட்சியினர் கோரிக்கை விடுத்துள்ளனர். அரசாங்கக் கட்சியில் இருக்கின்ற குறிப்பிட்ட சில உறுப்பினர்கள் நாம் அரசாங்க வாகனங்களை ஏற்போம் என தெரிவித்தனர். மேலும் அவர்கள் தமது தொகுதிகளுக்குள் போக்குவரத்து செய்ய இவ் வாகனங்கள் தேவைப்படுவதாக சுட்டிக்காட்டுகின்றனர். அதே நேரம் தேவையற்ற வாகனங்கள் வழங்குவதனை தொடர்வதில்லை என பாராளுமன்ற விவகார அமைச்சர் ஆனந்த விஜய பால தெரிவித்துள்ளார். ஒவ்வொரு ஐந்தாண்டுகளுக்கும் இடையே அமைச்சரவை பத்திரங்களை சமர்ப்பித்து வாகனங்களை வழங்குவதற்கான அனுமதி கூறப்படுகின்றது.*

*எனினும் இம்முறை அந்த வேண்டுகோள் விடுக்கப்பட மாட்டாது என்றும் அமைச்சர் ஆனந்த விஜய பால தெரிவித்துள்ளார்.*

*இதேநேரம் முன்னாள் அமைச்சர்கள் மற்றும் அமைச்சுக்கள் பயன்படுத்திய 228 வாகனங்கள் ஏலத்தில் விற்கப்படும் என்றும் அமைச்சர் விஜயபால மேலும் தெரிவித்தார். இவ்வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு பதிலாக குறைந்த எரிபொருள் பாவனையில் உள்ள சிறப்பாக இயங்கும் வாகனங்களை பெற்றுக் கொள்ள தாம் நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.*

# தெஹிவளை ஜும்ஆ பள்ளியில் நடைபெற்ற பள்ளிவாசல் நம்பிக்கையாளர்களுக்கான செயலமர்வு

(எஸ்.எம்.ஜாவித்)





பள்ளிவாசல் நம்பிக்கையாளர்களுக்கான செயலமர்வு ஒன்றை முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களமும் கொழும்பு தெற்கு பள்ளிவாசல்களின் சம்மேளனும் இணைந்து தெஹிவல ஜும்ஆப் பள்வாசலில் திணைக்களத்தின் பணிப்பாளர் எம்.எஸ்.எம். நவாஸ் தலைமையில் 1ஆம் திகதி நடைபெற்றது.

தெஹவல பள்ளிவாசல் தலைவர் இஸ்மாயில் ஹாஜியார் உள்ளிட்ட நம்பிக்கையாளர்களின் ஒருங்கிணைப்புடன் தெஹிவல மற்றும் மவுண்ட் லெவனியா பகுதி பள்ளிவாசல்களின் நம்பிக்கையாளர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

நிகழ்வில் பணிப்பாளர் திணைக்களத்தின் செயற்பாடுகள் தொடர்பாகவும் உதவிப் பணிப்பாளர் அலா அஹமட், பள்ளிவாசல் நம்பிக்கையாளர்களின் கடமைப் பொறுப்புகள் தொடர்பாகவும் அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபை தலைவர் றிஸ்வி முப்தி ஜம்மியத்துல் உலமா சபையின் செயற்பாடுகள் தொடர்பாகவும் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.என்.எம். றொஸான் இலங்கை வக்பு சபை, வக்பு நியாய சபை தொடர்பான விளக்கங்களையும் வழங்கினார்.

இதன் போது பள்ளிவாசல் நிருவாகத்தினர் பணிப்பாளருக்கு பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கி கௌரவித்தனர்.

# கண்டி மாவட்டத்தில் அனர்த்தங்களினால் 307 குடும்பங்களைச் சேர்ந்த 1297 பேர் பாதிப்பு

( ரஷீத் எம். றியாழ்)

கண்டி மாவட்டத்தில் 307 குடும்பங்களைச் சேர்ந்த 1297 பேர் தற்போது அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், இடம்பெயர்ந்த 193 குடும்பங்கள் தற்போது தற்காலிகமாக உறவினர் வீடுகளில் தங்கவைக்கப்பட்டுள்ளதாகவும் கண்டி மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் தரவுகள் தெரிவிக்கின்றன.

கடந்த நாட்களில் ஏற்பட்ட அனர்த்தங்களினால் கண்டி மாவட்டத்தில் உயிரிழப்புகள் எதுவும் பதிவாகவில்லை. என்றாலும், 03 பேர் காயமடைந்துள்ளனர். 08 வீடுகள் முழுமையாகவும் 220 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளதாகவும் கண்டி மாவட்ட மேலதிக செயலாளர் நிலுகா புளத்கே விடுத்துள்ள தரவுகள் தெரிவிக்கின்றன.

# சீரற்ற காலநிலை காரணமாக விவசாய உற்பத்திகள் பாதிப்பு

(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

பலத்த மழையுடனான சீரற்ற காலநிலை காரணமாக விவசாய உற்பத்திகள் பாரியளவில் அழிவடைந்துள்ளன.

சுமார் 375000 ஏக்கர் விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாய கமநல காப்புறுதி நிறுவனத் தலைவர் பிரேமசிறி ஜயசிங்காராச்சி தெரிவித்துள்ளார்.

குறிப்பாக நெற் செய்கை, உருளைக் கிழங்கு, வெங்காயம், சோயாபீன்ஸ், மிளகாய் உள்ளிட்ட பல முக்கிய பயிர்கள் வெள்ளத்தினால் பாரியளவில் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கு சுமார் 40 ஆயிரம் ஷரூபா நஷ்டஈடு வழங்கப்படும் என விவசாய பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கட்சி, பேதங்களை துறந்து பாலஸ்தீன மக்களின் உரிமைகளுக்காக முன்நிற்போம்

**எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச**



கட்சி, இனம், மதம், வர்க்கம் மற்றும் உண்டான ஏனைய பேதங்களைப் பொருட்படுத்தாமல் பாலஸ்தீன மக்களின் நீதிக்காகவும் நியாயத்திற்காகவும் ஒரு நாடாக நாங்கள் ஒன்றிணைந்துள்ளோம். மனிதநேயத்தின் பெயரால் அவர்களுக்கு நீதி கிட்ட வேண்டும். இதன் பொருட்டு சர்வதேச சமூகத்துடன் கைகோர்த்து செயற்பட வேண்டும்.

பேச்சுக்களோடும், அறிக்கைகளோடும் சுருங்கி விடாது, பலஸ்தீன மக்களின் வாழ்வுரிமைக்காக நாமனைவரும் முன்நிற்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பாலஸ்தீனத்தை இல்லாதொழிக்கும்

அரச பயங்கரவாதத்திற்கு எதிராக அரசாங்கத்துடன் ஒன்றாக இணைந்து எமது ஆதரவை வெளிப்படுத்துகிறோம். பலஸ்தீன விடுதலைக்காக என்றும் நாம் முன்நிற்போம். ஒரு நிலைப்பாட்டில் இருந்து கொண்டு பலஸ்தீன மக்களின் உரிமைகளுக்காக முன்நிற்பேன் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

இஸ்ரேலின் தாக்குதலால் பாதிக்கப்பட்ட பாலஸ்தீன மக்களுக்கு நிவாரணம் வழங்கும்போது, அந்த மக்கள் வாழும் இடங்களில் குண்டுவீச்சுக்கு எதிராக உலகத் தலைவர்கள் குரல் எழுப்ப வேண்டும். இதனை வெறும் பேச்சோடு சுருக்கிக் கொள்ளாது செயலில் காட்ட வேண்டும். பேச்சுக்களில் இருப்பது செயலிலும் இருக்க வேண்டும். இஸ்ரேலும் பாலஸ்தீனமும் சகோதரத்துவத்துடனும், நல்லிணக்கத்துடனும் வாழும் யுகத்தை உருவாக்க அனைவரும் அர்ப்பணிப்போடு செயல்பட வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் இங்கு மேலும் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் சர்வதேச பலஸ்தீன ஒருமைப்பாட்டு தினம் (United Nations day for solidarity with Palestine people) 29 அனுஷ்டிக்கப்பட்டது. இதன் நிமித்தம் கொழும்பு லக்ஷ்மன் கதிர்காமர் நிறுவக கேட்போர் கூடத்தில் இன்று மாலை இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

# உயர்தர பரீட்சைக்கான புதிய நேர அட்டவணை வெளியீடு

( ஐ. ஏ. காதிர் கான் )

இயல்பான நேர அட்டவணைப்படி, டிசம்பர் 04 ஆம் திகதியில் இருந்து பரீட்சைகள் நடைபெறும் நவம்பர் 27 முதல் டிசம்பர் 03 வரை நடைபெறாத பாடங்கள் கீழே கொடுக்கப்பட்ட நேர அட்டவணைப்படி நடைபெறும்.

**நேர அட்டவணை**

* நவம்பர் 27 அன்று உள்ள பாடங்கள் - டிசம்பர் 21
* நவம்பர் 28 அன்று உள்ள பாடங்கள் - டிசம்பர் 23
* நவம்பர் 29 அன்று உள்ள பாடங்கள் - டிசம்பர் 27
* நவம்பர் 30 அன்று உள்ள பாடங்கள் - டிசம்பர் 28
* டிசம்பர் 02 அன்று உள்ள பாடங்கள் - டிசம்பர் 30
* டிசம்பர் 03 அன்று உள்ள பாடங்கள் - டிசம்பர் 31

தற்போதைய நிலைமையை அடிப்படையாகக் கொண்டு, இவ்வாறு நேர அட்டவணை மாற்றப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், திருத்தப்பட்ட நேர அட்டவணை, பொதுப் பரீட்சை நாளில் ஒவ்வொரு மாணவருக்கும் வழங்கப்படும் என்று, பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

# நிந்தவூர் பிரதேச அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு குழு கூட்டம்





நமது பிராந்தியத்தில் அண்மைக்காலமாக எதிர்நோக்கி வரும் சீரற்ற காலநிலையினால் ஏற்பட்ட திடீர் அனர்த்த நிலமைகள் குறித்து ஆராய்வதற்காக (29) நிந்தவூர் பிரதேச செயலாளர் சட்டத்தரணி அப்துல் லதீப் ஏற்பாட்டில் கலந்துரையாடல் கூட்டமொன்று நடைபெற்றது.

இதன் போது நிந்தவூர் பிரதேசத்தில் ஏற்பட்ட அனர்த்தங்கள் குறித்து கிராம சேவையாளர்களிடம் கேட்டறியப்பட்ட போது, வெள்ள நீர் வழிந்தோடாமைக்கான காரணமாக, குடியிருப்பு காணிகளை விடவும் வீதிகள் உயரமாக அமைக்கப்பட்டிருப்பது அடையாளப்படுத்தப்பட்டது. அதே போல வடிகான் துப்பரவு பணிகள் முழுமையடையாமையும் நீர் வழிந்தோடாமைக்கான காரணங்களுள் ஒன்றாக அடையாளப்படுத்தப்பட்டிருந்தது.

மேலும் எதிர்வரும் காலங்களில் அனர்த்தத்தின் போதான முன்னாயத்த திட்டங்கள் குறித்தும் விரிவாக கலந்துரையாடப்பட்டிருந்தது.

விவசாயிகளின் வயல்காணி அழிவுகள் மற்றும் மீனவர்களின் வாழ்வாதார பாதிப்புக்கள் குறித்தும் அவற்றுக்கான நஷ்டஈடுகள் தொடர்பிலும் விரிவாக ஆராயப்பட்டதுடன்.

இதன்போது தனது வேண்டுகோளையேற்று செய்யப்பட்ட தலைமை பொறியியலாளர் அலியார் பிராந்திய பொறியியலாளர் ஹைதர் அலி ஆகியோருக்கும் விரைவாக செயற்பட்ட ஊழியர்களுக்கும் நன்றிகள் தெரிவிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் திகாமடுல்ல பாராளுமன்ற உறுப்பினர்களான ஏ.ஆதம்பாவா, அஷ்ரப் தாஹிர், எம்.எஸ். உதுமா லெவ்வை மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பிரதி பனிப்பாளர் றியாஸ், பிரதேச சபை செயலாளர், சுகாதார வைத்திய அதிகாரி, பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, கிராம சேவை உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.


# வெள்ள அனர்த்தம் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக அவசரமாகக் கூடியது முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு!



நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள வெள்ள நிலையினையடுத்து, பாதிப்புக்குள்ளான முல்லைதீவு மாவட்ட மக்களின் அவசர தேவைகளைக் கண்டறிந்து, அதற்குத் தேவையான உதவிகளை செய்யும் வகையில் (29), முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் அவசரமாகக் கூட்டப்பட்டது. முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில், கூட்டுறவு அபிவிருத்தி பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்ஹ தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் மற்றும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், மாவட்ட செயலாளர் அ.உமா மகேஸ்வரன், மேலதிக மாவட்ட செயலாளர் எஸ்.குணபாலன் உட்பட பிரதேச செயலாளர்கள், அனர்த்த முகாமைத்துவ அதிகாரிகள், ஏனைய திணைக்கள அதிகாரிகள், பாதுகாப்புத்துறை அதிகாரிகள் எனப் பலரும் இதன்போது பிரசன்னமாகி இருந்தனர். வெள்ளத்தால் இடம்பெயர்ந்து தற்காலிக முகாம்களில் மக்கள் தங்கவைக்கப்பட்டுள்ளமை குறித்தும் அவர்களது அத்தியாவசிய, அடிப்படைத் தேவைகள் போன்றவற்றை பெற்றுக்கொடுப்பது பற்றியும் இங்கு கலந்துரையாடப்பட்டது. மேலும், விவசாயப் பாதிப்பு, கால்நடை, மீன்பிடி, உணவு, குடிநீர், நோய் தடுப்பு, நீர்ப்பாசனம், உள்ளூராட்சி மன்றங்களின் கீழ் உள்ள வடிகாலமைப்பு, கிராமிய பாதைகள் என்பன தொடர்பிலும் இன்றைய ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் ஆராயப்பட்டதுடன், அவற்றுக்கான தீர்வுகளும் முன்வைக்கப்பட்டன.

## மீண்டும் டிசம்பர் 13 – 23 இடையில் இலங்கையில் வலுவான தாழமுக்கம்

( ஐ. ஏ. காதிர் கான் )



தற்போதுள்ள ஆழ்ந்த தாழமுக்கம் இலங்கையை விட்டும் அப்பால் நகர்ந்து, நேற்று (30) சனிக்கிழமையன்று, தமிழ்நாட்டை ஊடறுத்துச் சென்ற பின்னர் மீண்டும் ஒரு தாழமுக்கம், டிசம்பர் 13 ஆம் 23 ஆம் திகதிக்குள் வரவுள்ளது. இதுவும், ஏற்கனவே உருவாகிய தாழமுக்கம் நகர்ந்த அதே வழித்தடத்தின் ஊடாகவே, இலங்கைக்கு அண்மையாக நகர்ந்து வரவுள்ளது. அதுமட்டுமல்லாது, டிசம்பர் 25 - கிறிஸ்மஸ் தினத்திற்குப் பின்னரும் கூட மீண்டும் ஒரு தாழமுக்கம் உருவாக அதிக வாய்ப்பு இருப்பதாக, சிரேஷ்ட வானிலை அதிகாரி கே. சூரியகுமாரன் தெரிவித்துள்ளார்

இந்த இரண்டு தாழமுக்கங்களும், தற்போதைய தாழமுக்கத்தை விட அதிக வலுவுடையதாக எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## புத்தளம் மாவட்ட இலக்கிய விழாவில் பாத்திமா பெண்கள் பாடசாலையின் 06 மாணவிகள் முதலிடம்

(எம்.எச்.எம்.சியால், எம்.யூ.எம்.சனூன்)



புத்தளம் மாவட்ட இலக்கிய விழா போட்டியில் புத்தளம் பாத்திமா பெண்கள் மகா வித்தியாலய மாணவிகள் 06 பேர் பல்வேறு துறைகளில் வெற்றி பெற்றுள்ளதுடன் இம் மாணவிகளுக்கான பரிசளிப்பு வைபவம் கடந்த வெள்ளிக்கிழமை (29) ஆனமடுவ சுதம்பாய நகர மண்டபத்தில் புத்தளம் மாவட்ட செயலாளர் எச்.எம்.எஸ்.பீ ஹேரத் தலைமையில் நடைபெற்றது புத்தளம் மாவட்டத்தில் முதலிடம் பெற்று சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கி கௌரவிக்கப்பட்ட பாத்திமா பெண்கள் மகா வித்தியாலய பாடசாலை மாணவிகள்

1 .சிறுகதை ஆக்கம் (ஆங்கிலம்)
**எம்.ஐ ஹம்தா**
2.கவிதை ஆக்கம் (ஆங்கிலம்)
**ஆர். தனா தன்யா**
3.கவிதை கூறல் (ஆங்கிலம்)
**எம்.என் எப் சீனா**
4.கவிதை கூறல் (ஆங்கிலம்)
**எம்.ஆர் றொஸ்மின் றபா**
5. கவிதை.ஆக்கம் ( தமிழ் )
**எம்.என் மர்யம் ஹிலா**
6.பாடல் நயத்தல் ( தமிழ் )
**எம்.எஸ்.எப் சப்காத்**

ஆகியோருக்கு பாடசாலை நிர்வாகம் சார்பாக தமது வாழ்த்துக்களை அதிபர் தெரிவித்துள்ளார்.

## மேல் மாகாணத்தில் டெங்கு நோய் அபாயம் 15 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பாதிப்பு

(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாகவும் தொடர் மழை காரணமாகவும் மேல் மாகாணத்தில் 19487 பேர் பாதிக்கப்பட்டுள்ளதோடு டெங்கு நோய் அதிகம் பரவும் ஆபத்தும் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவின் விசேட வைத்திய நிபுணர் தெரிவித்துள்ளார். மேல்மாகாணத்திலேயே அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுவரை சுமார் 19487 பேர் பாதிக்கப்பட்ட நிலையில் டெங்கு நோய் காரணமாக 22 பேர் உயிரிழந்துள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

## சீரற்ற காலநிலை தொடர்பில் அனுராதபுரத்தில் கலந்துரையாடல்

(எம்.ரீ.ஆரிப்)



அனுராதபுரம் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை தொடர்பில் விசேட கலந்துரையாடல் பாதுகாப்பு பிரதி அமைச்சர் மேஜர் ஜெனரல் அருன ஜயசேகர மற்றும் வடமத்திய மாகாண ஆளுநர் வசந்த ஜினதாச ஆகியோர் தலைமையில் பிரதான அமைச்சின் கூட்ட மண்டபத்தில் நடைபெற்றது.

அனுராதபுரம் மாவட்டத்தில் 1962 குடும்பங்களைச் சேர்ந்த 6198 பேர் இடம்பெயர்ந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் கேர்ணல் சனத் திஸாநாயக்க தெரிவித்தார்.

இது தவிர 590 பேர் இடம் பெயர்ந்தோர் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இந்த அனர்த்தின் போது முப்படையினர் பிரதேச செயலக மட்டத்தில் தேவையான தகவல்களை பெற்று தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ள தாக மாகாண ஆளுநர் தெரிவித்தார்.

இது தொடர்பில் பாதுகாப்பு பிரதி அமைச்சர் மேஜர் ஜெனரல் அருன ஜயசேகர தெரிவிக்கையில்:- இந்த அனர்த்த நிலைமையின் போது ஆளுநர் உள்ளிட்ட அதிகாரிகள் முப்படையினர் மற்றும் சிவில் சமூகத்தினரும் இந்த நிலையை போக்க நிவாரணப் பணிகளை மேற்கொண்டமை தொடர்பில் நன்றி தெரிவிப்பதாக தெரிவித்தார்.

இதன் போது மாகாண பிரதான செயலாளர் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

## கிழக்கு மாகாண ஆளுனரின் ஏற்பாட்டில் உலர் உணவு பொருட்கள் வழங்கி வைப்பு

(எஸ்.எம்.எம்.முர்ஷித்)





ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் காவத்தமுனை அல் அமீன் வித்தியாலயத்தில் இடைத்தங்கல் முகாமில் கடந்த மூன்று தினங்களாக தங்கியிருந்த 188 குடும்பங்களை சேர்ந்த 540 நபர்கள் வெள்ளிக் கிழமை மதியத்துடன் தங்களது வீடுகளுக்கு சென்றுள்ளதாக ஓட்டமாவடி பிரதேச செயலாளர் ஏ.தாஹிர் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் தொடர்ந்து பெய்த மழை ஓய்ந்த நிலையிலும் தாழ்நிலை பிரதேசங்களில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு குறைந்த காரணத்தினாலும் தங்களது குடிருப்புக்களில் இருந்து வெளியேறிய மக்கள் மீண்டும் தங்களது வீடுகளுக்கு சென்றுள்ளனர்.

கிழக்கு மாகாண ஆளுனர் பேராசிரியர் ஜயந்தலால் ரத்னசேகரவின் ஏற்பாட்டில் கிழக்கு மாகாண சமூக சேவை திணைக்களத்தினால் இடைத்தங்கல் முகாமில் தங்கியிருந்த 188 குடும்பங்களுக்கு உலர் உணவு பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டது.

பிரதேச செயலாளர் ஏ.தாஹிரின் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுனர் பேராசிரியர் ஜயந்தலால் ரத்னசேகர, கிழக்கு மாகாண சமூக சேவை திணைக்களத்தின் பணிப்பாளர் ஐ.இலங்குமுதன், கிழக்கு மாகாண ஆளுனரின் இணைப்பு செயலாளர் யூ.கே.எம். அப்துல்லாஹ், தேசிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு மாவட்ட செயற்குழு உறுப்பினர் எம்.ஏ.சி.எம்.நியாஸ், பிரதேச சபை செயலாளர் எஸ்.எம். சிஹாப்தீன், பிரதேச செயலக பிரதி திட்ட பணிப்பாளர் எஸ்.ஏ.நியாஸ், பிரதேச செயலக அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

## மனநலமும் ஆலோசனையும் 58

# சுயமரியாதை

ஒருவரின் உடலில், உள்ளத்தில், நடத்தையில், சமூக உறவில், தன்னம்பிக்கையில், அவரது விருப்பத்தில் இப்படி வாழ்வில் பல நிலைகளில் ஆழமாக தொடர்புபட்ட ஒரு தனித்துவமான இயல்பு தான் சுய மரியாதை என்பது.

வாழ்க்கை பயணத்தில் அதன் தரத்தில் எந்த அளவு முன்னேற்றம் அடைந்திருக்கின்றோம் என்பதை மதிப்பிடுவதற்கான ஒரு அளவுகோலாக சுயமரியாதை இருக்கிறது.

தன்னையும் தனது வாழ்க்கையையும் மதித்து வாழும் தன்மை ஒவ்வொரு தனிநபரிடமும் இருக்க வேண்டிய மிக முக்கியமான பண்பாகும்.

நாம் எங்களை கவனமாக நடத்துவதும் எங்களை நாம் நேசிப்பதும் சுயமரியாதையின் ஒரு உள்ளடக்கமாகும்.

நாம் எந்த உடலமைப்பில், எந்த நிறத்தில், எந்த தகுதியில் இருந்தாலும் எம்மை உயர்ந்த படைப்பாக ஏற்றுக்கொள்வது சுயமரியாதையின் ஒரு அடித்தளமாகும்.

நாம் கண்ணியமான மனிதர்கள் என்ற வலுவான உணர்வைக் கொண்டிருப்பது நாம் எம்மீது மரியாதை வைத்திருக்கிறோம் என்பதை உறுதிப்படுத்தும் ஒரு விடயமாகும்.

எமக்கென்று சரியான, பொருத்தமான எல்லைகளை அமைத்துக் கொள்வது சுயமரியாதை செலுத்துவதன் மற்றுமொரு அடையாளமாகும்.

நம்பிக்கைகளை பேணுவதும் எங்கள் மதிப்புகளுக்கும் நடத்தைகளுக்கும் உண்மையாக இருப்பதும் சுயமரியாதையுடன் இருப்பதன் மற்றுமொரு பண்பாகும்.

எங்கள் கண்ணியத்தை காக்க உதவும் தேர்வுகளை மேற்கொள்வது எங்கள் மீது மரியாதை செலுத்துகிறோம் என்பதன் இன்னுமொரு உதாரணமாகும்.

சுயமரியாதையுடன் இருப்பது அதாவது எங்கள் மீது நாங்கள் மதிப்புடன், மரியாதையுடன் நடந்து கொள்வது தவிர்க்க முடியாத ஒரு மானுடத் தேவையாகும்.

எங்களுக்கு நாங்கள் கொடுக்கும் மரியாதை எங்களை பலப்படுத்தி பயனும் பெறுமதியும் கொண்ட மனிதர்களாக வாழ வழிவகுக்கும்.

வாழ்க்கையின் பொருள் உணர்ந்து வாழவும் எங்களை அழகாக உருவாக்கவும் பாதை காட்டும்.

நாம் சந்திக்கும் சவால்களை சரியாக சமாளிக்கவும், எங்கள் உணர்ச்சி ஆரோக்கியத்தை சமநிலையுடன் வெளிப்படுத்தவும் சுயமரியாதை உதவியாக இருக்கும்.

ஆரோக்கியமான உறவுகளை உருவாக்கி மற்றவர்களும் மரியாதைக்கு உரித்தானவர்கள், அவர்களும் மனிதர்களாக மதிக்கப்படவும் ஏற்றுக்கொள்ளப்படவும் வேண்டியவர்கள் என்ற உணர்வை உருவாக்கித் தரும்.

மற்றவர்களை மதிக்கவும் கண்ணியப்படுத்தவும் முயற்சி செய்யும் நாம் எங்களையும் மதித்து கண்ணியமான மனிதர்களாக ஏற்றுக் கொள்ள வேண்டும். அப்படிச் செய்யும் போது தான் சுயமரியாதை உருவாக ஆரம்பிக்கும்.



**அஸ்ஹர் அன்ஸார்** FRSPH (UK)
**மனோதத்துவ ஆலோசனை நிபுணர்**
**மனோதத்துவ எழுத்தாளர்**

---

**பயாஸா பாஸில்**




உலகமே உன்னை பயன்படுத்திக் கொள்ளும் போது உன்னை நீ ஏன் பயன்படுத்திக்கொள்ள முடியாது..???

உண்மைதானே!!!

நம்மை பயன்படுத்திக்கொள்ள மறந்துபோன ஒரே உயிர் நாம் மட்டும் தான்..

உணர்வுகளில் பிணைக்கப்பட்ட உயிர்களை தாண்டி முழு உலகமும் ஏதோ ஓர் வழியில் நம்மை பயன்படுததிக்கொள்ளத்தான் முயற்சிக்கின்றன..காற்றும் நீரும் வெறும் தரையும் கூட....

மனிதன் மாண்டு உரமாவதில்லையா..

அப்படித்தான்!!!

பின் ஏன் யோசிக்க வேண்டும்..

என்னில் பயனடைய எத்தனையோ வளங்கள் கொட்டியிருக்கிறது ஆனாலும் அதை நான் தான் பயன்படுத்த மறந்து விட்டேன் என்று யார் தான் சொல்கிறார்கள்..

ஒரு துளி அன்பானாலும் தோற்றுப் போகையில் "என்னை பயன்படுத்திக் கொண்டார்கள்"" என்று வெறுமையான குற்றம் பகர்தலை அன்றி ...

எனக்காய் நான் அதனை பயன்படுத்த மறந்து விட்டேன் என்பதை ஒப்புக்கொள்வதே இல்லை..

மனித மனம்!!

சில சமயம் சிந்தனை மறந்த பிணம்!!

**- Rizla Ajwad -**



# கற்பனைப் பெண்

*ஒரு பெண் பறவையாக படைக்கப்பட்டிருந்தால்,*
*அது ஒரு மயிலாக இருந்திருக்கும்.*

*மிருகமாக படைக்கப்பட்டிருந்தால்,*
*மானாக இருந்திருக்கும்.*

*பூச்சியாக படைக்கப்பட்டிருந்தால்,*
*வண்ணத்துப் பூச்சியாக இருந்திருக்கும்.*

*அவள் ஒரு மனிதனாக படைக்கப்பட்டுள்ளாள்.*
*அன்பானவளாகவும் மனைவியாகவும்*
*ஒரு தாயாகவும் மாறிவிட்டாள்.*

*பெண் என்றவள் மிகவும் மகத்துவமானதாக*
*இருக்கவில்லை என்றால், ஒரு முஃமினுக்கு வெகுமதியாக*
*ஹூருல் ஈனை அல்லாஹ் வழங்கியிருக்க மாட்டான்.*

*என்னை ஆச்சரியப்படுத்திய ஒரு உண்மை -*
*ஒரு ரோஜா பூ அவளை சந்தோஷப்படுத்தும்,*
*ஒரு வார்த்தை அவளை கொலை செய்யும்.*

*பெண் என்பவள் அற்புதமானவள்.*

*குழந்தை பருவத்தில் தன் பெற்றோருக்கு*
*சுவனத்தின் ஒரு கதவை திறப்பாள்.*

*இளமை பருவத்தில் கணவனின்*
*மார்க்கத்தை பூரணமாக்குவாள்.*

*தயாகும் போது தனது*
*பாதத்தில் சுவனம் இருக்கும்.*

**Rajah Mohammed**

---

# ஐ.பி.எல் ஏலத்தில் விலைபோன இலங்கையின் இளம் பந்துவீச்சாளர்கள் விலை போகாத துடுப்பாட்டவீரர்கள் 13 வயதில் களம் காணும் வைபவ்

**(அரபாத் பஹுர்தீன்)**

கடந்த ஞாயிறு மற்றும் திங்கள்கிழமைகளில் இடம்பெற்ற 2025ஆம் ஆண்டுக்கான இந்தியன் பிரீமியர் லீக் தொடருக்கான வீரர்கள் ஏலத்தில் இலங்கையின் 6 வீரர்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் 13 வயதேயான இந்திய வீரர் ஒருவரும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும்.

ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற ஏலத்தில் இலங்கை அணியின் நட்சத்திர சுழல்பந்து வீச்சாளரான வனிந்து ஹஸரங்கவினை ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி இந்திய நாணயப்படி 5.25 கோடி (இலங்கை நாணயப்படி 18.13 கோடி) ரூபாய்களுக்கு கொள்வனவு செய்திருந்தது.

அடுத்து இலங்கையின் மற்றுமொரு சுழல்பந்து வீச்சாளரும் வீரரான துஷ்மந்த சமீர இம்முறை டெல்லி கெபிடல்ஸ் அணி மூலம் இந்திய நாணயப்படி 75 லட்சம் என்ற அடிப்படை விளைக்கு வாங்கப்பட்டார்.பின்னர் இதே தொகைக்கு சன்ரைஸர்ஸ் ஹைதரபாத் அணி மூலம் இலங்கை அணியின் சகலதுறை வீரரான கமிந்து மெண்டிஸ் ஏலமெடுக்கப்பட்டமை சுட்டிக்காட்டத்தக்கது.

துடுப்பாட்ட வீரர்களான பெத்தும் நிஷங்க, குசல் மெண்டிஸ், குசல் பெரேரா, பானுக ராஜபக்ஷ மற்றும் தசுன் சானக்க ஆகியோரை எந்த அணிகளும் கொள்வனவு செய்ய ஆர்வம் காட்டவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன் இடம்பெற்று முடிந்த ஏலத்தில் ஐ.பி.எல் வரலாற்றில் முதன் முறையாக வயது குறைந்த வீரர் ஒருவர் ஏலம் எடுக்கப்பட்டமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

எதிர்வரும் 2025ஆம் இடம்பெறவுள்ள இந்தியன் பிரீமியர் லீக் ரி20 தொடருக்கான வீரர்கள் ஏலம் மத்திய கிழக்கின் தலைமையகமாகக் கருதப்படும் சவுதி அரேபியாவில் கடந்த ஞாயிற்றுக் கிழமை மற்றும் திங்கள்கிழமைகளில் இடம்பெற்றிருந்தது.

அதற்கமைய 10 அணியின் உரிமையாளர்களும், அணிகளின் பயிற்றுவிப்பாளர்களும் பங்கேற்றிருந்த இந்நிகழ்வில் இலங்கை வீரர்களும் விண்ணப்பித்திருந்தனர். அதற்கமைய கடந்த இரு ஐ.பி.எல் தொடர்களில் சென்னை சூப்பர் கிங் அணிக்காக விளையாடிய மகேஷ் தீக்சனவை (இலங்கை நாணயப்படி 15.16 கோடி ரூபாய்களுக்கு) ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி மூலம் கொள்வனவு செய்திருக்க இலங்கையின் சுழல்பந்து நட்சத்திரங்கள் இரண்டும் ரோயல்ஸ் அணிக்காக களம் காணவுள்ளது.

மேலும் திங்கள்கிழமை இடம்பெற்ற ஏலத்தில் இலங்கை அணியின் வேகப்பந்துவீச்சாளரும் கடந்த முறை கல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்காவும் விளையாடிய

அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற வீரர்கள் ஏலத்தில் சிலிங்கா முறையில் பந்துவீசும் இலங்கை அணியின் நுவான் துஷார விராட் கோஹ்லி தலைமையிலான றோயல் செலஞ்சர்ஸ் பெங்களூரு அணியினால் இந்திய நாணயப்படி 1.6 கோடி (இலங்கை நாணயப்படி 5.52 கோடி) ரூபாய்களுக்கு கொள்வனவு செய்யப்பட்டதோடு, அறிமுக வேகப்பந்துவீச்சாளரான எஷான் மாலிங்க சன்ரைஸர்ஸ் அணியினால் 1.2 கோடி (இலங்கை நாணயப்படி 4.14 கோடி) ரூபாய்களுக்கு வாங்கப்பட்டிருந்தார்.

மேலும் இலங்கை அணியின் நட்சத்திரத்திர

இந்தியாவின் பீகார் மாநிலத்தைச் சேர்ந்த 13 வயதான வைபவி சூர்யவன்ஷி எனும் இளம் வீரர் இந்தச் சாதனைக்குச் சொந்தமாகியுள்ளார். இவரை ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியானது ஒரு கோடியே 10 லட்சம் இந்திய ரூபாய்களுக்கு கொள்வனவு செய்துள்ளது.இதன் மூலம் ஐ.பி.எல் தொடர் ஆரம்பித்த பின்னர் பிறந்து அத் தொடரிலே விளையாடத் தகுதி பெற்ற முதல் வீரர் என்ற வரலாற்றுப் பெருமையினையும் வைபவ் சூர்யவன்ஷி பெற்றுக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.





அரபாத் பஹுர்தீன்

# கம்ரான் குலாமின் சதத்தினால் சிம்பாப்வேவிற்கு எதிரான தொடரை தனதாக்கியது பாகிஸ்தான்

சிம்பாப்வே அணிக்கு எதிரான தொடரை தீர்மானிக்கும் 3ஆவதும் இறுதியுமான ஒருநாள் போட்டியில் கம்ரான் குலாமின் பொறுப்பான சதத்தின் உதவியுடன் 99 ஓட்டங்களால் வெற்றி பெற்ற முஹம்மது ரிஸ்வான் தலைமையிலான பாகிஸ்தான் அணி தொடரை 2:1 என கைப்பற்றியது.

சிம்பாப்வேவிற்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணி அங்கு 3 ஒருநாள் மற்றும் 3 ரி20 போட்டிகள் கொண்ட தொடர்களில் பங்கேற்றுள்ளது. இதில் ஒருநாள் தொடரின் முதல் போட்டியில் சிம்பாப்வே அணியும் , 2ஆவது போட்டியில் பாகிஸ்தான் அணியும் வெற்றி பெற்றிருக்க தொடரை தீர்மானிக்கும் 3ஆவதும் இறுதியுமான போட்டி நேற்று முன்தினம் புலவாயோவில் இடம்பெற்றது. இதன் நாணயச் சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் அணி துடுப்பாடத் தீர்மானித்தது.

அதற்கேற்ப களம் நுழைந்த பாகிஸ்தான் வீரர்களில் சைம் ஐயூப் மற்றும் அப்துல்லாஹ் ஷபீக் ஆகியோர் முறையே 31 மற்றும் 50 ஓட்டங்களை சேர்த்து சிறந்த ஆரம்பத்தை வழங்கினர். பின்னர் வந்த கம்ரான் குலாம் பொறுப்புடன் நிலைத்திருந்து ஆடி தனது கன்னி ஒருநாள் சதம் பதிவு செய்து 103 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். மற்றைய வீரர்களில் ரிஸ்வான் (37), சல்மான் அலி அஹா (30) மற்றும் டய்யாப் தாஹிர் ஆட்டமிழக்காமல் 29 ஓட்டங்களை பெற்றுக் கொடுக்க 50 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்டுகளை இழந்த பாகிஸ்தான் 303 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. பந்துவீச்சில் சிக்கந்தர் ராசா 2 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

அதற்கேற்ப பாகிஸ்தான் அணியால் நிர்ணயிக்கப்பட்ட 304 ஓட்டங்கள் என்ற சவால் மிக்க வெற்றி ஓட்ட இலக்கினை நோக்கி பதிலளித்த சிம்பாப்வே அணி வீரர்கள் சீரான இடைவெளியில் விக்கெட்டுக்களை இழந்தமையால் அவர்களால் 40.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 204 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது. துடுப்பாட்டத்தில் அணித் தலைவரான கிரேக் எர்வின் 51 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். பந்துவீச்சில் சைம் ஐயூப், அப்ரார், ரௌப் மற்றும் அமீர் ஜமால் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகள் வீதம் கைப்பற்றினர்.

இதனால் இப்போட்டியின் 99 ஓட்டங்களால் பாகிஸ்தான் அணி வெற்றி பெற்று 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 2:1 என தன் வசப்படுத்திக் கொண்டது. இப்போட்டியின் நாயகனாக கம்ரான் குலாமும், இத் தொடரின் நாயகனாக சைம் ஐயூபும் தெரிவாகினர்.

மேலும் இவ்விரு அணிகளுக்கும் இடையிலான 3 போட்டிகள் கொண்ட ரி20 தொடரின் முதல் போட்டி இன்று இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. அப்போட்டியில் பாகிஸ்தான் அணியை சல்மான் அலி அஹா வழிநடாத்துகின்றமை குறிப்பிடத்தக்கது

# நூறைக் கடந்தார் பிரபாத் ஜெயசூரிய



சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட் அரங்கில் குறைந்த போட்டிகளில் 100 விக்கெட்டுக்களை வீழ்த்திய வீரர்கள் வரிசையில் 5ஆம் இடத்தையும், இலங்கை வீரர்கள் வரிசையில் முதலாம் இடத்தையும் தனதாக்கினார் இடதுகை சுழல்பந்து வீச்சாளர்களான பிரபாத் ஜெயசூரிய.

இலங்கை அணியின் இடதுகை சுழல்பந்து வீச்சாளர்களான பிரபாத் ஜெயசூரிய சமீப காலமாக இலங்கை அணியின் டெஸ்ட் வெற்றிக்கு மிகப்பெரிய பங்கினை ஆற்றி வருகின்றார். அதற்கேற்ப இலங்கை அணி தற்சமயம் தென்னாப்பிரிக்கா சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்றுள்ளது. அதில் கடந்த 27ஆம் திகதி ஆரம்பித்த முதல் டெஸ்ட் போட்டியில் தென்னாப்பிரிக்கா அணி முதல் இன்னிங்சில் 191 ஓட்டங்களுக்குள் சுருண்டது. அதில் பிரபாத் ஜெயசூரிய 2 விக்கெட்டுகளை வீழ்த்த அவரின் மொத்த விக்கெட்டுக்களின் எண்ணிக்கு 99 ஆக மாறியது.

இந்நிலையில் இப் போட்டியில் தென்னாப்பிரிக்க அணி தமது 2ஆவது இன்னிங்ஸை ஆரம்பித்திருக்க அவ் அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரரான டொனி டி ஷொர்சியின் விக்கெட்டை பிரபாத் ஜெயசூரிய கைப்பற்றிக் கொள்ள சர்வதேச டெஸ்ட் அரங்கில் பிரபாத் ஜெயசூரிய 32ஆவது சர்வதேச டெஸ்ட் போட்டியில் தனது 100ஆவது விக்கெட்டை கைப்பற்றினார். இதனால் உலக டெஸ்ட் அரங்கில் குறைந்த போட்டிகளில் 100 விக்கெட்டுக்களை வீழ்த்திய வீரர்கள் வரிசையில் 5ஆம் இடத்தைப் பிடித்துக் கொண்டார்.

மேலும் இலங்கைப் பந்துவீச்சாளர்களில் மிகக் குறைந்த போட்டியில் 100 விக்கெட்டுகளை வீழ்த்தி அப்பட்டியலில் முதல் இடத்தினைப் பெற்றுக் கொண்டார். மேலும் 33 வயதான பிரபாத் ஜெயசூரிய இதுவரையில் பத்து விக்கெட்டுக்கள் பிரதியை 2 முறையும், 5 விக்கெட்டுக்கள் பிரதியை 9 முறையும் கைப்பற்றி அசத்தியுள்ளார். மேலும் இவரது மிகச் சிறந்த பந்துவீச்சும் பிரதியாக 52 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுக்கள் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மோசமான துடுப்பாட்டத்தால் தென்னாபிரிக்காவிடம் தோற்றது இலங்கை



டேர்பனில் இடம்பெற்ற முதல் டெஸ்ட் போட்டியில் 233 ஓட்டங்களால் இலங்கை அணியை வீழ்த்திய தென்னாப்பிரிக்கா அணி உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தரப்படுத்தலில் 2ஆம் இடத்திற்கு முன்னேறியது. இத் தோல்வியால் 3 ஆம் இடத்திலிருந்த இலங்கை அணி 5ஆம் இடத்திற்கு கீழிறங்கியது.

சுற்றுலா இலங்கை அணிக்கும் தென்னாப்பிரிக்க அணிக்கும் இடையேயான 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் போட்டி கடந்த 27ஆம் திகதி டேர்பனின் ஆரம்பித்திருந்தது. இப் போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி களத்தடுப்பை தேர்வு செய்தது.

அதன்படி முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய தென்னாப்பிரிக்க அணி அணித் தலைவரான பவுமாவின் பெறுப்பான 70 ஓட்டங்களில் உதவியுடன் 190 ஓட்டங்களுக்கு சகல விக்கட்டுக்களையும் இழந்தது. பந்துவீச்சில் அஷித பெர்ணாண்டோ மற்றும் லஹிரு குமார ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

பின்னர் தமது முதல் இன்னிங்ஸை தொடங்கிய இலங்கை அணி வீரர்கள் தென்னாப்பிரிக்க இளம் இடதுகை வேகப்பந்து வீச்சாளரான மார்கோ ஜென்ஸ னின் வேகத்தில் நிலைக்கத்தவறி வந்த வேகத்தில் பெவிலியன் நடந்தனர். வெறுமனே 13.5 ஓவர்களுக்கு மாத்திரம் முகம் கொடுத்து இலங்கை டெஸ்ட் வரலாற்றில் மிகக் குறைந்த ஓட்டங்கள் என்ற மோசமான சாதனையை பதிவு செய்து 42 ஓட்டங்களுக்கு சகல விக்கட்டுக்களையும் பறிகொடுத்தது. துடுப்பாட்டத்தில் கமிந்து மென்டிஸ் 13 ஓட்டங்களையும், லஹிரு குமார 10 ஓட்டங்களையும் பெற மற்றைய 9 வீரர்களில் 5 வீரர்கள் ஓட்டமின்றி ஆட்டமிழக்க ஏனையோர் ஒற்றை இலக்கத்துடன் நடையைக் கட்டியிருந்தனர். பந்து வீச்சில் மார்கோ ஜென்ஸன் 7 விக்கெட்டுகளை அள்ளிச் சுருட்டினார்.

பின்னர் 148 ஓட்டங்கள் முதல் இன்னிங்ஸ் முன்னிலையுடன் தமது 2ஆவது இன்னிங்ஸை ஆடிய தென்னாப்பிரிக்க அணிக்கு இளம் வீரரான ஸ்டெப்ஸ் சதம் கடந்து 122 ஓட்டங்களையும், பவுமா சதம் கடந்து 113 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுக்க 5 விக்கெட்டுகளை இழந்து 366 ஓட்டங்களைப் பெற்றிருக்க இன்னிங்ஸை முடித்துக் கொண்டது. பந்துவீச்சில் விஷ்வ மற்றும் பிரபாத் ஜெயசூரிய ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர் .

இதனால் தென்னாப்பிரிக்க அணியால் நிர்ணயிக்கப்பட்ட 516 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கினை நோக்கி தமது 2ஆவது இன்னிங்ஸை ஆரம்பித்த இலங்கை அணி 282 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 233 ஓட்டங்களால் தோற்றுப் போனது. துடுப்பாட்டத்தில் சந்திமால் 83 ஓட்டங்களையும் , தனஞ்சய டி சில்வா 59 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் மார்கோ ஜென்ஸன் 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இந்த வெற்றியினால் தென்னாப்பிரிக்க அணி 2 போட்டிகள் கொண்ட தொடரில் 1:0 என முன்னிலை பெற்றதுடன் , உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தரப்படுத்தலில் 5ஆம் இடத்திலிருந்து 2ஆம் இடத்திற்கு முன்னேறியது. இதனால் அவ் அணியின் டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்கான வாய்ப்பு சற்று பிரகாசமாகியுள்ளது. மேலும் இப்போட்டியில் மோசமான துடுப்பாட்டத்தினால் தாற்றுப் போன இலங்கை அணி புள்ளிப் பட்டியலில் 3ஆம் இடத்திலிருந்து 5ஆம் இடத்திற்கு கீழிறங்கியதுடன், டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்கான வாய்ப்பையும் கேள்விக்குறியாக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இளையோர் ஆசியக் கிண்ணம் ஷாருஜனின் அசத்தலால் இலங்கைக்கு வெற்றி

19 வயதிற்குட்பட்ட ஆண்களுக்கான ஆசியக் கிண்ண தொடரின் குழு பி இதற்கான முதல் போட்டியில் ஷாருஜன் சன்முகநாதனின் அரைச்சதம் கடந்த துடுப்பாட்டத்தின் உதவியுடன் 55 ஓட்டங்களால் நேபாளம் அணியை வீழ்த்தியது இலங்கை அணி.

ஆண்களுக்கான 19 வயதிற்குட்பட்ட ஆசியக்கிண்ண ஒருநாள் தொடர் நேற்று முன்தினம் ஐக்கிய அரபு இராச்சியத்தில் ஆரம்பித்திருந்தது. இதில் 8 அணிகள் பங்கேற்றிருக்க அவ் 8 அணிகளும் ஒரு குழுவில் 4 அணிகள் வீதம் இரு குழுக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய குழு ஏ இல் பாகிஸ்தான், இந்தியா, ஜப்பான் மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் ஆகிய அணிகளும், குழு பி இல் இலங்கை , நேபாள், பங்களாதேஷ் மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய அணிகளும் இடம்பெற்றுள்ளன.

அதற்கேற்ப குழு பி இன் முதல் போட்டி நேற்று முன்தினம் இலங்கை 19 வயதிற்குட்பட்ட அணிக்கும், நேபாளம் 19 வயதிற்குட்பட்ட அணிக்கும் இடையில் சார்ஜாவில் இடம்பெற்றது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற நேபாள் அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது அதற்கேற்ப முதலில் துடுப்பாடிய இலங்கை அணிக்கு 3ஆம் இலக்க துடுப்பாட்ட வீரரான ஷாருஜன் சன்முகநாதனின் பொறுப்பான 62 ஓட்டங்களும் , லக்வினின் 50 ஓட்டங்களும் வலுச்சேர்க்க 50 ஓவர்களில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 233 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. பந்துவீச்சில் சந்தோஷ் யாதவ் 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பின்னர் 234 என்ற சவாலான வெற்றி இலக்கினை நோக்கி பதிலுக்கு துடுப்பாடிய நேபாள் அணியால் 46.2 ஓவர்களில் சகல விக்கட்டுக்களையும் பறிகொடுத்து 178 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது. துடுப்பாட்டத்தில் மயன் யாதேவ் 62 ஓட்டங்களை பெற்றார். பந்துவீச்சில் பிரவீன் மனீஷ 3 விக்கெட்டுகளை கைப்பற்றினார். இதனால் இலங்கை அணி 55 ஓட்டங்களால் வெற்றி பெற்று புள்ளிப் பட்டியலில் முதலிடம் பிடித்தமை குறிப்பிடத்தக்கது.



இப் பத்திரிகையானது (மின்னிதழ்) Moon Media Network நிறுவனத்தினால் 41/2, விஜித வீதி, நதிமால, தெஹிவளை எனும் முகவரியில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.